


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"
போராளிகள்,
தனிமனிதர்கள் அல்ல, அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள் ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நினைவுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக் கொண்டேயிருக்கும். மாவீரர்களின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்றும் நெருப்புக் கிடங்குகள் ஆகும்.
"

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்




Tamileelam Archive

# சூரியப் புதல்வர்கள்



2004

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உயிரினை உருக்கிய உள்ளொளிப் பிழம்பாய்.
ஊரில் உலாவிய உறவெனும் அன்பாய்.
போர் முகம் ஏகிய வீரத்தின் பண்பாய்.
விடுதலைக் கேங்கிய இரத்தின் தென்பாய்.
வாழ்ந்தவர் அவரே
விடுதலை வாழ்வின் ஏரவாறாகினர்.




# மாவீரர் நாள் 2004

## நவம்பர் 27

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சிந்திய குருதியால் நனைந்த பாதையில்
நடக்கிறது பயணம்.
இலக்கு புனிதமானது.





தமிழீழப் போராட்டமானது சர்வதேச அரங்கில் புதிய பரிமாணத்துடன் விளங்குகிறது. எமது இராசதந்திர நடவடிக்கைகள் வெளிநாடுகள் வரை சென்றுள்ளன. இது எமக்கு கிடைத்த அங்கீகாரத்தின் முக்கிய பகுதியாகும். ஈழத்தமிழர்களின் நிர்வாகக் கட்டமைப்பு வளர்ச்சி தமிழீழத் தனியரசை நிர்வகிக்கும் தகுதியை எமக்கு தந்துள்ளது. சட்டம் ஒழுங்கைப் பேணுவதிலும், நீதி பரிபாலனம் செய்வதிலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் புலிகள் நிகரற்று விளங்குகின்றனர்.

ஒரே ஆட்புலத்தில் இருவகை அரச நிர்வாகம் இருப்பதைச் சமாந்தர அரசுகள் என்ற சொற்களால் குறிப்பிடுகிறார்கள். இதற்கு உதாரணமாக எமது நிர்வாகக் கட்டமைப்பு இடம்பெறுகிறது. ஒப்பீட்டில் எமது நிர்வாகம் சிறீலங்காவினதிலும் பார்க்க பல விதத்திலும் உயர்வானது. சமூக சேவைகள், சிறுவர் நலன் பேணுதல், பெண் உரிமை, முதியோர் பராமரிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற இன்னோரன்ன சேவைகளில் தமிழீழ நிர்வாகம் அதியுச்ச வளர்ச்சி பெற்றுள்ளது.

Tamileelam Archive

இத்தகைய முன்னேற்றங்களிற்கு எமது மாவீரர்கள் பொறுப்பாவார்கள் என்பதில் ஐயமில்லை. இவர்களுடைய ஈகம் எமது நிர்வாகம், அரசியல், இராசதந்திரம், இராணுவபலம் என்பனவற்றிற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. எமது தாயகத்தின் காவலர்களாகவும் தாயகத்தின் நீடித்த இருப்புக்கு காரணமானவர்களாகவும் மாவீரர்கள் இடம்பெறுகின்றனர். இவர்கள் செய்த உயிர்த் தியாகம் எம்மையும் எமது தாயகத்தையும் வாழ்விக்கின்றது. எமது இனத்தின் பலம் உறுதிப்பாடு அர்ப்பணிப்பு என்பனவற்றின் மொத்த வடிவமாக மாவீரர்கள் திகழ்கின்றனர்.

எமது கௌரவமான சுதந்திரமான வாழ்விற்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து குப்பிகடித்தும், குண்டேந்தியும், பட்டினி கிடந்தும், வெடிகுண்டாகியும், கடலின் மடியில் மறைந்தும் சாவிலும் சரித்திரம் படைத்த மாவீரர்களின் கனவினை வென்றெடுக்க நாம் அனைவரும் அவர்களின் இலட்சியப்பாதையில் அணிதிரள்வதற்கான காலம் இது என்பது வெளிப்படை.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**



"எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை.
அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக
உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது."





அன்றைய தமிழர் இராச்சியம் வீழ்ச்சியடைந்து, பல நூறு ஆண்டுகள் அந்நியருக்கும், அயலவருக்கும், அடிமைப்பட்டு வாழ்ந்த தமிழீழ தேசம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. இன்று எமது தாயகத்தின் பெருநிலப் பரப்பில் எமது தன்னாட்சி நடைபெறுகிறது. ஒரு நீண்ட, துயரமான, கொடூரமான வரலாற்று இடைவெளியின் பின்பு, மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச் சின்னமாக, தமிழர் மண்ணிற் புலிக்கொடி பட்டொளிவீசிப் பறக்கிறது. இந்த மாபெரும் வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமிதத்துடன் இன்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாதவாறு இன்று உலக மயமாகியுள்ளது. பல தசாப்தங்களாகப் பாராமுகம் காட்டி வந்த உலகம் இன்று தனது முழுக் கவனத்தையும் எமது போராட்டத்தின் மீது திருப்பியுள்ளது. ஒரு பலம் வாய்ந்த விடுதலைப் போராட்ட சக்தியாக இன்று உலகரங்கில் நாம் முன்னணி வகித்து நிற்கின்றோம். தர்மத்தின் வழி தழுவி, ஒரு சத்திய இலட்சியத்திற்காகச் செய்யப்படும் தியாகங்கள் என்றுமே வீண்போவதில்லை. எமது தேசத்தின் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை ஒப்பற்றது. உலக விடுதலை வரலாற்றில் நிகரற்றது. இந்த அளப்பரிய ஈகத்தின் ஆன்மீக சக்தி இன்று உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கிவிட்டிருக்கிறது. எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சாதி, மதம், வர்க்கம் என்ற வேறுபாடுகளுக்கப்பால், ஒரு விடுதலை இயக்கத்தின் கீழ், ஒரு விடுதலை இலட்சியத்தின் கீழ், ஒன்றுபட்ட சமூகமாக எமது மக்கள் இன்று அணிதிரண்டு நிற்கிறார்கள். வீரம் செறிந்த எமது விடுதலைப் போராட்டமும் அந்த விடுதலைப் போராட்டத்தில் எமது போராளிகள் ஈட்டிய அபாரமான சாதனைகளும் அவர்கள் புரிந்த அற்புதமான தியாகங்களுமே எமது மக்களை எழுச்சியூட்டி, உணர்வூட்டி ஒரே அணியில், ஒரே இனமாக, ஒரே தேசமாக ஒன்றுதிரள வைத்திருக்கின்றன. எமது மாவீரர்களின் மகத்தான தியாகங்களும் அர்ப்பணிப்புகளுமே எமது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஆதாரசக்தியாக விளங்குகின்றன.

2003 ஆம் ஆண்டு
தமிழீழ மாவீரர்நாளை முன்னிட்டு
தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




கனவில் ஆடிடும் கனலாய்
மூலக் கனவின் நிழலில்
பூக்களின் வடிவாய்..


உயிரினை உருக்கிய உள்ளொளிப் பிளம்பாய்..
ஊரில் உலாவிய உறவெனும் அன்பாய்..
போர் முகம் ஏகிய வீரத்தின் பண்பாய்..
விடுதலைக் கேங்கிய இனத்தின் தென்பாய்..
வாழ்ந்தவர் அவரே
விடுதலை வாழ்வின் வரலாறாகினர்.

ஆதியாகி அந்தமுமாகி
அடி முடி தோன்றா அற்புதமாகி
சகைப் பண்பின் இலக்கணமாகி.
பிறந்தும் இறந்தும் போனபின்னாலே
மறையா இருப்புடன் மக்களின் மனங்களில்
நிறைவாய் நினைவில் நிறைந்தவர் அவரே
விடுதலை வேள்வியின் திருமறை ஆகினர்.

சாவைத் தின்று
சரித்திரம் சாத்த
இனத்தில் தோன்றிய நீலகண்டர்கள்..
இனத்தின் இருப்பில் எழுந்த தவிப்பில்
சாவின் கைபிடித்த சரித்திர நாயகர்கள்..
போற்றித் தொழுதலுக்கும்
அவர் வழி ஏற்றுச் செய்வதற்கும்
விதிசெய்து சென்ற
கடவுளைக் கடந்தொரு கருப்பொருள் ஆகினர்.

வீரிய நிலத்தின் மானப் பயிர்கள்
வீழ்ந்த இனத்தின் நம்பிக்கைத் துளிர்கள்
வானக் கருமைமையை வகிர்ந்து கிழித்து
பூமியின் முகத்தில் மகிழ்வைத் தூவிய
ஆதவக் கதிர்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



பாழ் இருள்போக்க.. பகலவன்.. திசையினில்
பாதம் பதித்த சூரியக் குழந்தைகள்..
விடுதலை வானில்.. அணையா விளக்கென ஆகினர்.

விடுதலை விருட்சம் சாய்ந்துவிடாமல்
உயிரை ஊன்றிய விழுதுகள்.
ஆழப்புதைத்த வேர்களை நனைத்து
ஈரம் காக்கும்
நிலத்தடி நீரின் சுரப்பிகள் அவரே.

விடுதலைச் சக்கரம் சுழன்று நகர
விசையாய்.. அச்சாய்..
விசையுறும் திசையாய்..
அனைத்துமானவர் அவரே.. அவரே..
காலம் கனிந்து..
அதிசயக் காட்சிகள் நிகழும் பொழுதின்
அடிப்படை அவரே..
மூடிய கதவுகள் திறந்திருப்பதும்.
சபைகள்.. கைநீட்டி வரவேற்பதும்..
மறுத்த செவிகள்.. எமது குரலை கேட்க நினைப்பதும்
விறைத்த முகங்கள் முறுவல் பூசி
உறவின் கையை நீட்ட விழைவதும்..
இது..
எமது வீரரின் இறுதி மூச்சில்
எழுந்த புயலால் தோன்றிய ஒழுங்கு..
ஆயிரம் ஆயிரம் மாவீர விதைப்பின்
அறுவடை...

சிந்திய குருதியால் நனைந்த பாதையில்
நடக்கிறது பயணம்.
இலக்கு புனிதமானது.




ஜெயா

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நினைவின் வலிகள்

அம்புலி
(உதயலட்சுமி)



புல்நுனி ஈரத் தொடுகையில்
புலர்ந்தும் புலராத வைகறையில்
அலையெறிக்கும் கடல்வெளியில்
அனல் தெறிக்கும் பகற் பயணிப்பில்
துளிர்க்கின்றது உங்கள் நினைவு.
பழையன வாய்க் காணும்
பாதை நெடுகிலும்
உங்களுடன் திரிந்த
நினைவுகளின் கொப்பளிப்பு

தூரங்கள் தாண்டிப்
பயணம் ஒன்றுக்காய்
அருகுவந்த சொந்தமானீர்.
உறவுகளின் பிரிவு வலியை
உயிர் நீவி ஆற்றிய விரல்களானீர்.

பதுங்ககழி விழித்திருக்கும் இரவுகளில்
எறிகணை மழை பொழியும் கோடைகளில்
நுளம்புகளின் சங்கீதம் சகிக்கமுடியாத
பொழுதுகளில்
நிலவின் நிழல் வருடிய
நிம்மதிக் கணங்களில்
உம் இதயங்களின் கதை படித்தோம்.
உம் கனவுகளின் ஆழத்தைக்
கணக்கிட்டோம்.
இன்று எல்லாம் மௌனமாய்ப் போயிற்று.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive







மொழி வழி தெறிக்கமுடியாது
அமுங்கிக் கனல்கிறது
நினைவுப் பிழம்பு.


முன்னெரியும் சுடரிலிருந்து பெரிதாகி
வானைத் தொட விரிகிறது
உங்களின் விம்பம்
உயிர் உருகும் துயில் நிலப்
பாடலுக்குள் கரைந்து
காணாமல் போகிறோம் இங்கெல்லாரும்.

உள்ளிருந்து வருவீர்களா?
உயிர் பெற்று உலவுவீர்களா?
புன்னகைப் பூச் சொரிந்து மறைவீர்களா?
மூடியவிழிகளுள் தேடுகின்றோம் — பின்
தீயெரிக்கும் நினைவுகளுடன் திரும்புகின்றோம்.

பற்றி நிற்கும் எம் கரத்திற்
துப்பாக்கிகளல்ல — உம்
துடிப்புகளே உண்டு.
நீங்கள் நடந்த கள வெளிகளில்
நீங்கள் பயணித்த
இடர்களை அடர்ந்த பாதைகளில்
உங்கள் கனவுகளைக்
கண்களுள் தேக்கிக் கொண்டு
நீங்கள் தொடமுயன்ற
தேசத்தின் விடியலை நோக்கி
இதோ நாம் புறப்பட்டு விட்டோம்.
என்றோ ஒருநாள்
விடியத்தான் வேண்டும்
எம்மிரவுகள்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





# வீடுகளில் இறங்கிய மழை

கறுத்த மேகக் கூட்டங்கள்
நறுமணம் மிக்க
ஈரமான மலர்களைக் காவிய படி
பாயும் ஒளி கொண்ட
அவர்களின் வீடுகளை நோக்கிப் படையெடுக்கின்றன.
வீரர்களினது வியர்வைத் துளிகளையும்
குருதியாற்றையும்
கண்ணீர் நதியையும் கனவுகளையும்
பருகிய பெருமழை
தாகம் தீரக் கரைந்து கொண்டிருக்கின்றது.
கறுத்த பிரமாண்டமான
பல்லாயிரம் நரம்புகள் கொண்ட
வாத்தியக் கலைஞர்களோடு
அவர்களின்
ஆன்ம கீதமிசையும் வீடுகளின் முன்னே
எதிரிகளைத் தோற்கடித்த
பாடலைப் பாடிக்கொண்டிருக்கின்றது.
செம்மண் தரைகள் எங்கும்
தோணிகளைப் போன்று எழும்பிய வீடுகளில்
வீழ்ந்து புரண்டெழுந்து பாய்கின்றது
அடிமைப்பட்ட மக்களின் விடுதலைக்காக
வாழ்ந்து கொண்டிருக்கும் வீரரின் நினைவுகள்
மூண்டெரிகின்றது.
அலைவாய்ப்பட்ட மக்கள் ஒரு நாள்
துறை சேரத் தோணிகள் பாய்விரிக்கின்றன
நாளும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



கவிதைகள்
தா.பாலகணேசன்



## தீ கிழித்துச் சடைத்தகாடு

ஒளியின் விதை வீழ்ந்து
தீக் கொழுந்தெரிய
மண்ணில் சடைத்துத் தளைக்கிறது
அகனுச்சியில் நின்று
விடியலுக்கான பறையறையும்
சிறகுகளுடன்
செகப்புக் கொண்டைச்சேவல்கள்
வானமுகட்டை உசுப்புகிறது
வண்ணக் குழம்பில் தோய்ந்த
கதிரம்புகள்
கூனல் முதுகுகளில் தைக்கிறது
பாலை படரும் மேனியுற்ற
மக்களுக்கான விசும்பல்
இசையாய் சடைத்தோங்குகிறது
ஒளிப்பூக்களின் மகரந்தங்களை
வானப்பரப்பெங்கும்
காற்று விதைக்கிறது
ஒளிர்ந்தோரின் ரூபங்களையே
ஓயாமல் மூசும்
தீ கிழித்துச் சடைத்தகாடு.



## கூடுகளில் எரியும் பண்

'இருள் பூசிய' கானகங்களின் சிறகுகளுக்குள்
வெறுமை தட்டியிருக்கது,
அவிழ்க்க முடியாத
அதன் இரகசியங்களின் தொலைவில்
சிறகு விரித்துப் பறந்த
விடுதலைக் குருவிகள்
கோதியுடைத்த தடித்த கடுமைகண்டிருந்த
இருளின் கோதுகள் உப்பு வெளியெங்கும்
சிதறிக் கிடந்தன.
வீரர்களுக்கு உற்ற துணையாய் நின்று
இசை மீட்டுகின்ற கருவிகளாய்ப்
பறக்கும் மரக்கிளைகளில்
சூரியன் அடுக்கிய கல்விசுளியான கூடுகளில்
அவர்கள் எமக்காக விட்டுச் சென்ற
பறப்புப் பற்றிய பண்ணெரிகிறது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தாயே உனக்காக.....

**நா**ன் போகவேண்டிய வேளை வந்துவிட்டது.

நான் போய் வருகிறேன் அம்மா....

உதயத்து மங்கிய சருயிர் நேற்றுவரை உன்னுடன் கட்டிலில் படுத்திருந்த உனது குழந்தையை (அவன் இன்னமும் உன்னுடன் படுத்திருக்கிறான் என்ற நினைப்பில்) நோக்கி நீ கைகளை நீட்டும்போது 'உன்னுடைய குழந்தை அங்கே இல்லை' என்று நான் கூறுவேன். அம்மா நான் போய் வருகிறேன்.

மெல்லிய காற்றின் அலையாய் வந்து நான் உன்னைத் தழுவினேன். நீ குளிக்கும்போது நீர்த்துளிகளாக நான் மாறி உன்னை மீண்டும் மீண்டும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முத்தமிடுவேன்.

கார்கால இருளில் மழைத்துளிகள் இலைகளின்மேல் விழும்போது கட்டிலில் உறக்கமின்றிப் படுத்திருக்கும் உன்னுடைய காதுகளில் என்னுடைய குரல் மெதுவாக ஒலிக்கும்.

திறந்த ஜன்னலூடாக உன்னுடைய அறைக்குள் பாயும் மின்னலின் ஒளியோடு வந்து என்னுடைய சிரிப்பும் உன்னை வந்தடையும்.

என்னை நினைத்துக்கொண்டு நீ தூங்காது படுத்துக்கொண்டிருக்கையில் வானத்து நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே இருந்துகொண்டு 'தூங்கு அம்மா தூங்கு' என்று நான் கூறுவேன்.

சந்திரனின் ஒளிக்கீற்றுக்களினூடே நான் உன்னுடைய கட்டிலை அடைந்து தூங்கிக் கொண்டிருக்கும் உன் மார்பின்மேல் தலைவைத்துப் படுத்திருப்பேன்.

நான் ஒரு கனவாக உன்னுடைய கண்ணிமைகளின் சிறிய இடைவெளியினூடாக உனது உறக்கத்தின் ஆழத்திற்குச் சென்றுவிடுவேன். நீ நித்திரை விட்டெழுந்து பரபரப்புடன் எழும்போது ஒரு மின்மினிப்பூச்சி போல் நான் வெளியே இருட்டிற்குள் தாவி மறைந்து விடுவேன்.

பூஜைக் காலங்களில் அயலவர்களின் பிள்ளைகள் எங்களுடைய வீட்டில் விளையாடிக்கொண்டிருக்கும்போது புல்லாங்குழலின் ஓசையினூடாக நான் வந்து உன்னுடைய இதயம் முழுவதும் பரவி நிற்பேன்.

பக்கத்து வீட்டு மாமி பிரசாதங்களுடன் வந்து 'குழந்தை எங்கே' என்று கேட்டால் என்னுடைய செல்வன் என்னுடைய கண்மணிகளிலும் சரீரம் முழுவதிலும் நிறைந்து நிற்கிறான்' என்று மெதுவாக அவளிடம் கூறு.


கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்

## கவலை விடுமினே
## விடுதலை தினம்



ஆதவன் நகைத்தனன் கீழ்திசையிலே
ஒளிபுனல் வார்த்துக் கண் சிமிட்டினான்
கூரிருள் அகன்றது.
உதயம் செம்மைவானிலே படர்ந்தது.
வேலையீதென்றே மக்களும் மண்ணில் ஆர்த்துப் பாடினர்
காலம் மெல்ல நகர்ந்தது.
காசினியும் புதுமை கொண்டுமே திகழ்ந்தது.
நாளை நாளை விடுதலை என்றுமே நாதம் பிறந்தது.

நாதம் ஒன்று பிறந்ததும் நாளும் ஓடி
வளர்ந்ததும் மெல்லத் தமிழினி புவியிசை
சிறந்திடும் என்றதும் ஆவி குன்றித் தேய்வதோ?
அவலம் கொண்டுமே உழல்வதோ?
தாவிப்படரும் நெருப்பாயினோம் – தமிழச் நாம்
கூவல் விடுத்துமே குதியில் நேயமாயினோம்
பாதை ஒன்று தெரியுது.
பாதம் நகர்ந்து போகுது.
ஒளிபுனல் நாடியே வீரர் விரையலாயினர்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# மண்ணின் காதல்

என் இதயம் மண்ணை நேசிக்கிறது
மண்ணின் மடியில்
விடியலுக்காய் வீழ்ந்தவர்
உறங்கிடும் கல்லறைகளை
காணும் போதெல்லாம்
கண்கள் வானத்தில் மின்னிடும்
நட்சத்திரங்களை போல
பிரகாசமடைகின்றன.
புனிதமானவர்களின்
பிஞ்சுபாதங்கள் நடந்த
சாலைகளில் பயணிக்கும்
எனது பாதங்களும்
வீரியமடைகின்றன.

தாலாட்டு பாடல்களிலும்
விழிகள் தூங்கமறுக்கின்றன,
சுதந்திரக் காற்றை சுவாசித்தபின்பே
தூங்க நினைக்கின்றன.
இளமையின் நினைவெல்லாம்
மண்ணிலேயே சுழல்கிறது.
கார்மேகம் திரையுருகி
கவிகின்ற பெரும் நீரில்
பங்கர்களின் நீரின் சலசலப்பையும்
சாக்குத் தொப்பிகளிலிருந்து
சொட்டும் நீர்துளிகளையும்
மண்ணின் பரந்த வெளிகளையும்
என்னுள் நேசிக்கிறேன்.
வாடைக்காற்றின் கடும் குளிரிலும்
கண்ணி வெடிகளையே
கவசமாகப் போர்த்தியுள்ளேன்.
வளம் பெறும் வாழ்வியலுக்கான
போர்க்களங்களில் வீழ்ந்த
தோழர்கள் தோள்களில் சுமந்த
துப்பாக்கிகளை
நெஞ்சில் இறுக அணைத்த வண்ணம்
உன்னையே காதலிக்கிறேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தீபங்களின் திருநாள்

செந்தோழன்

ஆலயமணி
விடுதலையின்
எழுச்சி ஓசையாய்
ஒலிக்கும்

அகங்களெல்லாம்
அகத்திலுள்ளோரை
நினைத்துப் பூசிக்கும்

தீபங்களுள்
தீபங்களின் முகங்கள்
தெரியும்

இரும்பிலும்
உறுதியான இதயம்
இழகிக் கசியும்

சூரியன்
மறையும் வேளை
சூரியர்களுக்காய்
வழிபாடு நடக்கும்

உறங்குமிடமெங்கும்
உறுதிப்பாடலிசைக்கும்

உறவின் நினைவு
உயிரை உருக்கும்
உயிரை
வெறுத்தோர்
கனவை நினைக்கும்

இருளில் ஒளிரும்
ஒளியின் சுடரில்
அகலும் இருளின்
வழிகள் தெரியும்.





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அது ஒரு கார்த்திகை
அற்புதங்களின் பொற்பதங்களைப்
போற்றுகின்ற நாள்.
அருகிருந்த தோழியர்கள் அடுத்தடுத்து
விழி மூடியபின் — அவர்களைத்
துயிலுமில்ல வாசல் சென்று
தோள் சுமக்க நேரமின்றி
விழி துடைத்து அனுப்பி விட்டு
நினைவுகளை மட்டுமே
நெஞ்சத்தில் சுமந்தபடி
நிற்கின்ற போதினிலே

வந்தது அந்த நாள்.
விழியுயர்ந்து நடைப்பிணமாய் ஆன தமிழர்
வெல்லும் வழியறிந்து
நிமிரச் செய்த மகத்தான நாள்

கூட இருந்து குறும்புகளைச் செய்து
பாடிக்களித்து பக்குவமாய் சண்டையிட்டு
வாடிப்போகாத வரலாறாகி உறங்குகின்றனர்.
வீழ்ந்த ஒரு தோழி விசுவமடு இல்லத்தில்
அடுத்தவளோ ஆலங்குளத்தில்
இன்னும் பலர் எங்கெங்கோ
உறங்கிக் கொள்ள
யாரிடமும் போக முடியாதபடி
போர் எம்முடன் இருந்தது.

கிடைத்த நாள்களிலே பூக்களை வரைந்தோம்.
கிடைத்த பூக்களை அருகினில் சொரிந்தோம்.
படைத்தோம் எம் உறுதியை
அவர்கள் கைபிடித்த சுடுகருவிகளை
அருகினில் வைத்தோம்.
உள்ளத்தைக் கடந்து
உறவைக் கடந்து
தாய் மண்ணின் விடிவே கொள்கையென
விழிமூடிக் கொண்ட வீரர்கள்
கடலிலும் தரையிலும்
கரும்புலியாய் வெடித்தவர்கள்.
யாரும் படாத துயர் பட்டபோதும்
இலக்கினை வென்றே
இவைகளை மூடியோரும்
தலைவன் சொல்லும் திசைவழி சென்று
வென்றவரும்
வென்றபின்னும் யாருமறியாது போனவருமாய்
எங்கள் கடவுள்கள்——
நினைக்கையிலே அவள் நெஞ்சம் கனத்தது.
பெருமூச்சொன்று புறப்பட்டது.
அப்போது
சுற்றி வளர்ந்திருந்த நித்தியகல்யாணிப்
பூக்களை
எப்படி எட்டிப் பிடுங்கிக்கொண்டிருந்தது
அந்தப் பூ.



# அற்புதங்களின் பொற்பதங்களைப் போற்றுகின்ற நாள்



# நிலையான உதயத்தைத் தேடி

ஒவ்வொரு காலையும்
புலர்ந்து கொள்ளும்.
பூக்கள் புதிதாய் விரியும்.
சீக்கிரமே பொற்கதிர் பரப்பி
எழுவான் இளஞ்சூரியன்.
தூரத்தில் எங்கேனும்
மெல்லிதாய் கேட்கும் கோயில்மணி.
எல்லைக் காப்பரண்கள்
எப்போதும் விழித்திருக்கும்.



சொல்லாமற் கொள்ளாமல் சடசடக்கும்
எதிரியின் துப்பாக்கி – சிலவேளை எம்
எல்லை தாண்டி எதிரியும் வரக்கூடும்.
காவலரண் தாண்டி வருவோரின்
கதை முடிக்க
கண்ணிகளை விதைத்தபடி
விழித்திருக்கும் அணியொன்று.
எம் காவல்வேலி தாண்ட வெளிக்கிட்ட
உனக்குச்
சாவென்று சொன்னபடி
காவல் உலாப்போகும் இன்னோர் அணி.

முன்னரங்க நிலைகளுக்கும்
முன்னாலே நின்று — பகை
முன்னேற நினைத்திட்டால்
எரிகணை கொண்டு கொன்று விட
எந்நேரமும் நிற்கும் அடுத்தஅணி
வாழ்வின் எந்தக் கணத்திலும் ஓய்வின்றி
பகை வென்று
சாகும் கணம் வரையும்
பல்லாயிரங்களுக்கும் அப்பால்
அணியாக உறங்கிவர்கள்
எங்கள் தேசக்குழந்தைகள்.
இவர்களின் இலட்சியத்தை
இறுகப் பற்றியபடி
இறுதிப் பயணத்தில் நாம்
நிலையான
உதயத்தைத் தேடி.

செ.புரட்சிகா
கவிதைகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# சுகப்படுத்த முடியாத காயம்

பாலஸ்தீனக் கவிதை

சென்று திரும்பா எம் அண்ணனின் கதையை
எமது மண்ணில்
துயருடன் நாம் கூறுகின்றோம்

அவனது பெயர்-----------
அவனது பெயரைக் குறிப்பிட வேண்டாம்
எம்மிதயங்களில் அச்சொல்
புனிதமாய் இருக்கட்டும்
சாம்பலைப் போல் காற்று அதனையும்
அள்ளிச் செல்ல விட வேண்டாம்.
சுகப்படுத்த முடியாத ஒரு காயமாக
அதனை எங்கள் இதயத்தில் இருத்துவோம்
அன்புள்ளோரே, அனாதைகளே
நாம் விசாரப்படுகிறோம்
அநேகப் பெயர்களுள்
அவனது பெயரை நீங்கள்
மறந்து விடுவீர்களோ என்றஞ்சுகிறோம்
அவனை மறக்க நாம் அஞ்சுகிறோம்.

அவனது வயது????
மழையை நினைவு கூரா ஓர் அரும்பு அவன்
நிலவொளியில் காதல் பாட்டுப் பாடியதில்லை
காதலிக்காக காத்திருந்து
கடிகாரத்தை நிறுத்தியதில்லை
ஆனால் அவனோ முதிரா இளைஞன்.

எங்கள் மண்ணிலே
அவனது கதையை நாம் கூறுகின்றோம்
அவன் ஓடி மறைந்த போது
அவன் தாயிடம் விடை பெறவில்லை
நண்பர்களைச் சந்திக்கவில்லை.
அச்சத்தை தணிக்கும் செய்தி எதனையும்
விட்டுச் செல்லவில்லை

வழி பார்த்திருக்கும் அவனது தாயின்
நீண்ட இரவுக்கு விளக்கேற்றும்
ஓர் சொல்லைத் தானும் அவன்
கூறிச்செல்லவில்லை
அவனது தலையணை, அவனது பெட்டி
என்பவற்றோடும் பேசுகிறாள்

அவன் தன் துயர் நிலையில் சொல்லுவாள்
இரவே, நட்சத்திரங்களே, கடவுளே, முகிலே
பறந்து செல்லும் என் பறவையைக்
கண்டீர்களா?


சுடரும் இரு தாரகை அவன் கண்கள்
இரண்டு பூக்கூடைகள் அவனது கரங்கள்
அவனது மார்பு நிலவுக்கும்,
நட்சத்திரங்களுக்கும்
தலையணையாகும்
காற்றும் மலரும் ஆடும் ஊஞ்சல் அவனது
கேசம்
பிரயாணத்திற்கு இன்னும் தகுதி பெறாத
பிரயாணிகளைக் கண்டீர்களா?

உணவு எடுத்துக் கொள்ளாது அவன்
சென்றுவிட்டான்
பசி வரும் போது அவனுக்கு யார்
உணவளிப்பாள்?
இரவே, தாரகைகளே, தெருக்களே, முகில்களே
தாய்க்குச் சொல்லுங்கள்
எம்மிடம் விடையில்லை????

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



கேணல் சங்கர்



நினைவு நாள்: செப்ரெம்பர் 26

# நம்முடன் இருப்பார் நம்பு!

கனிவினைச் சிந்துகின்ற
கவினுறு விழிகள் எங்கே?

கலைபல கற்ற கர்ம
வீரனின் மிடுக்கு எங்கே?

மென்மொழி பேசுகின்ற
அன்புறு வேந்தன் எங்கே?

வன்பகை வணங்கத் தோன்றும்
பண்பெறும் உருவம் எங்கே?

உயரிய அர்ப்பணிப்பின்
உன்னதச் சாட்சி எங்கே?

அரியதோர் புத்தகத்தின்
அழகிய பக்கம் எங்கே?

தலைவரின் அருகிருந்த
அற்புதத் தோழன் எங்கே?


தலைமகன் உயிர் கவர்ந்தான்
காலனா வென்றான்? தோற்றான்.

இறக்கவே மாட்டார் எங்கள்
இனியவர் சங்கர் அண்ணா.
கலக்கமே வேண்டாம் — நம்பு.


ஜெயா

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


# தமிழீழத்தின் அடிக்கற்கள்




லெப்.சங்கர் (செ.சத்தியநாதன்)
கம்பர்மலை
வீரச்சாவு: 27.11.1982



லெப்.சீலன் (ஆசா.சாள்ஸ் அன்ரனி)
திருமலை
வீரச்சாவு: 15.07.1983




வீரவேங்கை ஆனந்தன் (இ.அருள்நாதன்)
மயிலிட்டி
வீரச்சாவு: 15.07.1983



கப்டன்.றெஜி (கு.மகேஸ்வரன்)
காமரநகர்
வீரச்சாவு: 02.12.1985




மேஜர்.அல்பேட் (க.ரூபநிதி)
அச்சுவேலி
வீரச்சாவு: 21.12.1985



கப்டன்.லிங்கம் (சி.செல்வகுமார்)
வல்வெட்டித்துறை
வீரச்சாவு: 24.04.1986

## தமிழீழத் தலைவனின் தளபதிகள்



லெப்.கேணல். புலேந்திரன் (கு.தர்மராசா)
திருமலை
வீரச்சாவு: 05.10.1987




லெப்.கேணல். குமரப்பா (பா.இரத்தினபாலன்)
வல்வெட்டித்துறை
வீரச்சாவு: 05.10.1987

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


# தமிழீழத் தாயின் மூத்த பிள்ளைகள்




லெப். **செல்லக்கிளி**
(ச.செல்வநாயகம்)
கல்வியங்காடு
வீரச்சாவு: 23.07.1983




கப்டன். **லாலாரஞ்சன்**
(க.ஞானேந்திரமோகன்)
பருத்தித்துறை
வீரச்சாவு: 13.07.1984



கப்டன். **பண்டிதர்**
(சி.ரவீந்திரன்)
கம்பர்மலை
வீரச்சாவு: 09.01.1985



லெப்.கேணல். **விக்ரர்**
(ம.பியூஸ்லஸ்)
பணங்கட்டிக்கொட்டு
வீரச்சாவு: 12.10.1986



மேஜர். **கணேஸ்**
(சி.சிற்றம்பலம்)
கந்தனாய்
வீரச்சாவு: 05.11.1986



லெப்.கேணல். **பொன்னம்மான்**
(யோ.குகன்)
கலட்டி-யாழ்
வீரச்சாவு: 14.02.1987



லெப்.கேணல். **சந்தோசம்**
(க.உமைநேசன்)
அரியாலை
வீரச்சாவு: 21.10.1987



கேணல். **கிட்டு**
(ச.கிருஸ்ணகுமார்)
வல்வெட்டித்துறை
வீரச்சாவு: 16.01.1993



லெப்.கேணல். **அப்பையா**
(ஐ.இராசையா)
மானிப்பாய்
வீரச்சாவு: 24.12.1997



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழத்தின் அணிகலன் 1

# முதல் வேங்கையின் வீரச்சாவு



லெப். சங்கர் – சுரேஸ்

சங்கர்,

சுரேஸ்,

ஆயுதப் படைகள் வலை விரித்துத்தேடும் செ. சத்தியநாதன்

இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கெரில்லாவீரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன், கன் திற[illegible] நெஞ்சில் கனலும் புரட்சிகர உணர்வோ[illegible] இயக்கத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கக் காத்திருந்த வீர மறவன். அரசபடையின் திசர் முற்றுகையிலிருந்து தப்பிச் செல்லுகையில் சுற்றி நின்று கொமாண்டோக்கள் சரமாரியாக வெடிகளைத் தீர்த்தபோது காயமுற்று, எங்கள் இயக்கத்தின் முதலாவது களப்பலியாகும் பெருமையை அணைத்துக்கொள்கிறான்.

ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடாத்திய தாக்குதலால், அப்பகுதி அரச படைகளை ஸ்தம்பிக்கச் செய்தது.

பொன்னாலைக் குண்டு வெடிப்பு நடவடிக்கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தவன். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தம்பாப்பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்குச் சங்கரே பொறுப்பு வகிக்கிறான்.

எந்தவிதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றல் சங்கரின் பன்முனைப்பட்ட ஆற்றலுக்குச் சான்றாகும். ஒரு கெரில்லாத் தாக்குதலையடுத்து ஏற்படுகிற பரபரப்பு, எதிரிப் படைகள் ஸ்தலத்திற்கு வருமுன்னர் வெளியேறவேண்டிய பதைப்பு என்பவற்றிற்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடனும் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும்போது மிகுந்த கவனம் செலுத்துவான், தெளிவாக விளக்குவான். தனக்குத் தெரியாத விபரங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சக போராளிகள் மத்தியில் தனி மதிப்பு வகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் இராணுவத் தலைமையிலேயே வென்றெடுக்க முடியும் என்ற அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர், இயக்கத்தில் தன்னைக் கரைத்துக் கொண்டவன். விடுதலைப்போராட்டமே சங்கரின் முழுமூச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்தில் குதித்தவன் இந்த வீரன் சமூக விரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்பவாதிகளையும் அவன் அறவே வெறுத்தான். அவன் மனசு மிகவும் சுத்தமானது. இத்தகைய இதயசுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.

தலைவர் பிரபாகரனின் அரசியல் வழிகாட்டலிலும், இராணுவக் கட்டுக்கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவன். பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற - தூய்மைமிக்க விடுதலைப் போராளிகளால்தான் தலைமையேற்று நடத்தப்படவேண்டும் என்று அவன் எப்போதும் சொல்லி வந்திருக்கிறான். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின்மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமைதியான இந்தப்போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கிறான்.

[illegible]க்கும் தறுவாயிலும் அவன் தன் உற்றார், பெற்றோரை நினைக்கவில்லை. "தம்பி தம்பி " என்றுதான் அந்த வீரனின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும், மற்ற இயக்கப் போராளிகளும் கண்களில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


நிற்க அந்த வீரமகன் சாவிலே வீழ்ந்து போனான்.

'ஒரு உண்மை மனிதனின் கதை' என்ற ரஷ்ய நாவலைக் கடைசியாக வாசித்துக் கொண்டிருந்த சங்கர், அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்கவில்லை. சங்கர் என்ற உண்மை மனிதனின் கதை. ஒரு வீர காவியம்தான்.



மாவீரன் லெப்.சங்கர்

எங்கள் மாவீரர்கள்
சாவைச் சந்தித்த
கடைசி மணித்துளி
ஒருநொடிப் பொழுதா?
இல்லை–
அது தான்
எங்கள் நீண்ட வரலாறு!



தேசியமாவீரர்நாள் 2004





# தியாக சீலன்



லெப். சீலன்

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி. மாலை 3 மணி.

கச்சாய்க் கடலிலிருந்து வீசும் இதமான காற்று.

அந்த மீசாலைக் கிராமம்
அமைதியில் தோய்ந்து போயிருக்கிறது.

அந்த அமைதியைக் குலைத்துக் கொண்டு, சிறிலங்கா வின் இராணுவக் கலிட்படைகள், அந்தச் சிறிய கிராமத்தைச் சுற்றிவளைக்கின்றன. கச்சாய் வீதியுடன் [illegible] லாரை மீசாலை வீதியை, அரச படைகளின் வாகனங்கள் ஆக்கிரமிக்கின்றன.

ஒரு மினி பஸ், இரண்டு ஜீப், ஒரு இராணுவ ட்ரக் வண்டி. நூறு பேருக்கு மேல் சீருடையணிந்த சிங்கள இராணுவ அதிரடிப் படையினர். அந்தக் கிராமம் சிலிர்த்துக் கொள்கிறது.

கல்லும் மணலும் கலந்த குச்சு ஒழுங்கைகளுக்கூடாக, நான்கு இளைஞர்கள் இயந்திரத் துப்பாக்கிகளுடன் சைக்கிளில் விரைந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு துரோகி காட்டிக் கொடுத்ததால் சிங்கள இராணுவம் தங்களது மறைவிடத்தைச் சுற்றிவளைப்பதை உணர்ந்து, அந்தக் கிராமத்தை விட்டு வெளியேற விரையும் அந்த நான்கு இளைஞர்களும், அதோ அந்த அல்லாரை மீசாலைத் தார் வீதியைக் கடந்துகொண்டிருக்கிறார்கள்.

வீதியின் ஒரு புறம் கடலையருகேயும் மறுபுறம் நெசவுநிலையத்திற் கருகிலும் நின்று கொண்டிருந்த இராணுவ வண்டிகள் இளைஞர்கள் கடந்த ஸ்தலத்தை நோக்கிச் சடுதியாக விரைகின்றன. அந்த ஸ்தலத்தில் இராணுவ வண்டிகள் குழுங்கிக்கொண்டு நிற்கின்றன.

இராணுவத்தின் குண்டு துளைக்கும் எல்லைக்குள் அந்த இளை ஞர்கள் விரைந்து கொண்டிருக்கிறார்கள். மினிபஸ்ஸில் இருந்த இரா ணுவத்தினர் இறங்கி ஓடிப், பனை வடலிக்குள் பாதுகாப்பான இடங்களில் தங்களை நிலைப்படுத்திக் கொள்கின்றனர். மொத்த இராணுவத்தினரில் முப்பதுக்கு மேற்பட்டோர் பனை வடலிக்குள் குழுமுகின்றனர்.

தார் வீதியைக் கடந்த இளைஞர்கள் துரதிர்ஷ்டவசமாக இப்போது நின்று கொண்டிருப்பது, வெறும் பொட்டல் வெளியில். சுற்றிலும் சூழ்ந்து கொண்டுவிட்ட அரச படைகளை உறுத்துப் பார்க்கிறான், அந்த இளைஞர்களின் தலைவன்.

அவன் தான் -
சீலன்!
அரச படைகளின் கண்ணுறுக்குள் விரலை விட்டு ஆட்டிய வீர மறவன்.

ஆசீர்-
சீலன்-
இதயச்சந்திரன்-

ஆகிய பெயர்களில் அரச படைகள் வெறிகொண்டு தேடும், ஞானகாஸ் சார்ல்ஸ் அன்ரனி தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவுத் தலைவன்.

Fire!
"சுடுங்கள்"

[illegible] ஜீப்பிலிருந்து சீலனின் இயந்திரத் துப்பாக்கி சடசடக்கிறது மற்ற இளைஞர்களும் விரைந்து துப்பாக்கிகளை இயக்குகின்றனர்.

Tamileelam Archive

வெட்டவெளியில் அந்த வீரமகன் சீலன். அவனருகில் ஆனந்த் என்னும் அருள் நாதன். உடலும் உள்ளமும் வைரம் பாய்ந்தவன். அவனோடு இன்னுமொரு வீரன்.

ஆபத்தின் எல்லைக்கப்பால் அடுத்த வீரன் உறுதி, நிதானம், வேகம், லாவகம் களத்திலே புலிகள்.

இளைஞர்களின் எதிர்த்தாக்குதல் சிங்களக் கூலிப்படைகளைத் திணறச் செய்கிறது. ஆனாலும் பாதுகாப்பான பனை வடலிக்குள் பதுங்கிக்கொண்டு அந்தக் கூலிகளும் தொடர்ச்சியாகத் தாக்குகின்றனர்.

வெட்டவெளியில் தொடர்ந்து முன்னேறவோ, பின்வாங்கவோ முடியாத இக்கட்டான நிலையில் அவர்கள் சிக்கிக்கொண்டு விட்டனர்.

ஆனாலும் ஆயுதங்களோடு அரச படைகளின் கையில் சரணடையும் கோழைகளல்ல இவர்கள்! பிரபாகரனின் கைகளிலே வளர்ந்தவர்கள். எதிரிகளின் கைகளில் பிடிபடுவதை விட மானத்தோடு சாவது மேல், என்ற வீர மரபில் பயிற்றப்பட்டவர்கள்.

இறுதி மூச்சு வரை இந்தப் புலிகள் போராடத் திடங்கொண்டனர்.

சுற்றிலும் குவிந்து நிற்கும் கூலிப்பட்டாளம்! வெளியைத் துளைக்கும் சன்னங்கள். மண் தரையில் புழுதி கிளப்பும் குண்டுகள். சீலனின் எந்திரத் துப்பாக்கி தொடர்ந்து சடசடக்கிறது!

ஆனால் கூலிப்படையின் துப்பாக்கிச் சன்னம் ஏற்கனவே பெற்றிருந்த சீலனின் வீரத் தழும்புகளைக் கிழித்துக்கொண்டு மார்பில் பாய்கிறது. ரத்தம் பீறிட சீலன் தள்ளாடுகிறான்.

இரண்டு முறை முன்னரே களத்தில் குருதி சிந்திய அந்த வீரன், தன்னுயிர் போகவில்லை என்பதை உணர்கிறான்.

உயிரோடு அகப்பட்டால் கழுத்துக் குதறக் காத்திருக்கும் வேட்டை நாய்கள் சுற்றிலும்! "என்னைச் சுட்டுக் கொன்றுவிட்டு நீங்கள் பின்வாங்குங்கள்" என்று, சீலன் கட்டளையிடுகிறான்.

படைத்தலைவனின் கட்டளை. பணிக்கப்பட்ட இளம் வீரனோ திகைத்துப்போய் நிற்கிறான்.

பனை வடலிக்குள் வசதியாகப் பதுங்கி நிற்கும் இராணுவ வேட்டை நாய்களின் தொடர்ந்த வேட்டு மழை.

சீலனின் கட்டளையை நிறைவேற்றுவதா?

ஒரு பாசம் மிக்க தோழனின், ஒரு வீரம் மிக்க போராளியின் மரணம் தன்னால் நிகழ்வதா? அல்லது அவனை உயிருடன் எதிரியின் கையில் பிடிபட விட்டுவிட்டுத் தான் பின்வாங்குவதா? வினாடி நேரத்தில் விடை காணவேண்டிய நிர்ப்பந்தம் அந்த வீரனுக்கு.

"என்னைச் சுடடா சுடு" - சீலனின் கண்டிப்புடன் கூடிய கட்டளை மீண்டும் பிறக்கிறது.



தலைவருடன் சீலன்

நெஞ்சில் வழியும் ரத்தம்,
முகத்தில் துளிர்க்கும் வியர்வை,
சீலன் தள்ளாடியவாறு கண்டிப்புடன் மீண்டும் கட்டளையிடுகிறான்.

லட்சியத் தணலிலே புடம் போட்ட அந்த வீரனின் நெஞ்சில், உறுதி பிறக்கிறது.

கண நேரத்திற்குள் சீலனின் தலையில் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்கின்றன. புரட்சி வீரன் சீலனின் உடலை மீசாலை மண் அணைத்துப் பெருமை தேடிக்கொள்கிறது.

[illegible] பார்த்துச் சுடுவதற்கு வாகான - வாட்ட சாட்டமான

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தோற்றம் கொண்ட ஆனந்த் குண்டு பட்டுச் சாய்கிறான். ஆனந்த உயர்ந்தவன் - உயரத்தில், தன்மானத்தில், வீரத்தில்.

"என்னையும் சுட்டு விடு" ஆனந்தின் வேண்டுகோள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தூய்மைக்கு முத்திரை பதிக்கும் ரத்தச் சாட்சிகள்.

பிரபாகரனின் பயிற்சிக் களத்திலே வளர்ந்த வேங்கைகள்.

ஆனந்தின் தன்மானம் காக்கிறான் அந்த இளம் வீரன். மீசாலை மண்ணில் இரண்டு மாணிக்கங்கள் தரையில் சரிந்ததும் இராணுவக் கூலிப்படை கும்மாளமிட்டது. வீழ்ந்துபட்ட வீரர்களின் துப்பாக்கிகளையும் ஏந்திக்கொண்டு, மற்றுமிரு வீரர்களும் தப்பிச் சென்றுவிட்டனர்.

இறந்து கிடப்பவர்கள் யார்?

இராணுவ மிருகங்கள் நெற்றியைச் சுறிக்கின்றன. தங்களின் கைவசமுள்ள 'தேடப்படுபவர்களின்' புகைப்படக் குவியலில் இவர்களின் புகைப்படங்கள் இல்லையே!

அந்தக் கூலிப்படையின் மேஜர் ஒருவன் சீலனின் சாரத்தை உயர்த்தி, வலது காலைப் பார்க்கிறான். வலது காலின் முழங்கால் மூட்டுக்கு மேற்பகுதியில் ஐந்து துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்த தழும்புகள்.

அந்த மேஜர் உரத்துக் கத்துகிறான் "இவன்தான் சீலன்!"

சீலன் இருபத்து மூன்று வயது கூட நிரம்பாத இளைஞன். அழகான முகம், அழகாய்ச் சிரிப்பான். அவனுடைய பேச்சிலே மழலை சொட்டும்.

பழகுவதிலே அவன் குழந்தை. யாரையும் கவர்ந்திழுக்கும் வசீகரம் அவனுடையது.

ஓரத்தில் உதட்டைக் கடித்துக் கொண்டு, கண்களைச் சுருக்கிக் கொண்டு அவன் சிரிக்கும் அழகு அவனுக்கேயுரியது.

இவனோடு பழகக் கிடைத்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள், தான் மட்டுமல்ல தன்னோடு இருப்பவர்களையும் எப்போதும் சிரிக்கவைத்துக் கொண்டிருப்பான்.

கூச்ச சுபாவம் உள்ளவன். ஆனால் பழக ஆரம்பித்தால் மிகவும் இனிமையாகப் பழகுவான். அன்பு செலுத்தத் தெரிந்த இவன் அன்பைப் பிரியமாக ஏற்றுக் கொள்வான்.

பிரியமானவர்கள் விளையாட்டுக்காகக் கோபித்தால் கூட அதனை அவனால் தாங்கிக்கொள்ள முடியாது. கோபித்தலம் இவனுக்குத் தெரியாது. ஆர்ப்பாட்டமே இல்லாதவன்.

ஆயுதப்படைகளுக்கு எதிரான அதிரடித்தாக்குதலென்றால் யுத்த சன்னதனாக்களத்தில் குதிக்கும் இவன், சாதாரணப் பொழுதுகளில் தென்றலாகத் தெரிவான்.

அவன் ஆத்மாவை விற்கத் தெரியாத புரட்சிக்காரன்.

பிழைகளைச் சுட்டிக் காட்டுவதில் நக்கீரன். தமிழீழத்தை நோக்கிய அவனது சிந்தனைகளும் செயற்பாடுகளும் திட்டவட்டமானவை.

தலைவர் பிரபாகரனின் தலைமையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விடுதலைப் போராட்டத்திலேயே தமிழீழம் வெல்லப்படும் என்பதில், சீலன் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தான்.

பிரபாகரனின் நேர்மையிலும் தூய்மையிலும், திறமையிலும் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான்.

தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியில், ஒரு தலைமறைவு இயக்கத்தின் ஒழுங்கு கட்டுப்பாடு என்பனவற்றைப் பேணுவதில் சீலன் காட்டிய சிரத்தை, அசாதாரணமானது.

அந்த வகையில் தலைவர் பிரபாகரனின் பூரண நம்பிக்கைக்கும், அன்பிற்கும் சீலன் பாத்திரமாக இருந்தான். ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாத சுயநலமிகளும், கூட இருந்தே இயக்கத்திற்குக் குழிபறித்து விட்டு ஓடிய துரோகிகளும், பிழையாத நடவடிக்கையில் ஈடுபட்டு தூய்மையான இயக்கத்தை உடைக்க முயன்றபோது, இயக்கத்தின் கட்டுக்கோப்பைத் தளரவிடாது காப்பதில் பிரபாகரனுடன் உறுதியாக நின்றவர்களில், சீலன் முதன்மையானவன்.

பதவி இறக்கப்பட்டதற்காக இயக்கத்தை விட்டு ஓடியவர்களைப் பார்த்து சீலன் சிரித்திருக்கிறான். அந்தச் சிரிப்பில் சினமும் தோய்ந்திருக்கும். இயக்கத்தின் ரத்த நாளமாகவே சீலன் திகழ்ந்தான். தான் நம்பியவர்கள் எல்லோரும் பதவிப் பித்தர்களாயும், சுயநலமிகளாயும் வேடங்கட்டித் திரிந்ததைப் பார்த்து பிரபாகரன் விரக்தி கொண்ட கணங்களில், சீலனே இயக்கத்திற்குப் புதிய ரத்தம் பாய்ச்சுவதில் துணை நின்று பெரும் பணியாற்றியிருக்கிறான்.

சீலன் இராணுவப் படிப்புப் படித்தவன் அல்லன். வெளிநாடுகளில் போர்ப் பயிற்சி பெற்றவனுமல்லன். போர் மூலமாகவே போரை அறிந்தவன். இயக்கத்தின் இராணுவப் பிரிவுக்குத் தலைமை வகித்து இவன் நடத்திய வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதல்கள், இயக்கத்திற்கு வலிமையைச் சேர்த்து, விடுதலைப் போராட்டத்தையும் முன்னெடுத்துச் சென்றிருக்கிறது.

தமிழீழத்தின் போராட்ட வரலாற்றில் முதன்மைவாய்ந்த கெரில்லா வீரன் சீலன். படைத் தலைவன் என்பவன் ஆணை பிறப்பிப்பவன் மட்டுமல்ல, தானே முன்னுதாரணமாகத் திகழ்ந்து போரை வழி நடத்துபவன் என்பதற்கு, சீலனே ஒரு இலக்கணம்.

ஒரு கெரில்லாத் தாக்குதலை மேற்கொள்ளுமுன் அதற்கான தகவல்களைத் திரட்டுவதிலும், அதன் செயற்பாடு, விளைவு, தாக்கம் என்பதனை தமிழ்... கடுமையாக உழைத்தவன். கவனம்பிசகால் எந்த

Tamileelam Archive

விதமான தீங்கும் ஏற்பட்டுவிடாது பார்த்துக் கொள்வதிலும் அவன் மிகவும் விழிப்புடன் இருப்பான். அசாத்தியமான துணிச்சலும், எதிரிகளின் பல வீனங்களை ஆராய்ந்து அதற்கேற்ப திட்டங்களை வகுக்கும் நுண்ணிய அறிவும், குறுகிய காலத்தில் இராணுவப் பிரிவின் தலைவனாக அவனைப் பதவி வகிக்கும் நிலைக்கு உயர்த்தியது.

"ஒரு கெரில்லாப் போராளியின் வீரம் அவனது எந்திரத் துப்பாக்கியில் இல்லை. அவனது மனதில்தான் இருக்கிறது" என்பது, சீலனின் அநுபவ வாசகம்.

அவனது மனவலிமை அபாரமானது. சாவுக்கு அவன் வாழ்க்கை ஒரு சவால்.

துப்பாக்கிப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கும் போது முதன்முறை நெஞ்சிலே குண்டு பாய்ந்தது. ரத்தம் பீறிடிக்க விழுந்து கிடந்த நிலையிலும் கூட.

அந்த வீரனின் முகத்தின் புன்சிரிப்பு மிளிர்ந்ததை இயக்கத் தோழர்கள் என்றும் நினைவு கூர்வர்.

மூச்சு விடவும் திராணியற்றுப்போன நிலையிலும் அவன் திணறித் திணறிச் சொன்ன வார்த்தைகள்;

"இயக்கத்தைக் காட்டிக் கொடுத்திடாதீங்க"

பிறகும் பேசுவதற்கு மூச்சு இடந்தந்த போது அவன் சொன்னான்;

"இயந்திரத் துப்பாக்கியைக் கொண்டு போய் பாதுகாப்பான இடத்தில் வையுங்கள்"

மரண அவஸ்தையிலும் அந்த மாவீரன், இயக்கம் குறித்து மட்டுமே உதிர்த்த வார்த்தைகள் கண்ணீரோடு மட்டுமல்ல பெருமிதத்தோடும் நினைவுகூரத்தக்கவை உண்மைதான்.

சாவுக்குச் சவால் விட்ட அந்த விடுதலை வீரனை இறுதியில் சாவு அணைத்த போது, அவன் இயக்கத்தைக் காட்டிக் கொடுத்திடவும் இல்லை இயந்திரத் துப்பாக்கியைப் பாதுகாப்பான இடத்தில் விட்டுவைக்கவும் தவறவில்லை.

சீலன் திருமலையின் வீர மண்ணிலே விளைந்த நல்ல முத்து. சிங்கள இனவெறியாட்சியாளர்களின் நேரடியான ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டு கிடந்த திருகோணமலையின் நடைமுறை அநுபவங்களை அவன் கண் கூடாகக் கண்டவன்.

சிறீலங்காவின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் கடற்படை, விமானப்படையின் அடக்குமுறைகளும் சிங்களக்காடையர்கள், இராணுவம், பொலிஸ் ஆகியோரின் அரவணைப்புடன் தமிழ் மக்களைத் துன்புறுத்தும் கொடுமைகளும் திருமலையில் ஏராளம். இந்த ஆக்கிரமிப்பிற்கு இடங்கொடுத்து வந்ததால்தான், திருமலை மண்ணையே சிங்களவர்களுக்குப் பறிகொடுக்கும் நிலை வந்தது என்று சீலன் கொதிப்பான்.

கல்லூரி நாட்களிலேயே இனவெறிபிடித்த சிங்கள ஆளும் வர்க்கத்திற்கெதிரான போராட்ட உணர்வு கொண்டவனாகச் சீலன் திகழ்ந்தான்.

1978 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கொண்டுவரப்பட்ட சிறீலங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில், ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வைபவத்தினைத் தமிழீழ மண்ணில் துக்கநாளாகக் கொண்டாட அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை அம்பலப்படுத்த, பாடசாலை மாணவ



> நாம் இருக்கும் இடங்கள் எந்நேரமும் சுற்றிவளைக்கப்பட்டு, இராணுவ முற்றுகைக்கு உள்ளாகலாம். அடுத்த கடிதத்தில் தொடர்புகொள்ளக்கூட முடியாது நாம் களத்தில் பலியாகலாம்.
>
> ஒரு வேளை, ஈடும் இணையுமில்லாத இப் போராட்டத்தில் நாம் அழிக்கப்பட்டாலும், தொடர்ந்தும் எமது உயிரோட்டமுள்ள போராட்டத்தை இறுதி இலட்சியம் வரை முன்னெடுத்துச் செல்ல, தங்களைப் போன்றவர்கள் முன்வரவேண்டும் - வருவீர்கள் என்ற நம்பிக்கையுடனேயே, நாம் களத்தில் இன்று நிற்கின்றோம்.
>
> ■ சீலனின் கடிதமொன்றிலிருந்து

னான சீலன் முன்வந்தான். இந்த வைபவத்தினையொட்டித் திருமலை இந்துக் கல்லூரியில் சிறீலங்காவின் தேசியக் கொடியை ஏற்றிவைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சீலன் தனக்கேயுரியதான நுட்பமான அறிவைப் பயன்படுத்தி 'பொஸ்பரஸ்' என்னும் இரசாயனத்தை அந்தேசியக்கொடிச் சுருளில் மறைத்து வைத்தான். தேசியக்கொடி ஏற்றப்பட்ட போது அது எரிந்து சாம்பலாகியது.

சந்தேகத்தின் பேரில் 18 வயது மாணவனான சீலன் கைது செய்யப்பட்டு, சிங்களக் காவற்படையால் சித்திரவதை செய்யப்பட்டான். அந்த வயதிலும் தனக்கு உடந்தையாக இருந்த யாரையும் அவன் காட்டிக் கொடுக்கவில்லை. கொள்கையிலே உறுதிகொண்டவர்களைச் சிறைச்சாலைகளும், சித்திரவதைகளும் என்ன செய்துவிட முடியும்?

தனிமனித ரீதியிலான எதிர்ப்புணர்வால் அரச இயந்திரத்தை அழித்துவிட முடியாது என்ற அனுபவத்தையும், இவை சீலனுக்குப் போதித்தன. இந்த அனுபவமே சீலன் தன்னை ஒரு புரட்சிகர இயக்கத்தில் இணைத்துக் கொள்ள, உந்துசக்தியாக உதவியது.

ஆயுதந்தாங்கிய அடக்குமுறையை ஆயுதப் போராட்டத்தின் மூலமே தகர்க்க முடியும் என்ற நம்பிக்கையே சீலனை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலே இணைத்தது. 'ஆயுதப் போராட்டம் மூலம் தமிழீழம்' என்ற ராஜபாட்டையில் சீலன் கம்பீரமாகவே நடந்திருக்கிறான்.

இயக்கத்தில் சேர்வதற்கு முன் வீட்டை விட்டு வருவதற்கு வளமான வாழ்க்கையோ - கை நிறையக் காசு கிடைக்கும் தொழிலோ சீலனுக்கு இல்லை.



ஆனால் இவனையே நம்பி அன்றாடம் சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு வறிய குடும்பம் இருந்தது. வளமான வாழ்க்கையை அல்ல; வறிய குடும்பமொன்றின் எதிர்பார்க்கைகளை நிர்த்தாட்சண்யமாகத் தூக்கி வீசிவிட்டுவரும் பெரும் மனத்திடமும், இலட்சியப்பிடிப்பும் சீலனிடம் இருந்தன.

சாக்குப் படங்குகளால் மறைக்கப்பட்ட சிறிய குச்சு வீடு. வேலையோ, நிரந்தரமான வருமானமோ இல்லாத தந்தை. வீடுகளில் சமையல் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றும் தாய். இரண்டு அண்ணன்மார், இரண்டு அக்காமார், ஒரு தங்கை.

சீலன் உணவில்லாமலே வாடிய நாட்கள் ஏராளம்.

சிந்திக்கும் திறன் கொண்ட சீலன் தனது குடும்பம் மட்டுமல்ல, எத்தனையோ குடும்பங்கள் ஏழ்மை நிலையில் வாடுவதைக் கண்டு, நொந்திருக்கிறான்.

சீலனின் வாழ்நிலை புரட்சிகரச் சிந்தனைகளின் விளைநிலமானது. மார்க்சியச் சிந்தனையில் அவன் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டான். மார்க்சிய ஒளியில் தேசிய இனப் பிரச்சினையையும் அவன் தெளிவாக விளங்கிக் கொண்டிருந்தான்.

உலகெங்கும் நடக்கும் விடுதலைப் போராட்டங்களை ஆர்வத்துடன் அவதானித்து வந்தான். பெண் விடுதலை பற்றிய இவனது அபிப்பிராயங்கள் சமசிந்தனையின் பாற்பட்டதாகவும் வியக்கத்தக்க வகையில் முற்போக்கானதாகவும் இருந்தன.

இத்தகைய அரசியற் பிரக்ஞை கொண்ட சீலன் இராணுவப் பிரிவுத் தலைவனாகத் திறனோடு செயற்பட்ட காலம் குறித்துத், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பெருமிதம் கொள்கிறது.

குறுகிய காலத்தில் சீலன் சாதித்தவை மகத்தானவை.

1981 ஒக்ரோபர் மாதம், பிரிகேடியர் வீரதுங்க சிறீலங்கா அரசால் பதவி உயர்வு பெற்று, இராணுவக் கொமாண்டராக நியமிக்கப்பட்டபோது, தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதல் தடவையாக சிறீலங்கா இராணுவக் காவற் படைக்கு எதிரான கெரில்லாத் தாக்குதலை வெற்றிகரமாகத் தொடங்கி, இரண்டு வீரர்களைச் சுட்டு வீழ்த்திய பெருமை சீலனுக்குரியது.

1982 இல் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்காக யாழ்ப்பாணத்திற்கு ஜே.ஆர் ஜெயவர்த்தனா, விஜயம் செய்வதையொட்டி, காரைநகர் பொன்னாலைப் பாலத்தில் கடற்படை வீரர்களின் ட்ரக் வண்டிகளைச் சிதைக்கும் கெரில்லா நடவடிக்கையும் சீலனின் தலைமையிலேயே நடந்தது. துரதிர்ஷ்டமாக சிறீலங்கா கடற்படைக்காவலர்கள் இத்தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொண்டாராயினும், இத்தாக்குதல் நடவடிக்கை சிறீலங்கா அரசை நடுங்கமுறச் செய்தது.

1982 ஒக்ரோபர் 20 ஆம் திகதி, பாசிச வெறியன் ஜே.ஆர் ஜெயவர்த்தனா, மீண்டும் தேர்தலில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒக்ரோபர் 27.
சாவகச்சேரி.
புலர்ந்தும் புலராத காலை

யாழ்-கொழும்புப் பிரதான வீதியில் சற்று உள்ளே தள்ளி சாவகச்சேரி பொலிஸ் நிலையம் அமைந்திருந்தது. சார்ஜ் அறை, O.I.C யின் அறை, பொலிசார் தங்குமிடம் ஆகியவற்றை அது உள்ளடக்கியது.

பொலிஸ் நிலையத்திற்குச் சற்று தள்ளி ஒரு மினிபஸ் நிற்கிறது. மினி பஸ்ஸில் இருந்து இராணுவ உடைதரித்த விடுதலைப் புலிகள், சீலனின் தலைமையில் உப இயந்திரத் துப்பாக்கி (S.M.G), தானியங்கித் துப்பாக்கிகள் சகிதம் மின்வெட்டும் வேகத்தில் பொலிஸ் நிலையத்தினை ஆக்கிரமிக்கின்றனர்.

எதிர்த்தாக்குதல் நடத்த முனைந்த இரண்டு பொலிஸ்காரர்கள் சுடப்பட்டனர். அந்த அதிகாலையின் அமைதியைக் கிழித்துக்கொண்டு துப்பாக்கி வேட்டுகள் தொடர்ச்சியாகத் தீர்க்கப்படுகின்றன. சார்ஜ் ரூம் சிதைக்கப்படுகின்றது.

பயம் அறியாத - சாவறியாத சீலன் முன்நின்று மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் அதிரடிப்படையின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கானான் வலது காலின் முழங்கால் முட்டிற்குச் சற்று மேலே ஐந்து துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்தன.

பொலிஸ் நிலையக் கொம்பவுண்டிற்குள் கொண்டுவரப்பட்ட மினிபஸ்ஸிற்குள் ஆயுதங்கள் அனைத்தும் துரிதமாக ஏற்றப்படுகின்றன. காலைக் கெந்திக் கெந்தி இழுத்துக் கொண்டு தனது S.M.G யுடன் எதிரியின் துப்பாக்கியையும் இழுத்துக்கொண்டு மினிபஸ்ஸிற்கருகில் வந்து சக போராளிகளின் கைகளில் கொடுத்துவிட்டு, தள்ளாடுகிறான் சீலன், மயக்கமடைகிறான்.

இதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்புதான் துப்பாக்கிப் பயிற்சியின்போது நெஞ்சிலே குண்டு பாய்ந்து, ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று ஓரளவு உடல் தேறியிருந்த சீலனுக்கு, இது இரண்டாவது காயம்.

இந்தத் துப்பாக்கிக் காயம் சீலனை மிகவும் பலவீனப்படுத்தியது. காயப்பட்டுவிட்டால் சீலனை வைத்துப் பராமரிப்பது சிறிது கஷ்டம் தான்.

"நோவுது, நோவுது" என்று தொடர்ச்சியாய் முனகிக்கொண்டிருப்பான்.

முதலாவது காயத்தின்போது நோவைத் தணிப்பதற்காக 'பெதற்றின்' மருந்து கொடுக்கப்பட்டு, சீலன் அதற்குக் கொஞ்சம் பழகிப்போனான். "எனக்குத் தாங்க முடியாது பெதற்றின் தாங்கோ" என்று கெஞ்சும்போது, இந்த விடுதலைப் புலி ஒரு குழந்தையாகும். ஓரிடத்தில் கிடக்கமாட்டான், புரண்டு புரண்டுகொண்டேயிருப்பான்.

ஒரு முறை, காயத்தின் நோவிலிருந்து மீள மன ஆறுதலுக்கு கடவுளை நினைத்துக் கொள் என்று சீலனிடம், வைத்தியசாலையில் அவனைக் கவனித்துக் கொண்ட நண்பன் சொன்ன போது, அவன் தீர்க்கமாக மறுத்து விட்டான்.

ஆனால் பின்பொருமுறை, தனது நெருக்கமான அரசியல் நண்பன் ஒருவன் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் அகப்பட்டுக்கொண்ட போது, சீலன் மனமுருகிப் போனான். பிறப்பால் மட்டுமே கத்தோலிக்கனான சாள்ஸ் என்னும் சீலன்,



நண்பனின் மீட்சிக்காக அர்ச்சனைத் தட்டோடு இந்துக் கோவிலின் படிகளில் ஏறியிருக்கிறான். அறிவினை உணர்வு பின்தள்ளியிருக்கிறது. புத்தகங்களில் கிரகித்த சிந்தனைகளையும் மேவி அவனது நட்பின் உணர்ச்சிச் சுழிப்பு பிரவகித் தோடியிருந்தது.

அவன் ஓரளவு குணமாகியிருந்தாலும் கெந்திக் கெந்தித்தான் நடப்பான். ஐந்து மாத இடைவெளியில், நெஞ்சிலும் காலிலுமாக அவன் வாங்கிய துப்பாக்கிக் குண்டுகளின் காயங்களில் இருந்து நலம்பெற்று, அவன் தன்னம்பிக்கையோடுதான் செயற்பட்டான்.

நெஞ்சிலே காயப்பட்டு சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறும்போது, ஆஸ்பத்திரியில் நின்ற நாட்களில் அன்பாய் அவனைப் பார்த்துக் கொண்ட நேர்ஸ் அவனிடம் கேட்டாள்.

"நீங்கள் குணமானது உங்களின் தன்னம்பிக்கையினாலா? நண்பர்களினாலா? டொக்டரினாலா? அல்லது கடவுளின் கிருபையினாலா?"

அந்த நேர்ஸ் என்ன பதிலை எதிர்பார்க்கிறாள் என்பது, சீலனுக்குத் தெரியும். விடைபெறுகின்ற நேரத்தில், அவள் எதிர்பார்க்கும் அந்தப் பதிலைச் சீலன் சொல்லிவைக்கலாமே என்று, பக்கத்தில் இருந்த நண்பர்கள் மனதில் நினைத்துக்கொள்கின்றனர்.

அவளுடைய திருப்திக்காகத் தான் ஏற்றுகொள்ளாத ஒரு பதிலைச் சொல்ல, அவன் தயாராக இல்லை.

சிகிச்சை பெற்று ஐந்து மாதம் கூடத் தரிக்காமல் அவன் மீண்டும் தமிழீழத்தின் போராட்டக் களத்தில் இறங்கினான்.

1983 மே மாதம் 18 ஆம் திகதி.

சிறிலங்கா அரசு நடாத்தும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதி.

ஒட்டுப் பொறுக்கும் அரசியலில் ஊறிப்போன கட்சிகள் தேர்தலில் திளைத்தன. யாழ்மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஐக்கிய தேசிய கட்சியும், தமிழ்க் கொங்கிரஸ், நவசமசமாஜக் கட்சி ஆகியனவும் தீவிரத் தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கியிருந்தன.

யாழ் உள்ளூராட்சித் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் பணியில் இயக்கம் தீவிரமாகச் செயற்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சந்தர்ப்பவாத சமரசத் தலைமைகளால் தமிழ் மக்களுக்கு விடிவேற்படாது என்பதை நன்குணர்ந்திருந்த சீலன், அவர்களை மக்களுக்கு இனங்காட்டுவதில் முன்னின்றான். இனவாத அரசின் தேர்தல் மாயையிலிருந்து தமிழீழ மக்கள் விடுபட வேண்டும் என்று, இயக்கம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தபோது, தேர்தல் பகிஷ்கரிப்புப் பிரச்சார

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வேலைகளுக்காக இரவு பகலாக, அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் சீலன் உற்சாகத்துடன் பணியாற்றினான். பாசிச இனவெறியன் ஜே.ஆரின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இயங்கிய முகவர்மீது, ஏப்ரல் 29ஆம் திகதி இயக்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் சீலனின் தலைமையிலேயே மேற்கொள்ளப்பட்டன.

மே 18 ஆம் திகதி, தேர்தல் நிலையங்களின் பாதுகாப்பு பந்தோபஸ்து கருதி சிறிலங்கா அரசு யாழ். குடாநாடு முழுவதும் ஆயுதப்படைகளைக் குவித்தது. ஒவ்வொரு தேர்தல் வாக்களிப்பு நிலையத்திற்கும் விரிவான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.



சீலனுடன் புலேந்திஅம்மான்

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திற்கும் ஐந்து ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் ஐந்து ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரும், பாதுகாப்பிற்காக உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதனை விட, ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு முறை பொலிஸாரும் இராணுவத்தினரும் ரோந்துப் பார்த்துக் கொண்டிருந்த வண்ணமாக இருந்தனர்.

மே 18 ஆம் திகதி மாலை 4-15 மணி.

கந்தர்மடம் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் வாக்களிப்பு நிலையத்திற்கருகில், மூன்று சைக்கிள்களில் இளைஞர்கள் வந்து இறங்குகிறார்கள். காலைக்கெதிர்வாறு ஒரு சைக்கிளின் பாரில் இருந்து எந்திரத் துப்பாக்கியுடன் இறங்கும் சீலனின் தலைமையில், கட்டளைகள் பிறக்கின்றன.

பாதைகள் மறிக்கப்பட்டு, வாகனங்கள் திருப்பி அனுப்பப்படுகின்றன. வீதியைத் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபின் இராணுவச் சகாக்களுடன் சீலன் நேருக்கு நேர் நின்று நடத்திய தாக்குதல் சாவைத் துச்சமாக மதித்த ஒருவனின் துணிச்சலுக்குச் சாட்சி.

இந்தத் தாக்குதல் சம்பவம்பற்றிச் சிங்கள நூலாசிரியர் ஒருவர் விபரிக்கையில், "விடுதலைப் புலிகளோடு பாதுகாப்புப் படையினர் நின்று தாக்குப் பிடிக்கக்கூடியவர்கள் அல்லர் என்று மக்கள் புலிகளின் இராணுவத் திறமையை மெச்சினர்" என்று குறிப்பிடுகிறார்.

கந்தர்மடச் சம்பவம் நடைபெற்று இப்போது ஒன்றரை மாதமாகிவிட்டது.

ஜூலை 5 ஆம் திகதி.

நேரம் நள்ளிரவைத் தாண்டிவிட்டது.

கொக்குவில் தாவடியில் ஒரு வீட்டுக்குள் சீலன் இராணுவ உடையில் எந்திரத் துப்பாக்கியுடன் நுழைகிறான். அந்த வீட்டுக்காரரைத் தட்டி எழுப்பி, தாங்கள் குருநகர் இராணுவ முகாமிலிருந்து வந்திருப்பதாகவும், தாவடிச் சந்தியில் தங்கள் ஜீப் பழுதாகி நிற்பதாகவும் வேனைத் தந்துதவுமாறும் கேட்கிறான். அந்த வீட்டுக்காரரும் பயபக்தியாகத் தனது வேனைக் கொடுக்கிறார்.

நள்ளிரவைத் தாண்டி 2-30 மணியளவில், சீலனும் பிற விடுதலைப் போராளிகளும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையருகில் இந்த வானை நிறுத்திவிட்டு, ஆயுதங்களோடு தொழிற்சாலைக்குள் நுழைகின்றனர்.

துப்பாக்கி முனையில், வாசலில் நின்ற காவலாளிகளையும் நேரப் பதிவாளரையும் கட்டி வைத்துவிட்டு, களஞ்சிய பொறுப்பாளரின் சாவிகளை எடுத்துக்கொள்கின்றனர். ஐந்தே நிமிடங்களில் நான்கு பெரிய தகர்ப்புக் கருவிகளையும் பிற தேவையான உபகரணங்களையும் எடுத்துக்கொண்டு, தொழிற்சாலையை விட்டு வெளியேறுகின்றனர்.

அதிகாலை 4-30 மணியளவில், தாங்கள் பெற்றுக்கொண்ட டெலிகா வானை மீண்டும் உரியவரிடம் ஒப்படைக்கின்றனர்.

மிகத்திறமையாக சீலன் இயக்கத்துக்குத் தேடித்தந்த தகர்ப்புக் கருவிகள், பிற்பட்ட காலத் தாக்குதல் நடவடிக்கைகளின் வெற்றிக்குப் பெருந்துணை புரிந்துள்ளன. ஆனால், இவற்றைத் தேடித்தந்த பின் பத்து நாட்களே சீலன் வாழ்ந்திருந்தான்.

1979 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இயக்கத்தில் சேர்ந்த சீலன், 1981 ஆம் ஆண்டிலிருந்து அரச படைகளால் தேடப்பட்டு வந்தான். இதன் பின், தலைமறைவு கெரில்லா வாழ்க்கையை மேற்கொண்ட சீலனின் புகைப்படங்கள் எதுவுமே அரச படைகளின் கைகளில் சிக்காமையினால் இவன் மக்கள் மத்தியில் வெவ்வேறு பெயர்களில் அரசியல் பணிகளை மேற்கொள்வது சாத்தியமாக இருந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

> "நமது காலத்தில் விடுதலைப் புரட்சி தொடங்கிவிட்டது. இது நிச்சயமாக வெற்றி பெறும்.
> ஏனெனில், இது கீழிருந்து- அடி மட்டத்திலிருந்து தொடங்கியுள்ளது. கெரில்லாக்களைக் கண்டு பயப்பட்ட மக்கள் கெரில்லாக்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள்."

■ *சீலனின் கழுத்திலிருந்து...*

அரச படையினரால் தேடப்பட்ட ஆரம்பித்ததும், தனது வீட்டுக்குப் போவதை பூரணமாக நிறுத்திக்கொண்டு விட்டான். ஆஸ்பத்திரியில் நெஞ்சில் துப்பாக்கிக் காயத்திற்காகச் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் சமயத்தில்தான், அவனது தந்தை இறந்த செய்தி சில நாட்கள் கழித்து அவனுக்குத் தெரிய வந்தது. தந்தையும் இல்லாத நிலையில், தன் தாய் பொறுப்பு மிகுந்த அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள் என்று, சீலன் நினைக்காமல் இருந்திருப்பான் எனச் சொல்ல முடியாது. தனது குடும்பப் பிரச்சினைகள் குறித்து நெருங்கிய நண்பர்களிடம் மிக ஆதுரவாகவே கதைத்திருக்கிறான்.

சீலன் ஓரக்காளிற்கும் செடமாலைக்கும் மட்டுமே தான் சொந்தமானவன் அல்லன் என்று உணர்ந்திருந்தான்.

சீலன் இவன்தானா என்று அடையாளம் காணத் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் சவச்சாலைக்குக் கொண்டுவரப் பட்ட சீலனின் தாய், ஆடாமல் அசையாமல் நிற்கிறாள். நெற்றிப்பொட்டிலே பாய்ந்த துப்பாக்கிச் சன்னத்தால் தலை சிதைந்த நிலையிலே, தான் பெற்ற அழகுச்செல்வன் கிடத்தப்பட்டிருப்பதை அவள் கண்ணீர் திரையிட உற்று நோக்குகிறாள். நான்கு வருடங்களுக்கு முன் மெல்லியவனாக வீட்டை விட்டு வெளியேறிய மகன், வாட்டசாட்டமாக - வளர்ச்சி கொண்டவனாக - அடையாளமே கண்டுபிடிக்க முடியாத அளவு மாறிப்போய் கிடத்தப்பட்டிருக்கிறான். அந்த மச்சம், உதடுகள், சிதைவுக்கூடாகவும் முழுமை காட்ட முயலும் முகம், பெற்றவள் இனங்காண்கிறாள்.

அது அவளுடைய செல்வன்தான்.
அசைமணி நேரமாக அவள் அவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.
துயரந்தோய்ந்த அந்தத் தாயின் பக்கத்திலே சீலனின் அண்ணன் அந்த உடலை வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

அமைதியை இராணுவப் படையில் ஒருவன் குலைக்கிறான்.

"இது ஒன்ட மகனா?" கொச்சைத் தமிழில் கேட்கிறான்.

கண்ணீர் வழிய தாய் தலையசைக்கிறாள். தன் மகனின் உடலைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு அந்தத் தாய் அங்கு நின்ற மேஜரிடம் வேண்டுகிறாள்.

அவனோ வெறுப்பை உமிழ்கிறான்.

அந்தச் 'செல்வமகனின்' உடல் அந்தத் தாய்க்குச் சொந்தம் - இது தர்மம்.

அந்த 'விடுதலை வீரனின்' உடல் அரசுக்குச் சொந்தம் - இது சட்டம்.

தான் பெற்ற மகனைக் கௌரவமாக அடக்கம் செய்ய நினைத்த அந்த ஏழைத் தாயின் உரிமையைத், 'தார்மீக' அரசின் பயங்கரவாதம் நெரித்தது.

சீலன் உயிரோடிருந்தபோதுதான் அவன் மரணித்தபோதுதான் அரசுக்குப் பெரும் சவாலானான். புரட்சிவாதிகளின் வாழ்க்கை சாவுக்குப் பிறகுதான் ஆரம்பமாகிறது.

அவனுடைய சடலம் கிடத்தப்பட்டிருந்த வைத்தியசாலை பலமான இராணுவக் காவலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

அதற்குப்பின் அந்தத் தாய்க்கு அந்த வீரமகனின் சடலத்தை பார்க்க முடியவில்லை.

லட்சோப லட்சக்கணக்கான தமிழ் மக்களின் இதயங்களிலே அணையாத புரட்சித் தீபம் ஒளி வீசிக்கொண்டிருக்கும் சீலனின் சடலம், யாருக்கும் தெரியாமல் அவசரகாலச் சட்டத்தின் கீழ் இராணுவ மிருகங்கள் சூழ்ந்து நிற்க எரிக்கப்பட்டது.

* * * * *

விடுதலைக்காகவே வாழ்ந்த அந்த வீரமகனை தலைவர் பிரபாகரன் கண்ணீருடன் நினைவு கூர்கிறார்.

"எவ்வளவு அற்புதமானவன் என் சீலன்!"

"ஆசையாகவல்லவா நான் அவனுக்கு இதயச்சந்திரன் என்று பெயர் வைத்தேன்."

"இவ்வளவு சீக்கிரமா என்னை விட்டுப் போனான்?"

"அவனது மரணச் செய்தி பொய்யாகப் போய்விடாதா என்று என் மனம் நடுங்கியதே..."

"எவ்வளவு கஷ்டங்களில் உயிருக்குயிராய் துணை நின்றான்..."

"காடுகளில் அவனோடு திரிந்த காலங்கள் தான் எத்தனை மகத்தானவை..."

"லட்சியங்களோடு காத்திருந்தானே..."

"ஏன் திடீரென இப்படி இல்லாமல் போனான்?"

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



மீண்டும்... மீண்டும்...
நினைவில் சுழல்கிறது
அந்த அழகு முகம்.
அந்த மழலைச் சிரிப்பு.
அந்தப் பாட்டு.
அன்று
இரவு ஆழ்ந்து விட்டது.
சலசலக்கும் காட்டு மரங்கள்.
சருகுகளின் ஓசை.
சில்வண்டுகளின் ரீங்காரம்
காற்றின் வருடலில்,
கனலும் தீக்கங்குகள்.
குழுமியிருக்கும் விடுதலை இளவல்கள்.
அவர்களிடையே பல்சுவை நிகழ்ச்சி.
இது சீலனின் முறை.
அவனுக்குப் பாட்டு.
இதோ சீலன்!
எப்போதும் போல் கட்டமிட்ட சட்டை.
கணுக்காலுக்கு மேல் மேல் மடித்து விட்ட ஜீன்ஸ்.
அவனிடம் கூச்சம்.
சிரித்துச் சமாளிக்கிறான்.
நண்பர்களின் தூண்டுதல்.
பாட்டின் ஆரம்பம்.
ஆரவாரமான வரவேற்பு
உற்சாகமடைகிறான்.

கைகளை அகல விரித்து கம்பீரமாகப் பாடுகிறான்.

"அதோ அந்தப் பறவை
போல வாழ வேண்டும்.
இதோ இந்த அலைகள்
போல..."





தமிழீழத்தின் அடிக்கல் 3

# ஆனந்த் – உறுதியோடு உயிர்கொடுத்த இளம்புலி



வீரவேங்கை ஆனந்த்

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய இளம் கெரில்லா வீரன் ஆனந்த் என்னும் அருள்நாதன், உலகிற்குப் பிரகடனப் படுத்தப்பட்டான். மீசாலை மண்ணிலே சுற்றி வளைத்துக் கொண்ட சிங்கள இராணுவக் கூலிப்படைகளுடன் சாகும்வரை துப்பாக்கி ஏந்திப் போராடிய வேங்கைதான் அருள்நாதன்.

நெஞ்சில் வழியும் ரத்தத்தோடு, "என்னைச் சுடடா, சுடு" என்று சீலன் பிறப்பித்த கட்டளையை ஏற்றுப், பக்கத்திலே நின்ற மற்றுமொரு கெரில்லா வீரனின் துப்பாக்கிச் சன்னங்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சீலனின் தலையிலே பாய்வதைப் பார்க்கிறான் ஆனந்த். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் சிங்களக் கூலிப்படைகளின் துப்பாக்கிச் சன்னங்கள் ஆனந்தையும் தரையிலே வீழ்த்துகின்றன.

சீலனோ அந்தக் கெரில்லாப் படைத்தலைவன், அரசபடையால் வலை வீசித் தேடப்படுபவன். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தாக்குதல் சம்பவத்தில், சீலனின் தலைமையிலே அந்தக் கெரில்லாத் தாக்குதல் நடைபெற்றது என்பதைச் சிங்களக்கூலிப்படைகள் தெரிந்து வைத்திருந்தன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த அங்கத்தவன் - சிங்களக் கூலிகளின் கரங்களில் அந்தக்காளை பிடிபடவே முடியாது.

சீலனுக்கு தன்னை மாய்த்துக்கொள்ளும் மனப்பக்குவம் சித்திப்பதற்கு அநுபவம் துணை புரிந்திருக்க வேண்டும். ஆனால், இயக்கத்தில் சேர்ந்து ஆயுதப் பயிற்சி பெற்று ஏழுமாதங்கள்கூட நிரம்பாத நிலையில், இயக்க ரகசியத்தைக் காத்துக்கொள்வதற்குத் தன்னையும் சுட்டுவிடுமாறு சக வீரனைப் பணித்த ஆனந்தின் இலட்சியத் தூய்மை, நம்மைச் சிலிர்ப்படையச் செய்கிறது.

விடுதலைப்புலிகளின் புரட்சிகர ஆயுதப்பாதையில் நம்பிக்கையோடும் உறுதியோடும் கால்பதித்த அந்த இளைஞன், எத்தனையோ யுத்த களங்களைக்காண ஆசைப்பட்டிருப்பான். ஆனால் அந்தச் சாதனைகளை எல்லாம் செயலில் காட்ட அந்த வீரமகனின் சின்ன ஆயுள் இடம் கொடுக்கவில்லை. பத்தொன்பது வயதிற்குள்ளேயே ஆனந்த் சாவை அணைத்துக் கொள்ள நேர்ந்தது துரதிர்ஷ்டமே.

ஆனந்திற்கு வயதை மீறிய கட்டான உடம்பு. அரும்பு மீசை. மேவித்தான் தலையிழுப்பான். அடித் தொண்டையில்தான் கதைப்பான். யாரோடும் கோபிக்க மாட்டான். நண்பர்களோடு விட்டுக் கொடுக்கும் சுபாவமுடையவன். எந்த வேலையையும் ஏற்றத்தாழ்வு பார்க்காமல் செய்பவன். சமையல் செய்வதிலிருந்து, கிணறு வெட்டுவதுவரை அலுப்பில்லாமல் எதையும் செய்ய முன்நிற்பான்.

மெல்லிய நிறத்தில் ஆடைகள் அணிவதில் அவனுக்கு விருப்பம் அதிகம். மயிலிட்டிமண் ஈந்த வீரமைந்தன் ஆனந்த். நீர்கொழும்பில் தன் ஆரம்பக் கல்வியைப் பெற்றான். பின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் உயர்கல்வி கற்றான். க.பொ.த. உயர்தரப் பிரிவில் விஞ்ஞானம் பயின்ற ஆனந்த் அரசியலைப் பின்னாளில் வாழ்க்கையாக வரித்துக்கொண்டான்.

பாடசாலைக் காலங்களில் ஆனந்த் சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தான். பாடசாலை உதைபந்தாட்டக் கோஷ்டியில் சிறந்த கோல் காப்பாளராகப் பிரபல்யம் பெற்றிருக்கிறான். சிறந்த கிரிக்கெட் வீரனுமாவான். கராத்தேயும் கற்றிருந்தான். சகலவிதமான வாகனங்களையும் அநாயாசமாகச் செலுத்தும் திறமை கொண்டவன்.

தனது குறுகிய ஆயுதப் பயிற்சிக் காலத்திலும் ஆயுதங்களின் நுட்பங்களை நிறையத்தெரிந்து வைத்திருந்தான். வெடிகுண்டுகள் தயாரிப்பதிலும் அவனுக்குப் போதுமான ரசாயன அறிவிருந்தது. துப்பாக்கிப் பயிற்சியின் போது மிகக் குறைந்த நேரத்தில் கூடிய இலக்குகளை(Targets) அடிக்கக் கூடியவன். சரியாக இலக்குக் குறிவைத்து அடித்துவிட்டான் என்றால், "ஹாய்" என்று கைகளை உயர்த்திக் குலுங்கிச் சிரிக்கும்போது, ஒரு பாடசாலை சிறுவனின் பெருமிதமே வெளிப்படும். (குறி தப்பாது சுடுகின்ற ஒரு கெரில்லா வீரனின் திறமையை, ஜேம்ஸ் பொண்ட் சாகஸங்கள் என்று கொச்சையாக அர்த்தப்படுத்திக்கொண்டு நாம் குழம்பிக்கொள்ள வேண்டியதில்லை) பலம் மிகுந்த அடக்குமுறை இராணுவத்திற்கு எதிராகக் குறைந்த அளவு ஆயுதங்களுடன் தொடுக்கப்படுகின்ற கெரில்லாத் தாக்குதலின்போது, இத்தகைய திறமைவாய்ந்த கெரில்லா வீரர்கள் தனிமுக்கியம் வகிக்கின்றார்கள்.

நன்றி: விடுதலைப்புலிகள் குரல்-4 ஓகஸ்ட் 1984




செல்லக்கிளி, சீலன், ஆனந்த் ஆகியோரின் முதலாம் ஆண்டு நினைவாக விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட சுவரொட்டி.





# வேர்விட்ட விடுதலையின் உயிர்மூச்சு



லெப்டினன்ட் செல்லக்கிளி

செல்லக்கிளி,
அம்மான்,
சந்திரன்....

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் செல்வநாயகத்துக்கு இயக்கம் சூட்டிய பெயர்கள் இவை. கல்வியங்காடு என்ற இடத்தில் ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்து ஆரம்பக்கல்வியைக் கூடத் தொடர முடியாத நிலையில் கல்வியைக் கைவிட்ட செல்லக்கிளி, ஆரம்பத்தில் அன்னா கோப்பி விற்பனை வானில் சாரதியாக வேலை பார்த்தான். செல்லக்கிளி தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு அறிமுகமான காலத்தில் இருந்தே இயக்க நடவடிக்கைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவன். எந்த வாகனத்தையும் மிகத் திறமையாக ஓட்டும் பயிற்சியைப் பெற்றிருந்த செல்லக்கிளி, ஆயுதங்களாகட்டும், மோட்டார் இயந்திரங்களாகட்டும் பழுதடைந்தால் தானே திருத்தி இயக்க கூடிய மிகச் சிறந்த தொழில் நுட்ப அறிவையும் பெற்றிருந்தான். காட்டுப்பாதைகளை அறிவதில் அதிசயிக்கத்த ஆற்றலைக் கொண்டிருந்த செல்லக்கிளி தனது வாழ்க்கையை ஒரு கெரில்லாப் பயிற்சிக்களமாக ஆக்கிக்கொண்டிருந்தான். ஒரு தடவை உடையார்கட்டுக் குடியேற்றத்திட்டத்தில் காட்டுமரங்களை வெட்டி விவசாயத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் எதிர்பாராமல் வந்த இரண்டு பெரிய கரடிகளில் ஒன்றைக் கோடரியால் வெட்டிக்கொன்றான். மற்றக் கரடி, கூட இருந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது. ஓய்வு நேரங்களில் காட்டுப்பகுதிகளில் சுட்டுத்துவக்குக் கட்டி மிருகங்களை வேட்டையாடுவது அவனது பொழுது போக்காகும். ஆரம்ப காலங்களில் இயக்கத்திற்கான முகாம்களை அமைக்கும் வேலை நடைபெறும் போதெல்லாம் முகாம்களுக்குத் தேவையான அமைப்புக்களைக் கொண்ட மரங்களைத் தேடிக்கண்டு பிடித்து வெட்டுவது, கொட்டில் போடுவது, சுவர் வைப்பது போன்ற செயல்கள் அவன் தலைமையில் அவன் மேற்பார்வையில் தான் நடைபெறுவது வழக்கம்.

சிறுவயதில் இருந்தே தனது பெரிய தாயாரின் வீட்டில் வாழ்ந்து வந்தவன் செல்லக்கிளி. அவனது பெரிய தாயாரின் மகன் செட்டி என்ற தனபாலசிங்கம் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் போராளியாக இருந்த போதிலும் பின் முழுமையான சுயநலவாதியாகவே மாறினான். அவனது துரோகத்தைக் கண்டு கொதித்த செல்லக்கிளி அவனை அண்ணன் என்றும் பாராது "அரசியலைத் துற அல்லது என் கையாலேயே நீ சாவாய்" என்று எச்சரித்தான். ஆனால் அவன் திருந்தவில்லை. செட்டியின் செயல் எல்லை மீறவே தேசியத் தலைவர் பிரபாகரனால் செட்டி சுடப்படுகிறான். செட்டி சுடப்பட்டதற்குப் பின்பும் இயக்கத்திற்கும் பிரபாகரனுக்கும் விசுவாசமாக முழுமையாக தன் உயிரையே தருகிற அளவிற்குச் செயலாற்றினான் செல்லக்கிளி. "செட்டியின் குடும்பத்தைக் காப்பாற்றுவது எனது கடமைதான். அதைவிட இயக்கத்திற்கு நான் ஆற்ற வேண்டிய கடமை பெரிது" இது செல்லக்கிளி உறுதியாக உதிர்த்த வார்த்தைகள்.

இயக்கத்தையும் அவனையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு அவனது பணி இயக்கத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் இருந்தே இயக்கம் நடத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் பங்கு பற்றியவன் செல்லக்கிளி. முதலில் இயக்கம் உளவுப்படை பொலீஸ் அதிகாரியான கருணாநிதியை அழித்த நிகழ்ச்சி, பொலீஸ் உளவுப்படை தலைமைப்பகுதியைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை குழுவினர் மீதான தாக்குதல், உமையாள்புரம் இராணுவத் தாக்குதல், பருத்தித்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீதானதாக்குதல், கந்தர்மடம் வாக்குச்சாவடியில் நடந்த இராணுவத்தினர் மீதான தாக்குதல், என்று இயக்கம் நடத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் ஈடுபட்டுத் தன்தனி முத்திரையைப் பதித்தான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜயவர்த்தனவைச் சுட்டுவிட்டு அவனிடமிருந்து எடுத்த ஜீப் வண்டியை குன்றும் குழியுமாயிருந்த வீதிகளினூடாக 15 மைல் தூரத்தை 9 நிமிடத்தில் ஓட்டிச் சென்று அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இயக்க வீரர்களை இராணுவ முற்றுகைக்குட்படாது வெளிக் கொண்டு வந்த செயல் செல்லக்கிளியின் சாரதியத் திறமைக்கு எடுத்துக்காட்டாகும். அவன் தலைமையேற்றுச் சிறப்புற நடத்திய இன்னுமொரு தாக்குதல் இரகசியப் பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவின் மீதான தாக்குதலாகும். 07.04.1978 அன்று அதிகாலை 5.30 மணியளவில் முருங்கன் மடு வீதியின் உட்புறமுள்ள காட்டுக்குள் அமைந்திருந்த மரமுந்திரிகைத் தோட்டத்துக்குள் இருந்த விடுதலைப்புலிகளின் இருப்பிடத்தை முற்றுகையிட்ட உளவுப்படை பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவினர் நிராயுதபாணிகளாக இருந்த விடுதலைப்புலி இளைஞர்களைச் சுற்றி வளைத்தனர். இயந்திரத் துப்பாக்கி, கைத்துப்பாக்கிகள் சகிதம் வந்திருந்த பொலிஸாரிடம் பேச்சுக் கொடுத்து தன் புத்தி சாதுரியத்தால் அவர்களின் கவனத்தை திசை திருப்புகிறான் செல்லக்கிளி. பொலிஸார் சற்று ஏமாந்திருந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் அனைவரும் ஒன்றாகப் பாய்கிறார்கள் பொலிஸாரின் மேல். அடுத்த கணம் பொலிஸாரிடமிருந்த சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் கைகளுக்கு மாறுகின்றன. முதன்முதலாக அன்றுதான் கையிலெடுத்த எஸ்.எம்.ஜி செல்லக்கிளியின் கைகளில் வேகமாக இயங்குகிறது. சில நிமிடங்கள் வேட்டுகள் தீர்க்கப்பட்டன. புலிகளை வேட்டையாடவென வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை, சப் இன்ஸ்பெக்டர் பேரம்பலம், சார்ஜன்ட் பாலசிங்கம், கான்ஸ்டபிள் சிறிவர்த்தன என நால்வராகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இறுதியாக பொலிஸார் கொண்டு வந்த ஆயுதங்களாலேயே அவர்கள் சுடப்பட்டதுடன் அவர்கள் வந்த காரையே எடுத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றனர். மூன்று நாட்களின் பின்னர்தான் பஸ்தியாம்பிள்ளை கோஷ்டியினரின் முடிவு பற்றிய செய்தி வெளியே தெரிய வந்தது. செல்லக்கிளி தலைமையிலான இந்தத் தாக்குதல் நிகழ்ச்சியானது தமிழ்ப் போராளிகள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆபத்து வரும் வேளைகளில் நிதானமாகச் சிந்தித்து வேகமாகச் செயற்படும் தன்மை செல்லக்கிளிக்கு கூடவே பிறந்ததாகும். முன்பொரு தடவை செல்லக்கிளி இருந்த கிராமமான உடையார்கட்டுக்கு செல்லக்கிளியைத் தேடி சப் இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை சென்றபோது செல்லக்கிளியின் வீட்டிற்கு அண்மையில் செல்லக்கிளியிடம் செல்லக்கிளியைப் பற்றி விசாரித்தான். செல்லக்கிளியோ நிலைமையை உணர்ந்து சற்றும் தடுமாறாது 'வாங்கோ ஐயா செல்லக்கிளியின் வீடு பக்கத்திலேதான் இருக்குது கூட்டிக்கொண்டு போய்க் காட்டுறன்' என்று தன் வீட்டுக்கே சப் இன்ஸ்பெக்டரை அழைத்துச் சென்று காட்டிவிட்டு வேகமாக மறைந்துவிட்டான். அதன் பின்புதான் சப் இன்ஸ்பெக்டர் செல்லக்கிளி தன்னை ஏமாற்றி விட்டு தப்பிச்சென்றதைத் தெரிந்து ஆத்திரப்பட்டான்.

தனக்குச் சரி எனப்பட்டதை உதாரணங்கள், பழமொழிகளோடு விளக்கி வாதிடுவது செல்லக்கிளிக்கு கைவந்தகலை. சட்டம் படித்து விட்டு தமிழினத்தையே ஏமாற்றிக் கொண்டிருந்த [illegible] மத்தியில் நின்று பள்ளிப்படிப்பையே முடிக்காத செல்லக்கிளி [illegible]. நீங்கள் முப்பது ஆண்டுகளாக நாம் காடு மேடு என்று அலைகின்றோம். நீங்கள் முப்பது ஆண்டுகளாக என்ன செய்தீர்கள்" என்று அவர்களின் பொது மேடைகளில் ஏறி வினா எழுப்பினான். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க என தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் கூட்டம் கூட்டப்பட்ட



இடத்திற்குச் சென்று தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி வாதிட்டான் செல்லக்கிளி. சுயநலமிகள் அவன் வார்த்தையை ஏற்கவில்லை. ஆனால் தமிழீழ மக்கள் செல்லக்கிளியின் கருத்தை உள்ளூராட்சித் தேர்தலை முற்று முழுதாகப் பகிஷ்கரித்ததன் மூலம் முழுதாக ஏற்றுக் கொண்டனர்.

1983 ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் நாள் வடமாகாணத்தின் மிகப் பெரிய இராணுவ முகாமான பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்குச் செல்லும் வீதியில் திருநெல்வேலி என்ற இடத்தில் ரோந்து வந்துகொண்டிருந்த இராணுவ வண்டிகள் இரண்டின் மீது செல்லக்கிளி தலைமையிலான பதினான்கு விடுதலைப் புலிகள் கொண்ட கெரில்லா அணி தனது தாக்குதலை ஆரம்பிக்கின்றது. வேகமாக வந்த ஜீப் வண்டி, விடுதலைப் புலிகள் வைத்த கண்ணிவெடி சரியான நேரத்தில் வெடித்ததால் மேலே தூக்கி எறியப்பட்டு கீழே வந்து விழுகிறது. அதில் வந்த சிங்கள இராணுவத்தினர் கீழே குதித்து தாம் வைத்திருந்த துப்பாக்கிகளைத் தூக்கியபடி ஓட முயல்கின்றனர். பின்னால் வந்த இராணுவ ட்ரக் வண்டியிலிருந்த இராணுவத்தினர் பீதியினால் ட்ரக் வண்டிக்குள்ளேயே பதுங்குகின்றனர். விடுதலைப் புலிகளின் துப்பாக்கித் தோட்டாக்களும் வெடிகுண்டுகளும் ட்ரக்கை விட்டு எழமுயன்ற இராணுவத்தினரின் உடல்களைச் சல்லடையாக்குகின்றன. தமிழீழத்தில் முதல் தடவையாக அதிக அளவு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர். இதைக் கண்டு உற்சாக மிகுதியினால் வெற்றிக் களிப்புடன் மறைவிடத்திலிருந்து தான் வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கியை இராணுவ வண்டியை நோக்கி இயக்கியபடியே எழுந்து நின்று சுடத் தொடங்குகிறான் செல்லக்கிளி. அதேநேரம் ஜீப் வண்டிக்குள் இருந்த சிங்களச் சிப்பாய் ஒருவன் சுட்ட குண்டு நேராகச் செல்லக்கிளியின் இதயத்தை ஊடுருவிச் செல்கிறது. சத்தமெதுவுமின்றிக் கீழே விழுகிறான் செல்லக்கிளி.



13 இராணுவத்தினரை வீழ்த்தி ஏராளமான ஆயுதங்களை எடுத்த உற்சாகத்தில் திளைத்த விடுதலைப் புலிகள், செல்லக்கிளியின் மறைவுச் செய்தியை அறிந்ததும் அதிர்ச்சியடைந்து சோகத்தில் ஆழ்கின்றனர். முதல் வாரத்தில் இரண்டு முன்னோடி வீரர்களை இழந்த விடுதலைப்புலிகள் களத்தில் செல்லக்கிளியையும் இழந்ததால் வெற்றிக்கான மகிழ்ச்சிப்பு சிறிதுமின்றி சோகமே உருவாகத் தம் இருப்பிடம் திரும்புகின்றனர். இயக்கம் வளர்ந்து வரும் நிலையில் இயக்க முன்னோடி வீரர்களுக்கு பொறுப்புக்கள் கொடுத்து அவர்களுக்கு அனுபவப் பயிற்சியைக் கொடுக்கும் வகையில் அந்தத் தாக்குதலுக்கான தலைமையை செல்லக்கிளியிடம் ஒப்படைத்துவிட்டு தானும் ஒரு வீரனாகத் தாக்குதலில் கலந்துகொண்ட தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு செல்லக்கிளியின் மறைவு பேரதிர்ச்சியைக் கொடுக்கின்றது. எதிர்காலத்தில் செல்லக்கிளியிடம் ஒப்படைக்கக்கூடிய பொறுப்புக்களைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்த பிரபாகரனுக்கு செல்லக்கிளியின் மரணம் இயக்கத்தில் ஒரு பெரிய தேக்கமாகப்படுகிறது. ஆம்! இயக்கத்துக்கு அவன் ஆற்றிய பணிகளைப் பற்றியும் அவனின் ஆற்றலைப் பற்றியும் பிரபாகரனைவிட வேறு யாருக்கும் முழுமையாகத் தெரிந்திருக்க நியாயமில்லை.

இயக்கம் தொடங்கிய காலத்தில் சுழல் துப்பாக்கி ரவைகளை சுயமாக உருக்கித் தயார் செய்த காலத்தில் கூட இருந்து உதவியதுடன் பின்னர் இயக்க வீரர்களுக்கு தானியங்கித் துப்பாக்கிகளை வைத்துப் பயிற்சி கொடுக்க, வெளியில் இரவு பகலாக அலைந்து குறைந்த விலையில் ஏராளமான ஒரிஜினல் துப்பாக்கி ரவைகளை வாங்கி வந்து சேர்த்தது இவையெல்லாம் செல்லக்கிளி இயக்கத்துக்குச் செய்த மறக்கமுடியாத சேவைகளாகும். அன்று செல்லக்கிளி வாங்கி வந்து குவித்த துப்பாக்கி ரவைகளை வைத்தே இயக்கத்தின் முன்னணி வீரர்கள் எல்லாம் சுட்டுப் பயிற்சி எடுக்க முடிந்தது. ஏன் இயக்கத்துக்கென வாங்கப்பட்ட முதல் துப்பாக்கிகூட செல்லக்கிளிக்குச் சொந்தமான இரண்டு மாடுகளை விற்றுக் கிடைத்த பணத்தில் வாங்கப்பட்டதுதான்.

படித்தவர்கள் குழம்பிய காலத்திலும் தான் குழம்பாது இருந்துவந்த செல்லக்கிளியின் கிராம வாசனை தொனித்த வயதுக்கு மீறிய வாதங்களையும், வார்த்தைகளையும், வார்த்தைப் பிரயோகங்களையும் கேட்ட இயக்க வீரர்கள் அவனை 'அம்மான்' என்று அன்புடன் அழைத்து வந்தார்கள். அவனது திறமையான மதிநுட்பமான செயலாற்றல்கள் பல விடுதலைக்குப் பின் சரித்திரத்தில் மட்டுமே வெளிவர வேண்டிய செய்திகள். அவனது இறுதிக்காலமானது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனை. ஆம்! சரித்திரமாகிய நாள், தமிழீழ விடுதலைப் போராட்டப்பாதையில் ஒரு புதிய சகாப்தம் உருவாக்கப்பட்ட நாளாகும்.

# நெஞ்சின் அலைகள்

நீல அலையின் வீச்சதினில் மூச்சாய் இருந்தவர்,
முட்டுகின்ற முகிலின் கால நதியாய் போனவர்,
கடற்கரும்புலிகள், காலம் எழுதிய வரிகளுக்கு
கவித்துவம் சமைத்து கரிகாலன் கனவிற்கு
நனவுருவம் கொடுக்க அருவமாகிப் போனவர்!
கருநிலவன்.



கவிதைகள்

## சுடர் விழி

சுடர்விழி,
நவம் அறிவுக் கூடத்தில்
கல்வி கற்றுக் கொண்டி
ருக்கும் இரு விழிகளையும்
இழந்த போராளி.

# நிழல்கள்

செந்தமிழில் சொல்லெடுத்து பாடுகிறோம் – உங்களுக்கு
கண்ணங்களில் நீர்வழிய கையசைத்து அனுப்பி வைத்தோம்.
அன்பு மழை பொழிந்த விழிகளோடு இலக்கை நோக்கி நடந்தீர்கள்.
கொட்டமிட்ட கொடிய கழுகுகள் மூச்சிழந்து சிதறின.


கண்ணில் பாசம், நெஞ்சில் வீரம் இது கரும்புலி மறவனின் தோற்றம்
வானம் அழ, பூமி சிரிக்க, நீங்கள் குருதி சொரிவது ஈழம் மலர
காங்கை நெருப்பின் கருவில் பூத்த நெருப்பு நிலவுகளே
நீங்கள் வீசிய விடுதலை விதையில் தேசம் மலரும்.

தலைவரின் சிந்தனையில் உதித்த கருந்தோழர்களே தோல்விகள் உமக்கில்லை
நாட்டுக்காக வாழ்பவர்கள் என்றும் மரணிப்பது கிடையாது
கரையோரமும் அலையினில் தேடுகின்றோம் உம் முகம்
உதய கால [illegible] வீர் ஈழவானில்

Tamileelam Archive

தமிழீழத்தின் அணிகலன் 5

# கட்டன் ரஞ்சன் (லாலா)



கட்டன் ரஞ்சன்

'மக்கள் போராட்டம்' என்ற பெயரில் தமக்கே புரியாத சில தத்துவங்களைப் பேசுபவர்கள் தாங்கள் பேசுவது நடைமுறைக்கு சாத்தியமாகுமா என்பதைப் பற்றி யோசிக்காமல் அதை புதிகள் செய்கிறார்கள். ஆகவே கட்டாயம் அதைப் பிழை என்று தான் சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால் தான் நான் சிறந்த முறையில் அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கிறேன் என தங்கள் இயக்கம் நற்சான்றிதழ் வழங்கும் என நினைத்து எங்களைத் தவிர எல்லோருமே கெரில்லாப் போராட்டத்தை கிண்டல் செய்து வந்த காலத்தில் நேரடியாக பொதுமக்களைத் கலந்து கொள்ளும் இரா... ஒன்றை நடைமுறையில் முதன் முதலாக நாம் ... படுத்தியவன் ரஞ்சன். பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத் தாக்குதல் மூலம் "இதுவும் மக்கள் போராட்டம் தான் புரிந்து கொள்ளுங்கள்!" என பாடம் புகட்டியவன் ரஞ்சன். இன்று இந்த மக்கள் எழுச்சிகளைக் காணும் போது உனது தியாகங்கள் வீண்போகவில்லை நாளைய தமிழ் வரலாற்றில் உனது பெயரில் இன்றைய சிறுவர்களால் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்றெல்லாம் உன்னிடம் சொல்லவேண்டும் போல் இருக்கும். கண்ணெதிரே நீ இல்லாவிட்டாலும் என் எண்ணங்களை என் உள்ளத்தே நிறைந்திருக்கும் உன்னிடம் பகிர்ந்துகொள்ள என்றுமே நான் தயங்குவதில்லை.

ஒவ்வோர் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியும் உன்னை எனக்கு ஞாபகப்படுத்தியே தீரும். இயக்கத்தின் முழுநேர போராளியாக எழுபத்தெட்டாம் ஆண்டில் நீ அடியெடுத்து வைத்த நாள் அது தானடா. 78ஆம் ஆண்டு மார்கழியில் இயக்கரீதியாக அறிமுகமான நீ துண்டுப் பிரசுரம் கொடுத்தல், இரகசியமாக இயக்கத்திற்கு ஆட்சேர்த்தல், எதிரியின் நடமாட்டங்களை எமக்குத் திரட்டித் தருதல் போன்ற வேலைகளை அதுவரையில் செய்து வந்தாய்.

சிறு அசைவைக்கூட மிகவும் திட்டமிட்டே நடைமுறைப்படுத்த வேண்டிய அந்தக் காலகட்டத்தில் உனது பணி இயக்கத்திற்கு மிகவும் தேவையாக இருந்தது. கட்டையான கறுவலான உனது உருவத்தை காணுபவர்கள் உன்னை இயக்கத்தைச் சேர்ந்தவன் என ஒருபோதும் நினைக்கமாட்டார்கள். உனது உருவடையமைப்பு இரகசியமான வேலைகளை உன் மூலம் செய்து கொள்வதற்கு மிகவும் ஏற்றதாக இருந்தது.

விடுதலைப் போராட்டத்தில் முழுநேரமாக இணைந்துகொண்ட ஆரம்ப காலத்தில் நீ பட்ட கஷ்டங்கள் இன்று விடுதலைப் பாதையில் காலடி எடுத்து வைக்க எண்ணும் அத்தனை போராளிகளும் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் அப்போதுதான் சுதந்திரத்தின் பெறுமதி எத்தகையது என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியும்.

நீயும் நானும் குறிப்பிட்ட அக்காட்டில் கொட்டில் அமைத்து பண்ணை வேலைகளை செய்வதற்காகப் புறப்பட்டோம். யாழ்ப்பாணத்திலிருந்து வானியில் சில அத்தியாவசியப் பொருட்களுடன் அங்கே சென்றோம். மழையினாலும் புயலினாலும் அந்தப் பாதை சிதைவுற்று காணப்பட்டது பலத்த சிரமத்தின் மத்தியில் எமது பிரயாணத்தை மேற்கொண்டோம். எமது பிரயாணத்தின் கடைசி எட்டு மைல்களையும் நடந்தே போக வேண்டியிருந்தது இவ்வளவு தூரம் நடந்து போவது உனக்கு பழக்கமில்லாத விடயமாக இருந்தாலும் உனது ஆர்வம் கையில் வானியையும் பொருட்களையும் மாறிமாறித் தூக்கிச் சென்று எமது பிரயாணம் முடியும் இடம் வரை கொண்டுபோக வைத்தது. இரவு பத்து மணியளவில் நாம் சந்திக்க வேண்டியவரின் வீட்டுக்குச் சென்றதும் 'அப்பாடா' என்று நிம்மதியுடன் எமது நோக்கத்தைத் தெரிவித்தோம். ஆனால் நாம் எதிர்பார்த்துச் சென்றவர் மனதில் என்னதான் குடியிருந்ததோ? கையை விரித்து விட்டார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

... திரும்பி எட்டு மைல்கள் நடந்துவந்து பஸ் மூலம் யாழ்ப்பாணம் திரும்பி வந்தோம். பணையில் கிடுகு வாங்கிக்கொண்டு மீண்டும்

அங்கே சென்றோம். போக்குவரத்து சீராக இல்லாத காலம் கிடுகுக் கட்டுடன் எமது பிரயாணத்தை மேற்கொள்வது சிரமமாகவே இருந்தது. எமது பிரயாணம் மூன்று நாட்கள் தொடர்ந்தது. இரவில் நடைபாதையே எங்கள் மஞ்சம். கொட்டும் மழையும் கிடுகிடுக்கும் பனியும் எங்கள் இலட்சிய உணர்வை மீண்டும் பட்டை தீட்டின.

வாகனப் பிரயாண முடிவில் எட்டு மைல் தூரமும் மாறிமாறி கிடுகுக் கட்டைத் தூக்கிக்கொண்டு சென்றோம். மைக்கேல் ஒரு கொட்டில் போட்டு அதனுள்ளேயே படுத்து உறங்கிய அன்று ஏற்பட்ட உணர்வு அலாதியானதுதான். ஒரு ஏக்கர் காணியை திருத்தத் தொடங்கினோம். இடையில் இயக்கத்தின் வேறு அலுவல்களுக்காக நான் யாழ்ப்பாணம் வந்து விட்டேன். உனக்குப் பின் வந்த வேறு சிலருடன் நீ இணைந்து நீ அந்தக் காணியை சிறந்ததொரு பண்ணையாக்கினாய். விவசாயம் என்றால் என்னவென்றே தெரியாதவர்களுக்கு மிளகாய்ச் செய்கையைப் பற்றி படிப்பிக்கக் கூடியளவு அனுபவம் உன்னை ஆக்கிவைத்தது.

'சித்தாந்த வேறுபாடு' என்ற பெயரில் இயக்கத்தை நாசஞ் செய்யப் புறப்பட்ட குழு உன்னையும் இயக்கத்தை விட்டு பிரிக்க பெருமுயற்சி எடுத்தது. நீ அவர்களுக்கே புத்திசொல்லி வந்த நீங்கள் வடிவாகச் சாப்பிட்டுவிட்டுப் போங்கோ என்று சாப்பாடு கொடுத்து அனுப்பிவைத்தாய். இவனுக்காக இவ்வளவு தூரம் அலைந்தோமே என்று புறுபுறுத்து விட்டுச் சென்றனர் அவர்கள். 'தம்பி'யின் மீது நீ கொண்டிருந்த நம்பிக்கை தொடர்ந்து இயக்கத்தில் உன்னை இயங்க வைத்தது. மாவட்ட அபிவிருத்திச்சபை என்னும் மாயமான போராட்டத்தின் இடையே வேடிக்கைப் பொருளாகக் கொண்டு வந்தனர் கூட்டணியினர். கிராம யாத்திரை என்ற பெயரில் அவர்களது நாடகம் ஆரம்பமாயிற்று.

கூட்டத்தில் கேள்வி கேட்ட இளைஞர் குழப்பவாதிகள். அரசின் கைக்கூலிகள் என்று முத்திரை குத்தினர் பதில் சொல்லத் தெரியாத கூட்டணியினர். நீயும் சங்கரும் சீலனும் உங்களுக்குத் தெரிந்த வழியில் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றீர்கள். S.S.O பதவிகளுக்காகவும் வேலை வாய்ப்புகளுக்காகவும் ஏங்கித் திரிந்த கூட்டணியின் தொண்(குண்)டர்கள் சீலனைக் கட்டிப்பிடித்தனர். கட்டிப்பிடித்தவரின் பின்னால் சென்று உனது சிலிப்பரை தூக்கி முதுகில் வைத்துக் "ஹான்ஸ் அப்" என்று நீ சொன்னதும் நிலை குலைந்தனர் அந்த வீரதீரர்கள். நீ வைத்திருப்பது என்ன என்பதை திரும்பியும் பார்க்காமல் தமது எஜமானர்களை நோக்கி ஓடித்தப்பினர்.

உனது சமயோசித புத்தி அன்று சீலனைக் காப்பாற்றியது.

நீர்வேலி வங்கிப் பணத்தைக் கைப்பற்றுவதில் நீ எடுத்துக் கொண்ட சிரமங்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை. இராணுவத்தினர் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றால் அதற்குச் சொஞ்சநேரம் முன்தான் நீ அங்கிருந்து அவற்றை அகற்றியிருப்பாய்.

தமிழ் விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன்முதலாக இராணுவத்தினர் மீதான தாக்குதலை மேற்கொண்ட மூவரில் நீயும் ஒருவன். ஊரடங்கு நிறைந்த யாழ் நகரில் சீலனின் தலைமையில் கைத்துப்பாக்கியுடன் அச்சாதனையைப் புரிந்தீர்கள்.

இராணுவத்தினரின் றைபிளைப் பாதுகாப்பாக வைத்துவிட்டு நாம் தங்கியிருந்த இடத்தை நோக்கி வந்த போது பக்கத்து வீட்டு அக்கா "சம்பவம் முடிந்து பெடியள் கள் சென்ற போது நான் கண்டேன்" என்று சொன்னா. என்னமாதிரி சம்பவம் நடந்தது என்று எதுவுமே அறியாதது போல விசாரித்துத் தெரிந்துகொண்டாய். நல்லவேளை அவ பக்கத்தில் இருந்ததாலும் நேரடியாகக் காணாததாலும் அந்த இடத்தைவிட்டு மாறவேண்டிய நிலைமை ஏற்படவில்லை.

பயிற்சிக்காக இந்தியா சென்றாய். பயிற்சி முகாமின் 'கொத்துரொட்டி ஸ்பெசலிஸ்ட்' நீ. ஏற்கெனவே உன்னிடம் இருந்த சுறுசுறுப்பு, துணிவு என்பவையும் கராட்டித்திறமையும் பயிற்சி முகாமில் உனது திறமையில் பளிச்சிட வைத்தன.

மீண்டும் புலேந்திரனுடன் தமிழீழம் வந்தாய். வரும் போது வள்ளக்காரர் உங்களை பேசாலைக் கரையில் இறக்கி விட்டனர். கரையிறங்கிய உங்களை அங்கே குடியிருந்த சிங்களக் காடையர்கள் பிடித்துக்கொண்டனர். உங்களைத் தாக்கி நீங்கள் கொண்டுவந்த சாமான்களைப் பறித்துக் கொண்டனர். எமது மண்ணில் அன்றுப் பிழைக்க வந்தவர்கள் எம்மையே அதிகாரம் செய்து இந்த மண்ணிற்குச் சொந்தக்காரர்களான எம்மை அடிமைகளாக நடத்துகின்றார்களே என அனைவரும் குமுறினோம்.


சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் 30 காயங்கள் சகிதம் புகுந்து விளையாடினாய். தாக்குதல் முடிந்த வரும் போது காயமுற்ற ஒவ்வொருவரையும் கட்டிப்பிடித்து அழுதாய் உனது கண்களில் இருந்த கண்ணீர் ஆறாகப் பெருகியதை அன்றுதான் முதன்முறையாகக் கண்டேன்.

உமையாள்புரத் தாக்குதல், கந்தர்மடத்தாக்குதல் என்பவையும் உன் திறமையைப் பளிச்சிட வைத்தன. யாழ் கச்சேரியில் இராணுவத்தினருக்கும், கூட்டணியினருக்கும் பாதுகாப்பு மகாநாடு கூட்ட இருந்த சமயத்தில் முதல் நாளிரவு மகாநாடு நடக்க இருந்த மண்டபத்திற்கு குண்டு வைத்தும் பல்வேறு நடவடிக்கைகள் மூலமாகவும் எமது எதிர்ப்பைத் தெரிவித்தோம். அன்று மண்டபத்தின் உட்சுவரில் பூராவும் இலைகளாலும் பூக்களாலும் "பாதுகாப்பு மகாநாடு யாரை பாதுகாக்க" என்று எழுதியிருந்தாய். உனது கேள்வி மக்களைச் சிந்திக்க வைத்தது பத்திரிகைகள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்தன அன்று பாதுகாப்பு மகாநாடு கூடிய கூட்டணியினர் நீண்டகால இடைவெளியின் பின்னர் மெல்ல மெல்ல வந்து பதுங்கு குழிகளில் பாதுகாப்புத் தேடிக் கொண்டனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் பருத்தித்துறையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை வேட்பாளராக இருந்த இரத்தினசிங்கம் உனது ஆசிரியர். ஆனாலும் உனது பார்வை துரோகி என்றே இருந்தது. உரிய இடத்திற்கு அனுப்புவதற்கு உனது பங்கையும் வழங்கினாய்.

மீசாலையில் சீலனை இழந்த வேதனை சில நாட்களாக உன் மனதில் குடிகொண்டிருந்தது உனது உணர்வுகளுக்கு வடிவமளிக்க 'திருநெல்வேலித் தாக்குதல்' சந்தர்ப்பமளித்தது. மதிலுக்கு மேல் நடப்பது [illegible]மாகவிருக்கும் என்பதற்காக [illegible] உனது

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive



ரஞ்சனே!
இறந்த உன் உயிரை
என் உடலில் காண்கின்றேன்
சிறகொடிந்த உன்
விடுதலைப் பறவையை
நான் வளர்க்கிறேன்
நீ நினைத்த சுதந்திர கீதத்தை
நான் இசைப்பேன்
நீ நடந்த சுவடுகளில்
இதோ! என் பாதம் பதிகிறது.

உன்தோழன்

உபாயத்துக்கு ஏற்றவாறு அடுக்கினாய் தனியே நின்ற தலைவருக்கு அடுத்ததாக நின்றது நீ தான். தலைவருக்கு அருகில் கிரனைட் வீழ்ந்ததும் பதறி விட்டாய். தமிழ் மக்களின் அதிர்ஷ்டம் கைக்குண்டு சக்தியிழந்தது. அன்றைய தாக்குதலில் சுறுசுறுப்பாக எல்லா இடமும் திரிந்தாய். ஒரு வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டது அம்மானை இழந்ததால் இந்த வெற்றியினை நினைத்து பூரிக்கும் நிலையில் நாம் இல்லை.

தொடர்ந்து வந்த இனக்கலவரம் ஆயிரக்கணக்கில் இளைஞர்களை போராட்டத்தில் உள்வாங்கியது. கட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு சில நூறு பேரை மட்டுமே நாம் எம்முடன் இணைத்துக் கொண்டோம். அப்போது நடந்த இரண்டு பயிற்சி முகாம்களில் முதலாவதற்கு பொன்னம்மானும், இரண்டாவதற்கு நீயும் பொறுப்பாக விளங்கினீர்கள். பயிற்சி முகாம் முடிந்து வந்ததும் அதிரடிப் படையினர் மீதான தாக்குதலை பருத்தித்துறையில் நடத்தினாய். பருத்தித்துறை பொலிஸ் நிலையம் வரை அதிரடிப் படையினரை ஓட ஓட விரட்டினாய்.

அதன் பின்னே பருத்தித்துறை பொலிஸ் நிலையம் உனது தலைமையிலான பொதுமக்களின் போராட்டத்தில் உன்னிடம் வீழ்ச்சியடைந்தது. ஆயுதங்கள் பொலிஸ் நிலைய ஆவணங்களுடன் நீயும் நானும் பொலிஸாரிடம் பறிகொடுத்த மோட்டர் சைக்கிளும் எமது கையில் கிடைத்தன.

மோட்டார் சைக்கிள் பறிகொடுத்த அந்தச் சம்பவத்தை நினைக்கையில் உனது நிதானத்தை மெச்சிக்கொள்வேன். கடல்வழிப்பயணம் மேற்கொள்ளும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள நீயும் நானும் பயணமானோம் வழியில் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டோம் எமது உடலை சோதனையிட்ட பொலிஸாரின் கேள்விகளுக்கு நிதானமாக பதிலளித்துக் கொண்டிருந்தாய். கையில் எமது பிலிம்றோல், படங்கள் என்பவற்றை எடுத்த பொலிஸார் "இதென்னடா கிரனைட்டோ" என்று கேட்டபடியே எடுத்த பொருள் கிரனைட்டாக இருக்கவே அதிர்ச்சியடைந்து நின்ற அந்தக் கணநேரத்தில் பொலிஸாரிடமிருந்து பிலிம் றோல், படங்களை என்பவற்றை பறித்துக்கொண்டு "ஓடடா" என என்னையும் கூட்டிக்கொண்டு ஓடினாய். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்தான் எம்மால் பறிகொடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் எமது கையில் கிடைத்தது அனைவருக்கும் மிக மகிழ்ச்சியையே கொடுத்தது.

பொலிஸ் நிலைய ஆவணங்களிலிருந்து கிடைத்த விபரங்களின்படி துரோகி நடராட்ணத்திற்கு உரிய தண்டனை வழங்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டாய்.

ஆனால் உனது சேவை நீண்ட காலம் தமிழினத்திற்குக் கிடைக்க கூடாது என்ற துரதிஷ்டமோ விதி உன்னையும் எம்மையும் பிரித்துவிட்டது. வாகனத்தில் சீலனின் போஸ்டரை ஏற்றிவந்த கிட்டுவின் காருக்கு வழிகாட்டியாக நீ மோட்டார் சைக்கிளில் விக்கியுடன் வந்துகொண்டிருந்தாய். தொண்டமானாற்றில் அதிரடிப் படையினர் உன்னை வழி மறித்த போது நீ அவர்களை போக்குக் காட்டிவிட்டு தப்ப முயன்றாய் ஜீப்பினால் அதிரடிப்படையினர் உன்னை மோத முயன்றனர். வெட்டவெளிப் பிரதேசத்தில் மோட்டார்ச் சைக்கிளை நீ திருப்ப அது எதிர்பாராமல் சேற்றினுள் சிக்கியது. சேற்றிலிருந்து எழும்பி தப்பியோடினீர்கள். அதிரடிப்படையினர் சுட்டனர் தப்பி ஓடிய நீங்கள் ஒரு சைக்கிளை எடுத்தபோது சைக்கிள் உரிமையாளர் தடுத்தார். நிலைமையை விளக்கியபோதும் கொடுக்க வில்லை. முடிவு உங்களை நெருங்கி வந்தது. அதிரடிப்படையினர் துப்பாக்கி வேட்டுகளுக்கு நீ இரையானாய்.

உனது உயிரைக் கொடுத்து பின்னால் காரில் வர இருந்த அனைவரது உயிரையும் நீ காப்பாற்றினாய். உனது தியாகத்தை அர்த்தமுள்ளதாக்கி விட்டாய்.

உன் உயிரைப் பலியெடுத்த அதிரடிப்படையினர் நெடிய காட்டில் எமது கண்ணிவெடியில் பலியாகி விட்டனர். அவர்களிடம் இருந்து கைப்பற்றிய நாட்குறிப்பொன்றில் உன்னைச் சுட்டது தானே என ஒருவன் குறிப்பிட்டிருந்தான்.


இன்று உனது வெற்றிடத்தை நிரப்ப உனது சகோதரன் வந்துவிட்டான். அதை விட நீ உருவாக்கிய அத்தனை வேங்கைகளும் உனது பணியை இன்று தொடர்கின்றனர். அனைவரது இதயத்திலும் 'கட்டைக்குறுவல்' ரஞ்சன் நிலைத்து நிறைந்திருக்கிறான்.

■ அஜித்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

6

# அசையாத அடிக்கல்



கப்டன் பண்டிதர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லா வீரர்களுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் மத்தியில் நடைபெற்ற சமர் ஒன்றில் புலி இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான ப. இரவீந்திரன் (பண்டிதர்) வீரமரணம் அடைந்தார். இந்த நிகழ்ச்சி ஜனவரி 9ம் திகதியன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அச்சுவேலி என்னும் கிராமத்தில் நடைபெற்றது.

அச்சுவேலியிலுள்ள எமது கெரில்லாத் தளமொன்றைப் பெருந்தொகையான சிங்கள இராணுவக்கடையினர் திடீரென முற்றுகையிட்டனர். இதனைத் தொடர்ந்து அத்தளத்திலிருந்த எமது விடுதலை வீரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் மத்தியில் பயங்கரச் சண்டை மூண்டது. நீண்ட நேரமாக நடைபெற்ற இச்சண்டையில் கப்டன் இரவீந்திரன் இறுதிவரை போராடி விடுதலை இலட்சியத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்தார். கப்டன் இரவீந்திரனுடன் நான்கு இளம்புலிகள் வீரமரணம் அடைந்தனர். ஏனைய போராளிகள் முற்றுகையை உடைத்துக்கொண்டு தப்பினர்.

கப்டன் இரவீந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்தியகுழு உறுப்பினராவார். அத்துடன் புலி இயக்கத்தின் நிதியமைப்பிற்கும் ஆயுத பராமரிப்புக்கும் பொறுப்பாக இருந்தார். வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவருக்கு வயது 24. 1977ம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இயக்க வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும் உழைப்பு, இலட்சியப்பற்று ஆகிய சீரிய பண்புகள் நிறைந்த கப்டன் இரவீந்திரன், விடுதலைப் போராளிகளின் அன்புக்கு மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மிகவும் வேண்டியவராக, அவரது வலது கையாகத் திகழ்ந்தார். இயக்க நிர்வாகப் பொறுப்புக்களைச் சுமந்து வந்ததோடு மட்டுமல்லாது கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளிலும் இவர் பங்குபற்றி வந்தார். ஈழத்தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக தனது உயிரை அர்ப்பணித்துக்கொண்ட இந்த வீர மறவனுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

அச்சுவேலித் தாக்குதல் சம்பந்தமாக சிங்கள அரசு விசமத்தனமான பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. புலி இயக்கத்தின் இராணுவத் தலைமையகத்தை அழித்துவிட்டதாகவும் வெற்றி முரசு கொட்டி வருகிறது. இந்தப்பிரச்சாரத்தில் எவ்வித உண்மையுமில்லை. இதை நாம் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறோம். புலி இயக்கத்தின் இராணுவக்கட்டமைப்பின் பெரிதும் சிறிதுமாக ஏராளமான கெரில்லாத் தளங்கள் தமிழீழத்தில் உள்ளன.

அச்சுவேலியிலுள்ள சிறிய கெரில்லாத் தளமொன்றே இம்முற்றுகைக்கு இலக்காகியது. அதுவும் 500க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கனரக ஆயுதங்களுடன் எமது 15 கெரில்லா வீரர்களைத் திடீரென எதிர்பாராமல் சூழ்ந்துகொண்டனர். இந்தச் சண்டையில் 10 புலிக் கெரில்லா வீரர்கள் வீரமுடன் போராடி முற்றுகை அரண்களை உடைத்துக்கொண்டு மீண்டது பெரிய போர்ச்சாதனை என்றே சொல்ல வேண்டும். கெரில்லா வீரர்களைக் கைநழுவவிட்ட இராணுவத்தினர் அச்சுவேலிக் கிராமத்திலுள்ள 50 அப்பாவி இளைஞர்களைக் கைது செய்து அவர்களுக்கு பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தி 'வெற்றி வாகை' சூடிக்கொண்டனர். சிறிலங்கா அரசின் இந்தப் பொய்ப்பிரச்சாரமானது தமிழ்மக்களின் மனவுறுதியை தளரவைத்து சிங்கள ஆயுதப் படைக்கு ஊக்கத்தை அளிக்கும் நாசகார நோக்கத்தைக் கொண்டது. வெறும் பொய்ப்பிரச்சாரத்தின் மூலம் தமிழரின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்கிவிட முடியாது என்பதை சிங்கள அரசுக்கு நாம் உணர்த்தப் போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

■ நன்றி விடுதலைப் புலிகள்குரல் - 6
சித்திரை - 1986



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

1983ம் ஆண்டு யூலை 23ம் திகதி திருநெல்வேலியில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தாக்குதல் பற்றி கேணல் கிட்டு எழுதும் ஓர் களப்பதிவு

# போராட்டத்தை ஆரம்பித்த வரலாற்று நாயகர்களுக்காக...



தேசியத்தலைவருடன் செல்லக்கிளி

**1983** ம் ஆண்டு யூலை 23ம் திகதி இரவு 11மணியளவில் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓர் வெள்ளை நிற டெலிக்கா வான் வந்துகொண்டிருக்கிறது. வானை செல்லக்கிளி செலுத்த அவனை அடுத்து கையில் S.M.G உடன் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறான் விக்ரர். அவனை அடுத்து நான், வானின் பின்பகுதியில் தம்பி, மற்றும் ஏனைய தோழர்கள்.

நாம் முன்பு திட்டமிட்டபடி வான் தபால்பெட்டிச் சந்தியில் நிற்க எல்லோரும் கீழே இறங்கினோம். அங்குதான் கண்ணிவெடி புதைக்க வேண்டும். வான் அந்த இடத்தில் நின்று நாங்கள் இறங்க அயல் சனங்கள் அரவம் கேட்டு வெளியே வரத் தொடங்க விக்ரரும், செல்லக்கிளியும் (இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்) சிங்களத்தில் உரக்கக் கதைத்தபடி றோட்டிலே நடக்கத் தொடங்க வெளிச்சம் போட்ட இருவீடுகளின் விளக்குகளும் அணைந்து விட்டது. யாரும் வெளிவரவில்லை. இராணுவத்தினர் வந்து நிற்கின்றனர் என்று நினைத்து விட்டனர்.

முன்பு திட்டமிட்டபடி அப்பையாஅண்ணா, விக்ரர், செல்லக்கிளி மூவரும் வெடிகளைப் புதைக்க ஆரம்பிக்கின்றனர். விக்ரரும் செல்லக்கிளியும் பிக்கானால் றோட்டிலே கிடங்கு வெட்டுகின்றனர். கண்ணிவெடி புதைப்பது பெரிய வேலை. வெடிமருந்து தயார்ப்படுத்துகையில் வெடிமருந்தின் நச்சுத் தன்மையால் தலையிடிக்கும். என்னுடைய அனுபவப்படி தாங்க முடியாத தலையிடி. அதன்பின் கிடங்கு வெட்டி, (இறுகப் போடப்பட்ட தார் றோட்டிலே கிடங்கு வெட்டுவது அவ்வளவு இலகுவானதல்ல) இவற்றையும் விட தாக்குதலின் போது சண்டையும் போடவேண்டும். எமது தகவலின்படி சுமார் நள்ளிரவு 12 மணியளவில் பலாலியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஜீப் வண்டியிலும், ஒரு ட்ரக் வாகனத்திலும் இராணுவத்தினர் வருவது வழக்கம். ஜீப்பில் 4 இராணுவத்தினரும் ட்ரக்கில் 10 பேர் அளவிலும் வருவார்கள் எனத்தகவல் எமக்கு. யாழ். பல்கலைக்கழக பின்வீதி பலாலி றோட்டை சந்திக்கும் இடமாகிய தபால் பெட்டிச் சந்தியில், கண்ணிவெடி புதைத்து இரண்டாவதாக வரும் வாகனத்துக்கு கண்ணி வெடியால் தாக்க முன்னால் வரும் வாகனத்தைச் சுட்டு மடக்குவது என்று நாம் வகுத்த திட்டம். அதன்படி திருநெல்வேலிச் சந்தியில் ஒரு [illegible] அது அவர்களுடைய வரவை எமக்கு அறிவிக்கும்.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

விக்ரரும் செல்லக்கிளியும் அப்பையா அண்ணையும் கண்ணிவெடி தயார்படுத்திக் கொண்டிருக்கையில் மற்ற எல்லோரும் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களின் உள்ளே பாய்ந்து தத்தமக்கு உரிய இடத்தை தேர்ந்தெடுக்கத் தொடங்கினோம். ஒவ்வொருவருக்கும் இடம் கிடைத்தது. கண்ணிவெடியை புதைத்துக் கொண்டிருக்கையில் விக்ரர் விலகி தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தின் சுவரின் உள்ளே பாய்கின்றான். சுவர் அவனை விட உயரமாக இருக்க பின்பு வெளியில் குதித்து உயரம் வைப்பதற்காக தெருவில் தேடி சில பெரிய கற்களை எடுத்து உள்ளே போட்டு தன் உயரத்தைச் சரிப்படுத்திக்கொண்டு அந்த சுவரின் மறைவைக் கொண்டு தன் நிலையை சீர்படுத்திக் கொள்கிறான். துப்பாக்கியை தோளில் வைத்து இயக்கிப் பார்க்கும் விதங்களையும், துப்பாக்கியை இலகுவாக இயக்கமுடியுமா என்பதையும் சரி பார்த்துக் கொள்கின்றான்.

தம்பி (பிரபாகரன்) தபால் பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல்வேலிப்பக்கமாக உள்ள ஒரு வீட்டின் சுவரின் பின்னே நிலையை எடுத்து தாக்குதலுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கையில் வோக்கி செல்லக்கிளியை கூப்பிடுகின்றது.

செல்லக்கிளி அம்மான் மிக அவசரமாக தன் வேலையை முடித்துக் கொண்டு மீதி வேலையை அப்பையா அண்ணையிடம் விட்டு விட்டு தனது நிலைக்குச் செல்கின்றான். அம்மான் அருகில் உள்ள ஒரு கடையின் மேல் வெடிக்க வைக்கும் கருவியுடனும் தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடனும் தயாராகின்றான்.

வெளிச்சம் எமக்கும் தெரிந்தது. அப்படி வேலை முடியவில்லை. விக்ரர் "அப்பையா அண்ணை வெளிச்சம் வருகின்றது கெதியா மாறுங்கோ" என்று கத்த அப்பையா அண்ணை வயர் ரோல்களுக்கு டேப் சுற்றிக் கொண்டிருக்கையில், வோக்கி மீண்டும் அலறியது. "அம்மான் நாங்கள் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்தான் முன்னால் ஜீப், பின்னால் ட்ரக்" என்று அறிவித்தது. எனவே அம்மான் ட்ரக் வண்டிக்கு கண்ணிவெடியால் தாக்க முன்னால் வரும் ஜீப்புக்கு நாம் தாக்குதல் தொடுக்கத் தயாராகிக் கொண்டிருக்கையில் வெளிச்சங்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன.

ஜீப்பை எம்மிடம் வரவிட்டு பின்னால் வரும் ட்ரக்வண்டியை கண்ணிவெடியால் தாக்கி அதில் தப்புபவர்களைச் சுடுவதாக எமது திட்டம். ட்ரக் வண்டியில் பின்பக்கமாக இருப்பவர்களை சுடக்கூடியவாறு விக்ரர் நிற்கின்றான். விக்ரரையும் தாண்டுபவர்களை கவனிக்க தம்பியும் சில தோழர்களும் நிற்கின்றனர். வெளிச்சங்கள் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து வந்துகொண்டிருந்தது. நான் எட்டிப்பார்த்தேன். முன்னால் இரு விளக்குகளுடன் ஒரு வாகனம். அந்த விளக்குகளுக்கிடையிலான இடைவெளியைக் கொண்டு அது ஜீப் என்று புரிந்துகொண்டேன். அடுத்து ட்ரக் மெல்ல வந்து கொண்டிருக்கின்றன. நாம் ஜீப்பைத் தாக்குவதற்குத் தயாராகிக்கொண்டிருக்க ஜீப் விக்ரர் நின்ற இடத்தைத் தாண்டி கண்ணி வெடி வைத்த இடத்தை அண்மித்த போது கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்டுவிடுகிறது. எமக்கு அதிர்ச்சி. ஏன் அப்படி நடந்தது?. சிந்திக்க நேரமில்லை. உண்மையில் ஜீப்வண்டியை விட்டு பின்னால் வரும் ட்ரக் வண்டிக்கே கண்ணிவெடி வைக்க இருந்தோம். இன்றுவரை அது ஏன் ஜீப்புக்கு வெடிக்க வைக்கப்பட்டது என்பது தெரியாது. ஏனென்றால் அதை வெடிக்க வைத்த செல்லக்கிளி அதை விளக்கவில்லை. சண்டை முடிந்தபோது அவனை நாம் இழந்துவிட்டோம்.

சிந்திக்க நேரமில்லை. உடனே நானும் என்னோடு நின்றவர்களும் சுடத்தொடங்கினோம். ஜீப்பின் வெளிச்சம் அணையவில்லை. எனவே பின்னால் நடப்பவை எமக்குத் தெரியவில்லை. எனது G3யால் இரு விளக்குகளையும் குறிபார்த்து உடைத்தேன். விளக்கு உடைந்ததும் பின்னால் நின்ற ட்ரக்கின் வெளிச்சத்தில் ஜீப்பில் இருந்து சில உருவங்கள் இறங்குவதைக் கண்டு அவற்றை நோக்கியும் ஜீப்பை நோக்கியும் ரவைக் கூட்டில் போடப்பட்டு இருந்த அத்தனை குண்டுகளையும் சுட்டேன். அது இப்படி இருக்க விக்ரரைப் பார்ப்போம்.

ஜீப் வண்டி அவனைத் தாண்டும் போது விக்ரர் தன் தலையை சுவருக்கு உள்ளே இழுத்துக்கொண்டு நிற்கையில் மிகப்பெரிய சத்தத்துடன் கண்ணிவெடி வெடிக்கிறது. விக்ரர் தலையை நிமிர்த்திப் பார்க்க ஒரே புழுதிமண்டலம். மங்கலாக ஒருவன் வெடித்த ஜீப்பில் இருந்து ஓடிவருவது தெரிய அவனைக் குறிவைத்து விசையை அழுத்த, சில குண்டுகள் அவனின் உடலில் பாய அவன் தூக்கி எறியப்படுகிறான். அப்படியே சுருண்டுவிழுந்து விட்டான். இன்னுமொருவன் ஓடிவர மீண்டும் சுட குண்டுகள் அவனை வீழ்த்தவில்லை. ஆனால் காயப்படுத்தின. ஆனால் அவன் காயத்துடன் பல்கலைக்கழகப் பின் வீதியால் ஓடினான். விக்ரர் அவனைத் திரும்பிச் சுட்டான். வானளவு உயர்ந்த புழுதி மண்டலம் அடங்கவில்லை. மற்றும் தகுந்த வெளிச்சம் இல்லை. எனவேதான் சரியாகச் சுடமுடியவில்லை. அவன் ஓடினான். ஜீப்புக்கு கிட்டே ஒன்றோ இரண்டோ துப்பாக்கிகள் விக்ரரை நோக்கிச் சுட்டன. அதன் சுவாலையை விக்ரர் கண்டான். தன் இயந்திரத் துப்பாக்கியால் அந்த சுவாலையை இலக்காக வைத்து சில வேட்டுக்களைத் தீர்த்தான். பின்பு அடங்கி விட்டது. மேலும் ஒரு சில உருவங்கள் தெரிய அவற்றை நோக்கியும் சில குண்டுகளைச் சுட்டான். துப்பாக்கி திடீரென்று நின்று விட்டது. விக்ரருக்கு விளங்கி விட்டது. போடப்பட்ட குண்டுகள் தீர்ந்துவிட்டது. குண்டுகள் நிரப்பப்பட்ட மறு ரவைக் கூட்டைமாற்றி மீண்டும் சுட்டான். அதேவேளை பின்னால் வந்த ட்ரக் வண்டியின் சாரதி வெடி வெடித்ததைப் பார்த்தான். அவன் உடல் சில்லிட்டது. பெரிய வெளிச்சத்தையும், ஜீப் மேலே தூக்கி எறியப்பட்டதையும் கண்ட சாரதி தன்னை அறியாமலே பிரேக்கை இறுக அமுத்தினான். ஏன் பிரேக் அமுத்தும் மிதி மீது ஏறி நின்றான் என்றே கூறலாம்.

ட்ரக் பிரேக் போட்டு நின்றதும் ட்ரக்கின் பின்புறத்தில் இராணுவத்தினர் தம் துப்பாக்கியை தயாராக்கியவாறு இருக்கையிலிருந்து எழுந்தொடங்கினர். தம்பி இரு வாகனங்களும் தன்னைத் தாண்டும் மட்டும் சுவரின் மறைவிலே குந்தியிருக்க, இரு வாகனங்களும் அவனைத் தாண்டுகிறது. சிறிதாக நிமிர்ந்து பார்க்கையில் ஜீப் வண்டி கண்ணிவெடியை நெருங்கிக் கொண்டிருக்க ட்ரக் அவருக்கு 20 யார் தூரத்தில் சென்றுகொண்டிருக்க கண்ணிவெடி வெடித்தது. ட்ரக் அவருக்கு மிகக்கிட்ட கையில் எட்டிப்பிடிக்குமாப் போல் தூரத்தில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விக்ரரும் செல்லக்கிளியும் அப்பையா அண்ணையும் கண்ணிவெடி தயார்ப்படுத்திக் கொண்டிருக்கையில் மற்ற எல்லோரும் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களின் உள்ளே பாய்ந்து தத்தமக்கு உரிய இடத்தை தேர்ந்தெடுக்கத் தொடங்கினோம். ஒவ்வொருவருக்கும் இடம் கிடைத்தது. கண்ணிவெடியை புதைத்துக் கொண்டிருக்கையில் விக்ரர் விலகி தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தின் சுவரின் உள்ளே பாய்கின்றான். சுவர் அவனை விட உயரமாக இருக்க பின்பு வெளியில் குதித்து உயரம் வைப்பதற்காக தெருவில் தேடி சில பெரிய கற்களை எடுத்து உள்ளே போட்டு தன் உயரத்தைச் சரிப்படுத்திக்கொண்டு அந்த சுவரின் மறைவைக் கொண்டு தன் நிலையை சீர்படுத்திக் கொள்கிறான். துப்பாக்கியை தோளில் வைத்து இயக்கிப் பார்க்கும் விதங்களையும், துப்பாக்கியை இலகுவாக இயக்கமுடியுமா என்பதையும் சரி பார்த்துக் கொள்கின்றான்.

தம்பி (பிரபாகரன்) தபால் பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல்வேலிப்பக்கமாக உள்ள ஒரு வீட்டின் சுவரின் பின்னே நிலையை எடுத்து தாக்குதலுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கையில் வோக்கி செல்லக்கிளியை கூப்பிடுகின்றது.

செல்லக்கிளி அம்மான் மிக அவசரமாக தன் வேலையை முடித்துக் கொண்டு மீதி வேலையை அப்பையா அண்ணையிடம் விட்டு விட்டு தனது நிலைக்குச் செல்கின்றான். அம்மான் அருகில் உள்ள ஒரு கடையின் மேல் வெடிக்க வைக்கும் கருவியுடனும் தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடனும் தயாராகின்றான்.

வெளிச்சம் எங்கும் தெரிந்தது அப்படி வேலை முடியவில்லை. விக்ரர் "அப்பையா அண்ணை வெளிச்சம் வருகின்றது கெதியா மாறுங்கோ" என்று கத்த அப்பையா அண்ணை வயர் ரோல்களுக்கு ரேப் சுத்திக் கொண்டிருக்கையில், வோக்கி மீண்டும் அலறியது "அம்மான் நாங்கள் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்தான் முன்னால் ஜீப், பின்னால் ட்ரக்" என்று அறிவித்தது. எனவே அம்மான் ட்ரக் வண்டிக்கு கண்ணிவெடியால் தாக்க முன்னால் வரும் ஜீப்புக்கு நாம் தாக்குதல் தொடுக்கத் தயாராகிக் கொண்டிருக்கையில் வெளிச்சங்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன.

ஜீப்பை எம்மிடம் வரவிட்டு பின்னால் வரும் ட்ரக்வண்டியை கண்ணிவெடியால் தாக்கி அதில் தப்புபவர்களைச் சுடுவதாக எமது திட்டம். ட்ரக் வண்டியில் பின்பக்கமாக இருப்பவர்களை சுடக்கூடியவாறு விக்ரர் நிற்கின்றான். விக்ரரையும் தாண்டுபவர்களை கவனிக்க தம்பியும் சில தோழர்களும் நிற்கின்றனர். வெளிச்சங்கள் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து வந்துகொண்டிருந்தது. நான் எட்டிப்பார்த்தேன். முன்னால் இரு விளக்குகளுடன் ஒரு வாகனம், அந்த விளக்குகளுக்கிடையிலான இடைவெளியைக் கொண்டு அது ஜீப் என்று புரிந்துகொண்டேன். அடுத்து ட்ரக் மெல்ல வந்து கொண்டிருக்கின்றன. நாம் ஜீப்பைத் தாக்குவதற்குத் தயாராகிக்கொண்டிருக்க ஜீப் விக்ரர் நின்ற இடத்தைத் தாண்டி கண்ணிவெடி வைத்த இடத்தை அண்மித்த போது கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்டுவிடுகிறது. எமக்கு அதிர்ச்சி. ஏன் அப்படி நடந்த[illegible] நேரமில்லை உண்மையில் ஜீப்வண்டியை விட்டு பின்னால் வரும் ட்ரக் வண்டிக்கே கண்ணிவெடி வைக்க இருந்தோம். இன்றுவரை அது ஏன் ஜீப்புக்கு வெடிக்க வைக்கப்பட்டது என்பது தெரியாது. ஏனென்றால் அதை வெடிக்க வைத்த செல்லக்கிளி அதை விளக்கவில்லை. சண்டை முடிந்தபோது அவனை நாம் இழந்துவிட்டோம்.

சிந்திக்க நேரமில்லை. உடனே நானும் என்னோடு நின்றவர்களும் சுடத்தொடங்கினோம். ஜீப்பின் வெளிச்சம் அணையவில்லை. எனவே பின்னால் நடப்பவை எமக்குத் தெரியவில்லை. எனது ஜி3யால் இரு விளக்குகளையும் குறிபார்த்து உடைத்தேன். விளக்கு உடைந்ததும் பின்னால் நின்ற ட்ரக்கின் வெளிச்சத்தில் ஜீப்பில் இருந்து சில உருவங்கள் இறங்குவதைக் கண்டு அவற்றை நோக்கியும் ஜீப்பை நோக்கியும் ரவைக் கூட்டில் போடப்பட்டு இருந்த அத்தனை குண்டுகளையும் சுட்டேன். அது இப்படி இருக்க விக்ரரைப் பார்ப்போம்.

ஜீப் வண்டி அவனைத் தாண்டும் போது விக்ரர் தன் தலையை சுவருக்கு உள்ளே இழுத்துக்கொண்டு நிற்கையில் மிகப்பெரிய சத்தத்துடன் கண்ணிவெடி வெடிக்கிறது. விக்ரர் தலையை நிமிர்த்திப் பார்க்க ஒரே புழுதிமண்டலம். மங்கலாக ஒருவன் வெடித்த ஜீப்பில் இருந்து ஓடிவருவது தெரிய அவனைக் குறிவைத்து விசையை அழுத்த, சில குண்டுகள் அவனின் உடலில் பாய அவன் தூக்கி எறியப்படுகிறான். அப்படியே சுருண்டுவிழுந்து விட்டான். இன்னுமொருவன் ஓடிவர மீண்டும் சுட குண்டுகள் அவனை வீழ்த்தவில்லை. ஆனால் காயப்படுத்தின. ஆனால் அவன் காயத்துடன் பலகைகளுக்கூடாக பின் வீதியால் ஓடினான். விக்ரர் அவனைத் திருப்பிச் சுட்டான். எனினும் உயர்ந்த புழுதி மண்டலம் அடங்கவில்லை. மற்றும் நல்ல வெளிச்சம் இல்லை. எனவேதான் சரியாகச் சுட முடியவில்லை. அவன் ஓடிவிட்டான். ஜீப்புக்கு கிட்டே ஒன்றோ இரண்டோ துப்பாக்கிகள் விக்ரரை நோக்கிச் சுட்டன. அதன் சுவாலையை விக்ரர் கண்டான். தன் இயந்திரத் துப்பாக்கியால் அந்த சுவாலையை இலக்காக வைத்து சில வேட்டுக்களைத் தீர்த்தான். பின்பு அடங்கி விட்டது. மேலும் ஒரு சில உருவங்கள் தெரிய அவற்றை நோக்கியும் சில குண்டுகளைச் சுட்டான். துப்பாக்கி திடீரென்று நின்று விட்டது. விக்ரருக்கு விளங்கி விட்டது. போடப்பட்ட குண்டுகள் தீர்ந்துவிட்டது. குண்டுகள் நிரப்பப்பட்ட மறு ரவைச் சட்டத்தைமாற்றி மீண்டும் சுட்டான். அதேவேளை பின்னால் வந்த ட்ரக் வண்டியின் சாரதி வெடி வெடித்ததைப் பார்த்தான். அவன் உடல் சில்லிட்டது. பெரிய வெளிச்சத்தையும், ஜீப் மேலே தூக்கி எறியப்பட்டதையும் கண்ட சாரதி தன்னை அறியாமலே பிரேக்கை இறுக அமுக்கினான். ஏன் பிரேக் அமுக்கும் மிதி மீது ஏறி நின்றான் என்றே கூறலாம்.

ட்ரக் பிரேக் போட்டு நின்றதும் ட்ரக்கின் பின்புறத்தில் இராணுவத்தினர் தம் துப்பாக்கியை தயாராக்கியவாறு இருக்கையிலிருந்து எழத்தொடங்கினர். தம்பி இரு வாகனங்களும் தன்னைத் தாண்டு மட்டும் சுவரின் மறைவிலே குந்தியிருக்க, இரு வாகனங்களும் அவனைத் தாண்டுகிறது. சிறிதாக நிமிர்ந்து பார்க்கையில் ஜீப் வண்டி [illegible] நெருங்கிக் கொண்டிருக்க ட்ரக் அவருக்கு 20 யார் தூரத்தில் சென்றுகொண்டிருக்க கண்ணிவெடி வெடித்தது. ட்ரக் அவருக்கு மிகக்கிட்ட கையில் எட்டிப்பிடிக்குமாப் போல் தூரத்தில்

Tamileelam Archive



லெப். கேணல் விக்டர்

பிரேக் போட்டதால் குலுங்கி நிற்க தான் எப்போதும் உடன் வைத்திருக்கும் அவருடைய G3 A3 வெடிக்கத் தொடங்கியது. ட்ரக்கின் இருக்கையில் இருந்து இராணுவத்தினர் எழுந்தும் எழாததுமான நிலையில் தம்பியின் G3 யிலிருந்து புறப்பட்ட சூடான ரவைகள் தாக்குதலுக்குத் தயாராக எழுந்த இராணுவத்தினரை வரிசையாக வீழ்த்தத்தொடங்கியது. சற்றும் எதிர்பாராமல் ஏற்பட்ட இத்திருப்பம் தம்பியை சிக்கவைத்துவிட்டது. ஆனால், இந்த எதிர்பாராத திருப்பமே இப்போரின் முழு வெற்றிக்கு வழி அமைத்தது எனலாம். மிகத் துரிதமாகவும் குறிதவறாமலும் துப்பாக்கியை கையாள்வதில் முதன்மையாளராகத் திகழும் தம்பியிடம் ட்ரக்கில் வந்த 9 இராணுவத்தினரும் சிக்கியதே எமது முழு வெற்றிக்கு வழி கோலியது.

ட்ரக் மிகக் கிட்ட நிற்பதால் இலகுவாக தம்பியால் அவர்களைச் சுடமுடிந்தது. வெடியின் அதிர்வில் தெரு விளக்குகள் அணைந்துவிட்ட பொழுதிலும் மிகக் கிட்டேயிருப்பதால் ஒவ்வொருவராகக் குறிவைத்துச் சுட்டார். ஆனால் மிக அபாயகரமான நிலை அவருக்கு. இராணுவத்தினரைப் பொறுத்தவரையில் தம்பி மிகக் கிட்டே நிற்கிறார். எதிர்பாராமல் இத்தாக்குதலில் மிக அபாயத்தின் எல்லையில் தம்பிதான் நிற்கிறார். ஆனால் தனது ஆளுமையால், ஆற்றலால் வரிசையாக இராணுவத்தினரை வீழ்த்தி வந்த போதிலும் இரண்டு சாதுரியமான இராணுவத்தினர் ட்ரக்கிலிருந்து கீழே சில்லுக்குள் புகுந்துகொண்டு, மறைந்திருந்து தமது தாக்குதலை ஆரம்பித்தார்கள். தம்பி நின்ற சுவரில் வேட்டுக்கள் பட்டுத் தெறித்துக்கொண்டிருந்தன. இத்துடன் ட்ரக்கின் முன்புறத்தில் இருந்தவர்களும் கீழே பாய எத்தனித்தனர். இதை நோக்கி தம்பியின் G3 இவர்களையும் நோக்கி முழங்கியது.

இதிலே மிகவும் சங்கடம் என்னவென்றால் தம்பிக்கு உதவிக்கு ஒருவருமே இல்லை. நாம் எமது திட்டத்தின் படி ஜீப்பை முன்னே விட்டு ட்ரக் வண்டிக்கு கண்ணிவெடித் தாக்குதல் செய்வதாக இருந்தோம். அந்திட்டத்தின்படி தம்பியை மிகப் பின்னுக்கு வைத்திருந்தோம். ஆனால் இப்போ தனியாகவே ட்ரக்கை சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தம்பி தள்ளப்பட்டு விட்டார். இதே நேரம் ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்த விக்ரர் தனக்கு 20 யார் பின்னே ட்ரக் நிற்பதையும் அதிலிருந்து துப்பாக்கிகள் சடசடப்பதையும் அவதானித்தான். தன் இயந்திரத் துப்பாக்கியை ட்ரக்கை நோக்கித் திருப்பினான். ட்ரக்கின் முன் கண்ணாடிகள் சிதறுகின்றன. கண்ணாடிக்கு குறுக்காக ஓர் நீள வரிசையாகச் சுட்டான். அப்போதுதான் சாரதி இறந்திருக்க வேண்டும். நாம் பின்பு பார்த்தபோது தனது இருக்கையிலேயே ஸ்ரேறிங்கில் சாய்ந்து வாயால் இரத்தம் கக்கியபடி உயிரை விட்டிருந்தான்.

விக்ரரின் இடத்திலிருந்து சற்று முன்னோக்கி எதிரில் இருந்த ஒழுங்கையிலிருந்து 'பசீர் காக்கா' நிப்பிட்டரால் ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார். நிப்பிட்டரில் தோட்டாக்கள் முடியும்போது அதை மாற்றித் திருப்பித் தாக்கும் படி சொல்லி உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார் காக்காவின் அருகிலிருந்த அய்யா அண்ணை. அப்போது ஒழுங்கையை நோக்கி ஒருவன் S.M.G உடன் ஓடி வந்தான். "சுடு" என்ற அய்யாஅண்ணை உடனே "கவனம் எங்கட பொடியனோ தெரியாது பார்த்துச் சுடு" என்றார். நிப்பிட்டர் சத்தம் ஓய வந்தவன் பிணமாகச் சரிந்தான். அவனது S.M.G யை அய்யா அண்ணை ஓடிவந்து எடுத்துக் கொண்டார். இவனே ரோந்துப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய லெப்டினன்ட் என்பதை பின்னர் தெரிந்து கொண்டோம். அவனது விசேட இராணுவப் பட்டிகள் அதை உறுதிப்படுத்தின.

இதே நேரம் தம்பி தனியே நிற்பதை உணர்ந்து ரஞ்சனையும் இன்னொரு போராளியையும் "தம்பியிடம் ஓடு" என்று துரத்தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர். ஆனால் ரஞ்சனும் சக போராளியும் தம்பியை நோக்கி சென்றடைந்த போது ட்ரக்கிலிருந்த அனைத்து துப்பாக்கிகளையும்



லெப்.கேணல் விக்டர்

பிரேக் போட்டதால் குலுங்கி நிற்க தான் எப்போதும் உடன் வைத்திருக்கும் அவருடைய G3 A3 வெடிக்கத் தொடங்கியது. ட்ரக்கின் இருக்கையில் இருந்து இராணுவத்தினர் எழுந்தும் எழாததுமான நிலையில் தம்பியின் G3 யிலிருந்து புறப்பட்ட சூடான ரவைகள் தாக்குதலுக்குத் தயாராக எழுந்த இராணுவத்தினரை வரிசையாக விழுத்தத்தொடங்கியது. சற்றும் எதிர்பாராமல் ஏற்பட்ட இத்திருப்பம் தம்பியை சிக்கவைத்துவிட்டது. ஆனால், இந்த எதிர்பாராத திருப்பமே இப்போரின் முழு வெற்றிக்கு வழி அமைத்தது எனலாம். மிகத் துரிதமாகவும் குறிதவறாமலும் துப்பாக்கியை கையாள்வதில் முதன்மையானவராகத் திகழும் தம்பியிடம் ட்ரக்கில் வந்த 9 இராணுவத்தினரும் சிக்கியதே எமது முழு வெற்றிக்கு வழி கோலியது.

ட்ரக் மிகக் கிட்ட நிற்பதால் இலகுவாக தம்பியால் அவர்களைச் சுடமுடிந்தது. வெடியின் அதிர்வில் தெரு விளக்குகள் அணைந்துவிட்ட பொழுதிலும் மிகக் கிட்டே நிற்பதால் ஒவ்வொருவராகக் குறிவைத்துச் சுட்டார். ஆனால் மிக ஆபத்தான நிலை அவருக்கு. இராணுவத்தினரைப் பொறுத்தவரையில் தம்பி மிகக் கிட்டே நிற்கிறார். எதிர்பாராமல் இத்தாக்குதலில் மிக ஆபத்தின் எல்லையில் தம்பிதான் நிற்கிறார். ஆனால் தனது ஆளுமையால், ஆற்றலால் வரிசையாக இராணுவத்தினரை விழுத்தி வந்த போதிலும் இரண்டு சாதுரியமான இராணுவத்தினர் ட்ரக்கிலிருந்து கீழே சில்லுக்குள் புகுந்துகொண்டு, மறைந்திருந்து தமது தாக்குதலை ஆரம்பித்தார்கள். தம்பி நின்ற சுவரில் வேட்டுக்கள் பட்டுத் தெறித்துக்கொண்டிருந்தன. இத்துடன் ட்ரக்கின் முன்புறத்தில் இருந்தவர்களும் கீழே பாய எத்தனித்தனர். இதை நோக்கி தம்பியின் G3 இவர்களையும் நோக்கி முழங்கியது.

இதிலே மிகவும் சங்கடம் என்னவென்றால் தம்பிக்கு உதவிக்கு எவருமே இல்லை. நாம் எமது திட்டத்தின் படி ஜீப்பை முன்னே விட்டு ட்ரக் வண்டிக்கு கண்ணிவெடித் தாக்குதல் செய்வதாக இருந்தோம். அத்திட்டத்தின்படி தம்பியை மிகப் பின்னுக்கு வைத்திருந்தோம். ஆனால் இப்போ தனியாகவே ட்ரக்கை சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தம்பி தள்ளப்பட்டு விட்டார். இதே நேரம் ஜீப்பை நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்த விக்ரர் தனக்கு 20 யார் பின்னே ட்ரக் நிற்பதையும் அதிலிருந்து துப்பாக்கிகள் சடசடப்பதையும் அவதானித்தான். தன் இயந்திரத் துப்பாக்கியை ட்ரக்கை நோக்கித் திருப்பினான். ட்ரக்கின் முன் கண்ணாடிகள் சிதறுகின்றன. கண்ணாடிக்கு குறுக்காக ஓர் நீள வரிசையாகச் சுட்டான். அப்போதுதான் சாரதி இறந்திருக்க வேண்டும். நாம் பின்பு பார்த்தபோது தனது இருக்கையிலேயே ஸ்ரேறிங்கில் சாய்ந்து வாயால் இரத்தம் கக்கியபடி உயிரை விட்டிருந்தான்.

விக்ரரின் இடத்திலிருந்து சற்று முன்னோக்கி எதிரில் இருந்த ஒழுங்கையிலிருந்து 'பசீர் காக்கா' நிப்பட்டரால் ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார். நிப்பட்டரில் தோட்டாக்கள் முடியும்போது அதை மாற்றித் திருப்பித் தாக்கும் படி சொல்லி உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார் காக்காவின் அருகிலிருந்த அய்யர் அண்ணை. அப்போது ஒழுங்கையை நோக்கி ஒருவன் S.M.G உடன் ஓடி வந்தான். "சுடு" என்ற அய்யர் அண்ணை உடனே "கவனம் எங்கட பொடியளோ தெரியாது பார்த்துச் சுடு" என்றார். நிப்பட்டர் சத்தம் ஓய வந்தவன் பிணமாகச் சரிந்தான். அவனது S.M.G யை அய்யர் அண்ணை ஓடிவந்து எடுத்துக் கொண்டார். இவனே ரோந்துப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய லெப்ரினன்ட் என்பதை பின்னர் தெரிந்து கொண்டோம். அவனது விசேட இராணுவப் பட்டிகள் அதை உறுதிப்படுத்தின.

இதே நேரம் தம்பி தனியே நிற்பதை உணர்ந்து ரஞ்சனையும் இன்னொரு போராளியையும் "தம்பியிடம் ஓடு" என்று துரத்தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர். ஆனால் ரஞ்சனும் சக போராளியும் தம்பியை நோக்கி நடந்த போது ட்ரக்கிலிருந்த அனைத்து துப்பாக்கிகளையும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல் சந்தோசம், லெப்.கேணல் பொன்னம்மான்

தம்பியின் தனி ஒரு G3 ஓய்வெடுத்து விட்டது. சாதாரணமாக வரும் நடைமுறைக்கரிய இவ் வீரச்செயலை முடித்துவிட்டு அமைதியாக வீட்டின் அருகேயுள்ள மாமரத்தின் கீழிருந்து முடிந்த ரவைக்கூட்டிற்கு ரவைகளை நிரப்பிக் கொண்டிருந்தார் தம்பி. மதிலேறிக்குதித்த ரஞ்சனும் மற்றைய போராளியும் ஆயுதத்தோடு ஒரு நபர் இருப்பதைக் கண்டு ஆயுதத்தைத் தயார்நிலைக்குக் கொண்டு வந்து "யாரது" என்று முன்னே வந்தனர்.

"அது நான்ராப்பா" என்றவாறு ரஞ்சனை அடையாளம் கண்ட தம்பி இங்கே எல்லாம் முடிந்தது உங்கடை பக்கம் எப்படி என்றார். "அண்ணை எங்கடை பக்கம் பிரச்சினையில்லை" என்றார் ரஞ்சன். "இங்கையும் எல்லாம் முடிந்து விட்டது. ஆனால் , எனக்கு சற்று முன்பாக எதிரேயிருந்த புலேந்திரனையும் சந்தோசத்தையும் காண வில்லை. காயக்கட்டிட்டாங்களோ தெரியவில்லை, வா பார்ப்போம்" என்றவாறு தன் பிரியத்திற்குரிய G3 யையும் தூக்கிக்கொண்டு விரைந்தார் தம்பி.

மதிலேறிக் குதிப்பதற்குமுன் ரஞ்சனுடன் வந்த போராளி தம்பியின் அனுமதியைப் பெற்று எதற்கும் முன்னெச்சரிக்கையாக ஓர் குண்டை வீசினான். குண்டு ட்ரக்கின் கீழ் விழுந்து வெடித்து எரிபொருள் தாங்கியை உடைத்தது. இதன்பின் மதிலேறிக் குதித்து றோட்டைத் தாண்டி புலேந்திரன் சந்தோசத்தின் இடத்தையடைந்தான். அங்கு புலேந்திரன் சந்தோசத்தைக் காணவில்லை. "எதற்கும் முதலில் இறந்தவர்களின் ஆயுதங்களைச் சேகரியுங்கள்" எனக் கட்டளையிட்டார் தம்பி. மதிலேறி றோட்டில் குதிக்க ஆயத்தமான ரஞ்சனுடன் வந்த மற்ற வீரன் தம்பியைப் பார்த்து "அண்ணை அவன் அனுங்குகிறான்" மீண்டும் ஒருமுறை முழங்கிய G3 அவனின் அனுங்கலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இதன் பின் ட்ரக்கை நெருங்கி ஆயுதங்களை சேகரிக்கத் தொடங்கினர். தம்பி எதற்கும் என்று வெளியே கிடந்த இராணுவத்தினரின் தலையில் இறுதி அத்தியாயத்தை G3 ஆல் எழுதிவைத்தார். இதே நேரம் பல்கலைக் கழக பின் வீதியால் ஓடிய ஓர் இராணுவவீரனை இன்னோர் போராளி துரத்திச் சென்று சுட்டான். நிலைமை முற்றாக முடிந்துவிட்டு பொன்னம்மானும் நானும் என்னுடைய போராளிகளும் ட்ரக்கை நோக்கி நடு றோட்டால் ஓடினோம். "கரையால் வாருங்கள்" என்ற குரல் எம்மை வரவேற்றது. எல்லோரும் தம்பியை சூழ்ந்துகொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டு ஆயுதங்களைப் பொறுக்கத்தொடங்கினோம். இதற்கிடையில் பொன்னம்மான் அதீத மகிழ்ச்சியுடன் இறந்து கிடந்த இராணுவத்தினரின் ஹெல்மெட்டை தலையில் போட்டுக்கொண்டு ட்ரக்கின் கீழே இறந்துகிடந்த இராணுவ வீரர்களினது ஆயுதங்களை தேடி எடுத்துக்கொண்டான்.

இத் தாக்குதல் இரவு நேரமாதலால் எம்மையும் இராணுவத்தினரையும் வேறு பிரிக்க நாம் ஹெல்மெட்டைத் தான் குறியீடாகப் பாவித்தோம். எனவே ஹெல்மெட்டுடன் ஓர் உருவம் நகர்வதைக் கண்ட தம்பி உடனடியாக துப்பாக்கியை தயார்நிலைக்கு கொண்டு வந்து "யாரது" என்று வினவ அம்மான் "அது நான் தம்பி" என்றவாறு தனது தவறை உணர்ந்து ஹெல்மெட்டைக் கழற்றினார். பொன்னம்மானை செல்லமாக கண்டித்தவாறு எல்லோரையும் சரிபார்க்குமாறு தம்பி பணிக்க "அம்மானைக் காண வில்லை" என்று விக்ரர் கத்தினான். விக்ரரும் புலேந்திரனும் அம்மான் நின்ற கடையின் மேல் ஏறினர். "டேய் அம்மானுக்கு வெடி விழுந்திட்டுது" என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரொலித்தது. எல்லோரும் அங்கே ஓட நான் வானை எடுத்து வந்தேன். வானில் அம்மானை ஏற்றும்போது அம்மானின் உடல் குளிர்ந்துவிட்டது.

லிங்கம் இறுதியாக இராணுவத்தினரின் தலையில் போட்ட ரெஜி ஆயுதங்களைப் பொறுக்கினான். வான் புறப்படத் தொடங்க மறுபடியும் மெதுவாகத் தன் கரங்களால் வாழ்த்துத் தெரிவித்தது. எமது செல்லக்கிளி அம்மானின் மரணத்திற்காக இடியும் மின்னலும் சேர்ந்து இறுதி வணக்கம் செலுத்த வான் எமது முகாம் நோக்கிப் பறந்தது.


■ அன்புடன் கிட்டு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழத்தின் அடிக்கல் **7**

# றெஜி



கப்டன் றெஜி

## 21-4-87

காலை, ஈழமுரசு பத்திரிகையில் ஒட்டிசுட்டான் படைமுகாம் தாக்குதலில் படையினர் பலர் பலி. 4 மணி நேரத் தாக்குதல். நாற்பதுக்கு மேற்பட்ட மோட்டார்களை போராளிகள் பயன்படுத்தினர். என்ற செய்தியை வாசித்தேன்.

ஒரு ஏ.கே கூட இல்லாமல் நாங்கள் இதே கட்டடத்தை எமது சொந்த ஆயுதங்களுடன் தாக்கி வெற்றி பெற்ற அந்த நினைவுகள் என்னுள் எழுந்தன.

ஒட்டிசுட்டான் படைமுகாம் தாக்குதல் வெற்றியில் றெஜியின் பங்களிப்பு பெரிது. அவர் வன்னியில் செயற்பட வந்த காலங்களில் ஏதாவது தாக்குதல் நடத்த வேண்டும் எனத் துடியாகத் துடித்தார். அவர் ஒட்டிசுட்டானில் கண் வைத்தார். அன்றிலிருந்து ஒட்டிசுட்டான் தாக்கப்படும்வரை ஓய்வொழிச்சல் இல்லாது வேலைசெய்தார். ஒட்டிசுட்டான் தாக்குதல் பற்றி கதைக்கும் போது பையன்கள் றெஜி அண்ணாவைப் பற்றி கட்டாயம் குறிப்பிடுவார்கள்.

பொதுவாக றெஜி அண்ணாவைச் சந்திக்கும் பையன்கள் பயப்படுவார்கள். ஏனெனில் தன்னைப் போலவே எல்லோரும் ஒழுங்காக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் தன்மை இவரிடமிருந்தது.

றெஜியின் கட்டுப்பாட்டைப் பற்றி எமது மூத்த உறுப்பினர்கள் கதைக்கும் போது.

முன்பு இயக்கத்தில் சேருவது மிகக் கஷ்டம் ஒவ்வொருவரையும் நீண்ட காலத்தின் பின்னரே முழு நேர உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வார்கள். பகுதி நேர உறுப்பினராக இருந்த றெஜி முழுநேரமாக உழைக்க சந்தர்ப்பம் தரும்படி கேட்ட போது றெஜியின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. பின்பு, றெஜிக்கு சிங்கப்பூர் போக ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது . றெஜி நிலைமையைச் சொல்லி தன்னை முழு நேரமாகச் சேர்த்துக்கொண்டால் தனது பயணத்தை ரத்துச் செய்வதாக கூறினார். தகப்பன் இல்லாத குடும்பம். வீட்டிற்காக உழைக்க வேண்டிய தேவையும் இருந்தது. எப்போது தன்னை சேர்ப்பதாக சொல்கிறார்களோ அப்போது உடனே தான் வந்து விடுவேன். என்றும் றெஜி சொன்னார். அந்தக் காலத்தில் இயக்கக் கட்டுப்பாடுகளைப் பற்றி கொஞ்சம் கூடுதலாகச் சொல்லி வைப்பது வழக்கம் எனவே அங்கே கண்டபடி படம் பார்க்கக்கூடாது என்றெல்லாம் அறிவுறுத்தப்பட்டது. றெஜி இயக்கக் கட்டுப்பாடு என்பதற்காக ஒரு படம் கூடப் பார்க்காமல் இருந்திருக்கிறார். றெஜி வந்ததும் கட்டுப்பாட்டைப் பற்றிச் சொன்னவர் "றெஜி சும்மா ஒரு கதைக்குச் சொன்னால் நீ அப்படியே இருந்துவிடுவதா?" எனக் கேட்டார் என்று குறிப்பிடுவார்கள்.

சிங்களக் குடியேற்றங்கள் றெஜிக்குச் சினத்தைக் கொடுக்கும் சமாச்சாரம். எமது மண்ணை படிப்படியாக அபகரிக்கும் திட்டத்தை தவிடு பொடியாக்க வேண்டும் என றெஜி அடிக்கடி சொல்வார். இதற்கான நடவடிக்கைகளை இவரே மேற்கொண்டார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொக்கிளாய் தாக்குதலில் காயப்பட்ட நிலையிலும் வீராவேசமான இவரது தாக்குதல்களைக் கண்டு நாம் மெய் சிலிர்த்தோம். புதிய புதிய இராணுவ யுத்திகளைக் கையாள்வதிலும் இவரது கவனம் எப்போதுமிருக்கும்.

அன்றொருநாள், ஆமி வந்திருக்கிறார்கள் என்று மக்கள் தகவல் தந்தனர். றெஜி அண்ணாவோடு இன்னும் சில பையன்கள் இருந்தார்கள். பையன்கள் தாங்கள் போய்ப்பார்த்து வருவதாகச் சொன்னார்கள். இவர் "நான் போய்ப்பார்க்கிறேன் பிரச்சினையில்லையென்றால் அதற்குப் பிறகு நான் வந்து உங்களைக் கூட்டிக்கொண்டு போகிறேன்" என்று சொல்லிவிட்டு போனார். பையன்களைப் பலிகொடுக்க விரும்பாமல் ஏதாவது நடந்தாலும் அது தனக்கு நடக்கட்டும் என்று தனது உயிரை பணயம் வைத்து முன்னே சென்றார்.

மறைந்திருந்த இராணுவம் முற்றுகையிட்டது நாங்கள் புலிகள் என்பதை செயலில் நிரூபித்தார் றெஜி. அவர் தன்னை இம்மண்ணுக்காக அர்ப்பணித்துக் கொண்டார்.

இன்று கூட கட்டுபாட்டைப் பற்றி கதைக்கும் போது றெஜி அண்ணாவைப் பற்றி எல்லாரும் குறிப்பிடுவார்கள்.

பழைய பழைய உறுப்பினர்களை இழந்த போதிலும் எமது போராட்டம் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து கொண்டே போகிறது. இந்த மூத்த உறுப்பினர்கள் விதைத்த விடுதலை விதைகள் பெரும் விருட்சமாக மாறிவருகின்றன.

நன்றி: ஈழமுரசு 05-07-1987

■ குட்டி.

---

கப்டன் றெஜி அவர்கள் 02-12-85 அன்று மணலாறு பட்டிக்குடியிருப்பில் சிறீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்தார்.



# மாவீரர் புகழ் போற்று


மாவீரர் புகழ் போற்று — மனதிலே
ஒளிதீப - விளக்கேற்று
போர் வீரர் புகழ் சாற்று - என்றும்
புவி மீது அவர் புகழ் போற்று

கல்லறைக் கானம் பாடும் தென்றல் காற்று
மில்லரைப் போற்றிடும் புலவர் புகழ் சாற்று
எல்லோர் கண்ணிலும் இருக்கட்டும் நீர் ஊற்று
வல்லவர் அவர் என்று உன் மனதைத் தேற்று.

போராளி அன்புக்கரசன் (ஜிக்கி)
நலம் அறிவுக்கூடம்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழத்தின் அடிக்கல் **8**

# அல்பேட்



மேஜர் அல்பேட்

நாம் ஏராளமான மரணத்தைக் கண்டுவிட்டோம். தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது. வீரமரணம் எமக்குப் பரீட்சையமானது. சாவைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்றுதான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்தித்தபோது எம் இதயம் உருக்குலைந்து தளர்ந்து, எம் உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்.

6 அடி 2 அங்குலமான உன் உயரமான (நீளமான) உடல் அசைவற்று கிடந்த நிலைகண்டு மக்கள் பதறியதை, உன் கிராமமே கலங்கியதைக் கண்டு உன்மரணம் தமிழ் மக்களை எந்த அளவுக்குப் பாதித்திருக்கின்றது என்பதை அறிந்து நாம் துடித்தோம்.

எம் முகாம்களில் ஒன்று இராணுவத்தினால் தாக்கப்படுகின்றது என்பதை அறிந்து எம்மை விடுவிக்க விரைந்த நீ எம் அன்புப் பிணைப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு விட்டாய். கிராமச் சனங்களோடு பழகும் போது அந்தச் சனங்களோடேயே ஒன்றிப்போகும் உன் எளிமையான தோற்றம், எம்மை எல்லாம் பிரமிக்கச்செய்தது.

எம் புலம்பலை நிறுத்திவிட்டு அல்பேட்டை பற்றி...

பண்டிதர் ஆயுதக் கிடங்குகளுக்குப் பொறுப்பாக இருந்து வேலை செய்த காலத்தில் பண்டிதருக்கு அடுத்தபடியாக இருந்து வேலை செய்து இயக்கத்தின் நன் மதிப்பைப் பெற்றவன். 'தத்தையா' என்று செல்லமாக பண்டிதரால் அழைக்கப்பட்டவன். அச்சுவேலியில் நடைபெற்ற எம் தளம் மீதான இராணுவ முற்றுகையில் தன்னுடைய துப்பாக்கியில் இருந்த குண்டுகள் தீருவரை போராடி வெற்றிகரமாக வெளியேறியவன். பண்டிதரைப் பலிகொண்ட அந்தப் பெரிய முற்றுகையில் இருந்து வெற்றிகரமாக வெளியேறியதே அவனுடைய திறமைக்குச் சான்றாகும்.

பண்டிதரின் மறைவுக்குப் பின் ஆயுதக் கிடங்குகளின் பொறுப்பாளராகப் பணியாற்றி பண்டிதர் இழப்புக்கு ஈடு செய்தவன். 1982ம் ஆண்டு தொடக்கம் தன்னை எம் இன விடுதலைக்காக அர்ப்பணித்துப் பணியாற்றியவன். அல்பேட்டை காணும் யாரும் போரிடுவதில் அனுபவம் மிக்கவன் என்பதை தவறின்றி ஊகிக்க முடியும். முதல் பார்வைக்கு அவன் வயது இருபதுக்கு மேல் இருபத்தைந்துக்கு உள்ளாகவே இருக்கும் என்று தோன்றும். ஆனால் வெய்யிலிலும் காற்றிலும் அடிபட்டிருந்த அவன் முகத்தையும் கண்களின் அருகிலும் நெற்றியிலும், வாயின் பக்கங்களிலும் நுண்ணிய இழைகளாக விழுந்திருந்த சுருக்கங்களையும் சிந்தனையில் ஆழ்ந்தகளைத்த கருவிழிகளையும் உற்றுக்கவனித்தபின் அவன் வயதில் இன்னும் பத்து ஆண்டுகளைக் கூட்டலாம் போலிருக்கும்.

அல்பேட் கோபித்ததை, கோபப்பட்டதை நாம் காணவில்லை என்றே கூறலாம். ஏனோ தெரியவில்லை அவனுக்குக் கோபம் வருவதில்லை. நாம் சிலவேளைகளில் வேண்டுமென்றே சீண்டுவோம். அப்பொழுதும் அவன் எருமை மாட்டில் மழைபெய்வது போல இருப்பான். அன்பினால் வழிநடத்தி, அரவணைப்பால் பாதுகாத்து, அவன் வளர்த்த அவனுடைய வீரர்கள், அல்பேட்டைப் போலவே உருவாகி இருப்பதைக் கண்டு வியப்புடன் அல்பேட்டுக்குத் தலை வணங்குகின்றோம்.

குழந்தைகள் என்றால் அல்பேட்டுக்கு அலாதி பிரியம். குழந்தைகளோடு பழகும்போது அவனும் ஒரு குழந்தையாகி மழலை மொழி பேசுவதைக் கண்டு நாம் சிரித்த பொழுதுகள் ஏராளம்.

எமது முகாம்களில் அல்பேட்டைச் சுற்றி ஒரு மழலைப்பட்டாளமே இருக்கும். அந்த சின்னஞ் சிறுசுகள், அல்பேட்டைக் காணாமல் தவித்துத் தவிப்புகள், அவர்களைப் பொறுத்தவரையில், அவன் கோயிலுக்குப் போய்விட்டான். கோயிலிலிருந்து வருவான், வரும்போது அவர்கள் அடிக்

கூடி கேட்ட, சொல்லிவிட்ட சாமான்கள் வேண்டி வருவான். அல்பேட் அவர்களை 'குட்டிச் சாத்தான்' என்று அழைப்பது வழக்கம் அந்தக் குட்டிச் சாத்தான்கள் அல்பேட் கோவிலுக்குப் போய்விட்டதை, போய்விட்ட செய்தியை மிகவும் சந்தோஷத்துடனும் மிகுந்த குதூகலத்துடனும் தமக்குள் பரிமாறிக்கொண்டார்கள்.

அவர்கள் அந்த மழலைகள், அல்பேட் கோவிலுக்குப் போய் திரும்பி வருவான் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்....

யாழ் கோட்டை நிலையத் தாக்குதலின் போது இராணுவத் தந்திரத்துக் கமைய கோட்டையில் இருந்து எதிரிகளை வெளியில் வராமல் தடுக்கும் பொறுப்பும் கோட்டை மீதான தொடர்ந்த தாக்குதலை நடத்தும் பொறுப்பும் அல்பேட்டிடம் கொடுக்கப்பட்டிருந்தது. தனது பணியைச் செவ்வனே செய்து முடித்து எமது வெற்றிக்கு வழிவகுத்தவன்.

ஒருநாள் விடியற்காலை அல்பேட் தன் முகாமில் உள்ள தோழர்களை தினசரி காலைப்பயிற்சிக்குத் தயார் படுத்திக் கொண்டிருக்கையில், 'வோக்கி ரோக்கி' அலறியது. அவன் வோக்கியை இயக்கி அழைத்த இடத்துடன் தொடர்பை ஏற்படுத்தியபோது, கதுமலையில் உள்ள எமது முகாம் ஒன்று இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டும் செய்தி கிடைத்தது. அல்பேட் தன் தோழர்களைப் பார்த்து உரக்க அழைத்து விரைந்து ஆயுதங்களுடன் வாகனில் ஏறி விரைந்தான். வான் இறுவில் பகுதியால் கதுமலையை அண்மித்தபோது மூன்று 'பெல் ஏ.பி. 412' ரக ஹெலிகொப்டர்கள் அப்பகுதியை சுற்றிச் சுற்றி 'மெசின் கன்'னினால் குண்டுமழை பொழிந்து கொண்டிருந்தது.

மேலே வானத்திலே வட்டமிட்டுக்கொண்டிருந்த அலுமினியப் பறவை களில் ஒன்று உயரத்தில் இருந்து பார்த்து மலையில் வழுகி வருவது போல மிகமிக வேகமாக வாகனத்தை நோக்கிப் பாய்ந்து வந்து '50 கலிபர் மெசின் கன்'னினால் சுட்டுத் தள்ளியது. குண்டு வரிசைகள் வாகனத்திற்கு மிக அருகாக நிலத்திலே கோடிட்டுச் சென்றது. குறி தவறிவிட்டது. அல்பேட் தன் தோழர்களைப் பார்த்து 'பேய் தும்பியில் இருந்து சுடுறாங்கள் கவனமாக இருங்கோ' என்று கூறி முடிக்கவும், (பெல் ஏ.பி. 412 ஹெலிகொப்டர்களை நாங்கள் 'தும்பிகள்' என்று அழைப்பது வழக்கம்) உருமறைப்பு வர்ணம் பூசப்பட்ட இன்னொரு அலுமினியத் தும்பி பக்கவாட்டாக தாழப்பறந்து வந்தது. "கடப்பிடியுங்கோ, வானை எங்காவது ஒருபுறம் திருப்பி ஒதுக்கு" என்று கத்தினான் அல்பேட். வான் ஒதுங்க அல்பேட் தோழர்களுடன் கீழே பாய்ந்த போது விமான எஞ்சின் கடகடப்புச் சத்தத்துடன் மெசின் கன்னின் இடைவிடாத குண்டுச் சத்தத்துடன் தும்பி தாழப்பறந்து சென்றது. வானுக்கு முன்பாக குறுக்குப் பாட்டாக குண்டு வரிசை மண்ணிலே கோடிட்டது. குறி தவறிவிட்டார்கள். மறுபடியும் இன்னும் அருகாக அல்பேட்டும், வானும், சேதமின்றித் தப்பித்துக்கொண்டது.

அல்பேட் தன் 'வோக்கி ரோக்கியுடன்' முகாமுக்குத் தொடர்பு கொண்டபோது,

முகாமுக்கு பின்பாக ஹெலிகொப்டர்கள் இராணுவத்தினரை இறக்கிய தோட்டப்பகுதியை இடத்திற்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டது. குறு அவ்விடத்தை அணுகியபோது இராணுவக் கமாண்டோக்கள் தாம் இறங்கிய இடத்தில் சிலரை நிலைப்படுத்திவிட்டு மற்றும் சிலர் முகாமை நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

அல்பேட் கிளர்ச்சியுற்றான். ஆனால் அது சாவு குறித்த அச்சமல்ல. மிக, மிக விருப்பான பதற்றமற்ற மனிதர்களுக்க இயல்பான ஒன்று. ஆபத்து பற்றிய முன்னுணர்வு தானும் இல்லை. இது அவன் கவலைப்பட்டது கமாண்டோக்களை எப்படியாவது தடுக்க வேண்டும்.

தோட்டங்களில் சில சில இடங்களில் மரவள்ளிச் செடிகள் மிக அழகாக செழிப்பாக செறிவாக வளர்ந்திருந்தது. உயர்ந்து செழிப்பாக, செறிவாக வளர்ந்திருந்த மரவள்ளிப் பற்றைகள் ஒளியைப் புகவிடாமல் இருட்டைக் கொடுத்துக்கொண்டிருந்தன.

அல்பேட் தனது குழுவினர் சகிதம் அவர்களைத் தாக்கத் தொடங்கினான். இராணுவத்தினர் 2 அங்குல சிறிய மோட்டார்கள் சகிதம் எதிர்த்தாக்குதல் நடத்தினர். முன்னேறிய இராணுவக் கொமாண்டோக்கள் மீதும் பலத்த தாக்குதல் நடத்தப்பட்டது. முன்னேறியவர்கள் மீதும் தாக்குதல், நிலைகொண்டு காவல் செய்துகொண்டிருப்பவர்கள் மீதும் தாக்குதல், வானத்தில் சுற்றிக்கொண்டிருந்து இவர்களுக்கு காவல் செய்யும் அலுமினியப் பறவைகளுக்கும் தாக்குதல். பலமணி நேரம் இடைவிடாத தாக்குதல்.

கமாண்டோக்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். பின்புறத்தில் அவர்களை விமானம் ஏறவிடாமல் செய்வதற்காக மலையைப் போல் நின்றுகொண்டிருந்தான் அல்பேட். எனவே அல்பேட் குழுவின் மேல் பலத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பலவர்ணம் பூசப்பட்ட பெல் ஏ.பி. 412 ஹெலிகொப்டர்கள் மூன்றும் தம்முடைய எம் 60 ரக மெசின் கன்னாலும் வட்டமிட்டுத் தொடர்ந்து தாக்குதலை நடாத்தின. அல்பேட் குழுவினரை நோக்கி வந்த மோட்டார் குண்டுகள் வெடித்துக்கொண்டிருந்தன. திடீரென்று அல்பேட் சுருண்டு விழுந்தான். இடது கண்ணுக்கு கீழே பெரிய ஓட்டை. அதிலிருந்து குருதி சுரந்தெடுத்துப் பாயும் நீர்த்தாரைகள் போல பாய்ந்தது. அல்பேட்டைத் தூக்கிக் கொண்டு சிலர் பின் விரைகின்றனர். அல்பேட்டுக்கு சிகிச்சை அளிப்பதற்கு முன்பாகவே அவன் தன் உயிரை இந்த மண்ணின் விடுதலைக்காக அர்ப்பணித்துவிட்டான்.

கிட்டு

நன்றி: களத்தில் தை 1986

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழத்தின் அடிக்கல் 9

# லிங்கத்தின் சாவு போராட்டத்தில் ஒரு திருப்புமுனை



கப்டன் லிங்கம்

லிங்கம் 16.12.60இல் வல்வெட்டித்துறையில் பிறந்தார். இயற்பெயர் செல்வக்குமார். இந்துக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆதரவாளரானார். 1980 ஆம் ஆண்டில் 12ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது, இயக்கத்தில் உதவியாளனாகச் செயற்பட ஆரம்பித்தார். எமது விடுதலை குறித்து சுவரொட்டிகளை ஒட்டுதல், சுலோகங்களைச் சுவர்களில் எழுதுதல் போன்ற வேலைகளை ஆர்வத்துடன் செய்தார். விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அதிகம் ஈடுபாடு காட்டாத அவ்வேளையில் விடுதலைப் புலிகளை வேட்டையாட [illegible] பொலிசார் மோப்பம் பிடித்துக் கொண்டிருந்த வேளையில் சுவரொட்டி ஒட்டுதல் போன்ற வேலைகளைக்கூட மிகவும் சிரமங்களுக்கிடையிலும், கைதாகும் ஆபத்துக்கிடையிலும் செய்தார். 1981இல் முழுநேர உறுப்பினரான லிங்கம், யாழ்ப்பாணத்தில் அரியாலை சனசமூக நிலையத்தில், உடற்பயிற்சிகளைப் பெற்றார். சிறந்த போர்வீரனாக வரவேண்டும் என்ற ஆர்வத்தில் 'கராட்டே' பழகி பிரவுண் பட்டிக்குத் தகுதி பெற்றார்.

1982இல் தலைவர் பிரபாகரனை லிங்கம் சந்தித்தபின், பிரபாகரனின் ஆகர்ஷிப்பில் அமிழ்ந்து போனார். அவருக்கும் இயக்கத்துக்கும் விசுவாசமாக நடப்பதே தன் கடமை என உணர்ந்து, இயக்க வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டார். 1982 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியிலும் 1983 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதிகளிலும், வன்னிப் பகுதியில் ஒரு காட்டுப் பகுதியில் அவருக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டது. அங்கு கூடப் பழகிக்கொண்டார். கடுமையான பயிற்சிகளையும் மிகுந்த ஆர்வத்துடன் செய்தார். குறிதவறாது சுடுவதில் திறமையைக் காட்டினார். ஏ.கே. கரிமுழல் துப்பாக்கி அவருக்கு விருப்பமான ஆயுதம். தலைவர் பிரபாகரனுடன் போட்டி போட்டுக்கொண்டு, துப்பாக்கி சுடுவதில் முனைந்து நிற்பார். 300 யார் உயரத்தில் பறந்துகொண்டிருந்த பருந்தொன்றினைத் தனது ஏ.கே. கரிமுழல் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தியதை அவரது சுடும் திறமைக்குச் சான்றாகும்.

சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட பல மோதல்களில் பங்கேற்றுக் கொண்டார். தாக்குதல்களின்போது முன்னின்று சண்டையிடுவார். ஜூலை 1983 இல் திருநெல்வேலியில், விடுதலைப் புலிகள் 13 இராணுவ வீரர்களைக் கொன்றொழித்த தாக்குதலில், லிங்கத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது.

1984 ஆம் ஆண்டு மதுரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். அக்காலத்தில் அரசியல் பிரச்சாரத்தைத் திறம்பட நடத்தி, தமிழக மக்களுடன் மிகுந்த நல்லுறவை வளர்த்துக் கொண்டார். 1985 ஆம் ஆண்டு காலத்தில், தமிழீழக் காடுகளில் இருந்த பயிற்சி முகாம் ஒன்றின், பொறுப்பாளராகச் செயல்பட்டார். அக்காலத்தில் விசேட பயிற்சி பெற்று, விடுதலைப் புலிகளின் அதிரடிப் படைப்பிரிவுக் கப்டன் ஆனார். தலைவர் பிரபாகரனின் மிக நெருங்கியவர்களில் ஒருவராகவும், உதவியாளராகவும், மெய்காப்பாளராகவும் செயல்பட்டார்.

தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் நெடுமாறனும், பின்னர் பிரெஞ்சுப் பத்திரிகையாளர் இருவரும், தமிழர் படும் துன்பங்களையும் அரச பயங்கரவாதத்தையும் அறிந்து வர தமிழீழம் சென்றபோது, அவர்களின் பயணப் பொறுப்பு லிங்கத்திடமே கொடுக்கப்பட்டது. லிங்கம் தமது கடமையைப் பூரணமாக நிறைவேற்றினார்.

லிங்கம் இயக்க உறுப்பினர் ஒவ்வொருவருடனும் சகஜமாக பழகியதால், எல்லோரும் அவரிடம் அன்பு கொண்டிருந்தனர். கடமை என்று வரும்போது கண்டிப்பானவராகிவிடுவார். அப்படிக் காட்டிக்கொள் [illegible] இறுக்கமாக வைத்துக்கொண்டு கடுகடுப்பாகப் பேச முயன்றாலும், வெகுளித்தனம்தான் வெளியே தெரியும்.

Tamileelam Archive

கடைசியாக கடந்த மார்ச் மாதம் தமிழ்நாட்டிலிருந்து சென்றபோது தனது தோழர்களைப் பிரிந்த வேளையில், கண்களில் நீர்வழிய விடைபெற்றார். புதியவர்கள் அக்காட்சியை ஆச்சரியத்துடன் பார்த்தனர், அவரைப் புரிந்தவர்கள் கேலி செய்து சமாதானப் படுத்தினர்.

கட்டையான தோற்றம், நீட்டசண்யமான கண்கள், தடிப்பான மீசை, மெதுவான உறுதியான அவரது குட்டையான உருவம் குறித்து, அவரது நண்பர்கள் கேலிசெய்வார்கள். அவர்களுடைய உரையாடலுக்கிடையே லிங்கம் ஏதாவது கூற முனைந்தால் நீ சின்னப்பொடியன் அங்கால போ என்று வேடிக்கையாகக் கூறிச் சிரிப்பார்கள் நண்பர்களின் கேலிப் பேச்சுக்களை ரசிப்புடன் ஏற்றுக்கொள்வார்.

* * *

27-4-86 அன்று சிறீலங்காவின் கடற்படையுடன் மோதலில் ஈடுபட்ட அருணாவும் அவருடன் கூடச் சென்ற விடுதலைப் புலி வீரர்களும் தாம் திரும்பவில்லை. அவர்கள் அனைவரும் இறந்து விட்டதாகக் கருதிய தமிழீழ மக்கள் 28-4-86 அன்று அவர்களுக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர் தமிழீழமெங்கும் தோரணங்கள் கட்டப்பட்டன. கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. மேடைகள் அமைத்து அருணாவின் படத்தை வைத்து மக்கள் வீரவணக்கம் செய்தனர்.

ஒலி பெருக்கிகள் அவரது வீரவணக்கத்தை முழங்கின. எவரது தூண்டுதலுமின்றி மக்கள் எழுச்சி பெற்று தமிழீழ விடுதலைப் புலி வீரர்களுக்கு ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்தது கண்டு எரிச்சலடைந்தனர் டெலோவினர். 24.04.86ல் கடலில் இறந்த டெலோ உறுப்பினர்களின் பொருட்டு மக்கள் எதுவித அனுதாபமும் தெரிவிக்கவில்லை. 29-4-86 அன்று ஹர்த்தால் செய்து இறந்த நமது தோழர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறு மக்களைப் பலவந்தப்படுத்தினர். இக்கட்டாய ஹர்த்தாலை மக்கள் ஏற்கவில்லை தாம் ஒழுங்கு செய்த ஹர்த்தாலுக்கு மக்களிடமிருந்து எவ்வித ஆதரவும் இல்லாதது கண்டு ஆத்திரமடைந்தனர் டெலோவினர். தமது கோட்டையாகக் கருதிய கல்வியங்காட்டுப் பகுதியிலேயே மக்கள் விடுதலைப் புலிகளுக்கு அமோக ஆதரவளித்தது கண்டு புழுங்கிய டெலோவினர் மக்களைப் பயங்கரமாகத் தாக்கினர்.

அருணாவின் படம் வைத்திருந்த அஞ்சலி மேடைகளை உடைத்தெறிந்தனர். அருணாவினதும் மற்றும் தோழர்களினதும் படம் போட்ட சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்தனர். மக்கள் அராஜக வாதிகளினால் தாக்கப்படுவதைத் தடுக்கச் சென்ற பசீரும், முரளியும் டெலோவால் கடத்தப்பட்டனர். கடத்திச் சென்று கொல்வது டெலோவினருக்கு கைவந்த கலை. தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோர் டெலோவால் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். திருச்சி அகதிகள் முகாமிலிருந்து 3 அகதிகள் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டனர். பேச்சு வார்த்தைக்கென அழைத்து வஞ்சகமாகக் கொல்வதில் வல்லவர்கள் டெலோவினர். டெலோவின் ராணுவத் தளபதியான தாஸையும் அவரது 3 தோழர்களையும் பேச்சுவார்த்தைக்காக யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு அழைத்துச் சுட்டுக்கொன்றனர். வைத்தியசாலைகளைத் தாக்குதலுக்குள்ளாக்குவது சர்வதேச சட்டங்களுக்கு முரணான செயல். மனித நாகரீகத்துக்கே இழுக்கானது அங்கு நின்ற ஒரு தாதி உட்பட பல நோயாளிகளுக்கு காயம் ஏற்பட்டதுடன், நீதிபதி ஒருவரும் கொல்லப்பட்டார்.

மறுநாள் இப்படுபாதகச் செயலை எதிர்த்து ஊர்வலம் சென்ற போது மக்கள் மீது டெலோவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவர் இறந்தனர். பசீரும், முரளியும் கொலை செய்யப்படலாம் என்று உணர்ந்த எமது தலைமைப்பீடம் பேச்சுவார்த்தை மூலம் அவர்களை விடுதலை செய்விப்பதற்காக லிங்கத்தை அனுப்பியது. சிறீ சபாரத்தினமும் அவரது ஆட்களும் தங்கியிருந்த கல்வியங்காட்டில் உள்ள டெலோவின் தலைமையகத்திற்கு லிங்கம் ஆயுதமேந்தாது சென்றார். சமாதானத் தூதுவனாகச் சென்ற லிங்கம் துப்பாக்கியால் கண்ணில் சுடப்பட்டு படுபாதகமான முறையில் கொல்லப்பட்டார்.

லிங்கத்தின் வீரமரணம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. போராட்டக் களத்தில் போராடிக் கொண்டிருக்கின்ற விடுதலைப்புலிகளின் முதுகில் குத்திக்கொண்டிருந்த டெலோ மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரு மூத்த உறுப்பினர்கள் கடத்தப்பட்டு அவர்கள் கொல்லப்பட்டு விடுவார்கள் என்ற நிலையில், கடைசியில் லிங்கம் கொல்லப்பட்ட நிலையில் விடுதலைப் புலிகளை அழிக்க முற்பட்ட டெலோ மீது தற்பாதுகாப்பு யுத்தம் தொடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானார்கள் விடுதலைப் புலிகள். நாசகார சக்திகளின் கைப் பொம்மையாக, எதிர்ப்புரட்சி அமைப்பாக, விடுதலைப் போருக்கு முட்டுக்கட்டையாக செயல்பட்டு வந்தது டெலோ. மக்கள் விரோத நடவடிக்கைகளான கோவில் கொள்ளைகள், வாகனக் கடத்தல்கள் போன்றவற்றில் ஈடுபட்டு விடுதலைப் போராட்டத்தின் மீது மக்கள் வெறுப்புக் கொள்ளும்படி செய்தனர். இஸ்லாமிய மக்களை துன்புறுத்தி மதரீதியான சண்டைகளை தமிழ் மக்களிடத்தில் ஏற்படுத்தியவர்கள் இவர்கள்தான். சமூக விரோதக் கும்பலை வளர்த்து அதற்குத் தலைமை தாங்கிய கொள்கையற்ற, பொறுப்பற்ற டெலோ தலைவர்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையின் போது சொந்த இரத்தத்தையே சிந்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இந்த நிலைக்கு காரணகர்த்தாக்களாக இருந்த டெலோ தலைமை தண்டிக்கப்பட்டபோது மக்கள் எமது செயலை ஆதரித்தனர். பாராட்டினர். ஒத்துழைத்தனர். டெலோவின் அழிவினால் தமிழீழப் போராட்டம் உறுதியான ஒரு தலைமையின் கீழ் மேலும் பல மடங்கு பலம் அடைந்திருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் தனித்த பெரும் சக்தியாக உருப்பெற்று சிறீலங்காவின் முப்படைத் தாக்குதல்களை முறியடித்து வெற்றி கண்டது இதன் நேரடி விளைவாகும். இதனை எதிரிகள் உட்பட உலகமே ஒத்துக்கொள்கிறது.

சிங்கள இராணுவத்துடன் பொருதச் சென்ற லிங்கம் துரோகிகளால் கோழைத் தனமாகக் கொல்லப்பட்டார். தமிழீழப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு காரணமாக நேற்றிருந்த லிங்கம் இன்றில்லை. நாளையும் அதற்கு அடுத்து வருகின்ற காலங்களிலும் லிங்கம் எமது வரலாற்றோடு வாழப் போகிறார்.

நன்றி: விடுதலைப்புலிகள், குரல் -10 ஜூலை 1986



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழத்தின் அடிக்கல் 10

# வீரத்தளபதி விக்டர்



லெப்.கேணல் விக்ரர்

மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிராமத்தில் 1963 ஆம் ஆண்டு பிறந்த மருசலீன் பியூஸ்லஸ் என்ற தளபதி விக்டர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கல்வி பயின்றவர்.

எமது விடுதலைப்போராட்டமானது பரந்து விரிந்து, ஆழ வேரூன்றி பெருவிருட்சமாக தனக்கே உரித்தான வளர்ச்சி கண்டு நிற்பதைக் உலகம் புரிந்துகொண்டுள்ளது.

அன்று எமது குரல்கள் அடங்கிக்கிடந்தன. எமக்கான குரல்களும் கேட்காது கிடந்தன. இன்று எட்டுத் திக்குகளெங்கும் எமக்காக குரல்கொடுக்கின்றனர். இது ஒரு கால மாற்றம் இந்த மாற்றத்தை எம் இனத்திற்கு பெற்றுக் தந்த பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் வரிசையில் அத்திவாரக் கற்களாகி நிற்கும் விக்டர் போன்ற வீரத்தளபதிகளை தமிழினம் மறக்காது.

விடுதலைப் பயிரானது ஆதிக்க பாதங்களினால் மிதிபட்டுப் போய் விடுமோ, பேரினவாதிகளின் பெருமூச்சினில் கருகிவிடுமோ என்ற ஏக்கம் நிறைந்த காலங்களிலெல்லாம் தலைவருக்குப் பக்க பலமாக நின்று விடுதலைப் பயிரை உரமிட்டுப் பாதுகாத்துத் தந்த மூத்த தளபதிகளை வரலாறு நிச்சயம் பதிவு செய்யும்.

விடுதலைப் புலிகள் இராணுவ அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுக்கவோ அல்லது அரசியல் அழுத்தங்களுக்கு விலைபோகக்கூடியவர்களோ அல்லர் என்பதை மிகப்பெரிய வரலாற்று சாதனை ஒன்றினூடாக சர்வதேச சமூகத்துக்கு சத்தியம் செய்து கொடுத்த சாதனையாளன் தளபதி விக்டர். 12.10.86 அன்று மன்னார் மாவட்டம், அடம்பன் பகுதி சுற்றிவளைக்க வந்த நூற்றுக்கணக்கான சிங்களப்படையினரை எண்ணிக்கையில் குறைந்தளவு போராளிகளைக் கொண்டு முற்றிலும் பாதகமான சூழ்நிலையிலும் ... அதிகாலை வேளையிலும் "இரண்டில் ஒன்று, ஒன்று அவன் அல்லது நாங்கள் " என்ற துணிவு மிகுந்த வார்த்தைகளை எங்கள் தொலைத் தொடர்பு சாதனங்களுக்கூடாக வழங்கி விட்டு களத்திலே நேரில் இறங்கி வியூகம் அமைத்து, ஊடறுத்து, சிதைத்து, சடலங்கள் ஆயுதங்களை அள்ளி , சிறைப்பிடித்து என்றவாறு தாக்குதலை நகர்த்தி "ஓட விடாதே", "பார்த்துப் பார்த்து விழுத்து", "ஜொனியை இறங்கவிடாதே", "இறங்கிய ஜொனியை பறக்கவிடாதே" என்றெல்லாம் தனது சுடுவிரல் அசைவினால் நெறிப்படுத்தி நின்ற வெற்றிகரமான சூழ்நிலையின் இறுதிக் கணத்தில் தளபதி விக்டரின் தொடர்பை இழந்து நின்ற அன்றைய சோகம் நிறைந்த நினைவுகளை பகிர்வதில் மனம் நிறைவடைய மறுக்கின்றது.

நாட்டுக்கு நாடு நடைபெற்ற யுத்தம்போன்று சர்வதேச யுத்த விதிகளுக்கு அமைவாக படையினரின் சடலங்களை ஒப்படைத்தும், சிறைக் கைதிகளை பரிமாற்றம் செய்தமையும் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்றுவரை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்துவரும் நடைமுறையினை சிறீலங்கா அரசும், சர்வதேசமும் புரிந்து கொண்டிருக்கும்.

சிறீலங்காப் படையினரை சிறைப்பிடித்தும், படையினரின் சடலங்களை மீட்டதும் தமிழ்மக்கள் மத்தியில் மெல்லமெல்ல துளிர்விட்ட விடுதலைப் போராட்டம் மீதான நம்பிக்கையினை மேலும் பலமடங்காக பாய்ந்து செல்லவைத்த அந்த நிகழ்வாகவே தளபதி விக்டர் தலைமையிலான அன்றைய தாக்குதல் சம்பவம் அமைந்திருந்தது.

1983ஆம் ஆண்டு யாழ் திருநெல்வேலியில் சிங்களப் படையினருக்கு எதிரான கண்ணிவெடித் தாக்குதலில் முக்கிய பாத்திரம் வகித்த தளபதி விக்டர் அவர்கள் தமிழீழப் பகுதிகளில் தலைவரின் நேரடி வழிகாட்டலில் நடைபெற்ற இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களிலும் பங்குபற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

1985 ஆம் ஆண்டு மன்னார் பொலிஸ் நிலையத் தகர்ப்பின் போது பாதகமான சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாது எமது அணியினை நகர்த்தி இடையில் ஒன்று கூட்டி ஒழுங்குபடுத்தி மீண்டும் வேகமாய் நிதானமாய் நகர்த்தி "ராதா ஸ்ராட்," "குமரன் ஸ்ராட்" ( லெப்.கேணல் குமரப்பா) என்று ஆரம்பக்கட்டளைகளை அணித்தலைவர்களுக்கு வழங்கி குறுகிய நேரத்தில் பொலிஸ் நிலையத்தை வெற்றி கொண்டு ஒரே ஒரு போராளியின் வீரச்சாவுடன் ஏனையோரை கடல் கடந்து பத்திரமாக கரைசேர்ப்பது வரையில் தளபதியின் வழிகாட்டல் என்பது மறக்கமுடியாத நினைவாகி நிற்கின்றது.

அன்றைய வெற்றிகரத் தாக்குதலை பிபி சி செய்தியாளர் தெரிவிக்கும் போது விடுதலைப் புலிகளின் மதிநுட்பமும், துணிவும் நிறைந்த வெற்றிகர தாக்குதல் என வர்ணித்தார்.

மன்னார் மக்கள் அன்றைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தி தளபதி விக்டருக்கு தங்கச் சங்கிலி(தங்கமாலை) பரிசளித்து கௌரவித்தனர். பெருமகிழ்வுடன் மக்களை வரவேற்கும் பண்பு, நிமிர்ந்து உயர்ந்த அழகிய தோற்றம், அன்புத் தலைவரை இதயச் சுவர்களில் சுமந்து நின்று வழிப்படுத்திய அன்றைய நாட்கள் மறக்க முடியாதவை.

எமது விடுதலை இயக்கம் பிரசவித்த அக்கினி குஞ்சு என்பது மகளிர் படையணியின் வளர்ச்சி பற்றி எமது தலைவரின் வாக்கிற்கு உயிர் கொடுத்த தளபதியாக விக்டர் அன்று செயற்பட்டார் எமது பெண் போராளிகளுக்கு முதன் முதல் களம் கற்றுக்கொடுத்து இன்று வியக்க வைக்கும் வளர்ச்சியை பெற்று நிற்கும் எமது விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் மூத்த சகோதரனாகவே திகழ்ந்தார்.



தனது சிறந்த நிறைவான குரல்வளத்தால், பாடும் திறமையால் போராளிகளின் மனதை மற்றுமொரு கோணத்தில் இடம்பிடித்ததும் தளபதி விக்டருக்கு இருக்கும் இன்னும் ஒரு சிறப்பு அம்சம்.

கைத்துப்பாக்கியை அழகாக சுழற்றி குறிதவறாது சுட்டுக்காட்டி, கமராவை கையாள்வதும், கலையை ரசிப்பதும் இயற்கையிலேயே அழகுணர்ச்சியுடன் பழகியத்த தளபதி அவர்கள் எமது தலைவரால் வளர்க்கப்பட்டவர் என்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

இன்று எமது விடுதலைப் போராட்டமானது ஆயிரம் படையினரை ஒரே நாளில் களத்திலிருந்து அப்புறப் படுத்திய வரலாற்று வளர்ச்சியை பெற்று நிற்பதை உற்று நோக்கும் போது மிகுந்த பக்குவத்துடன் எமது தாயக விடுதலைப்பயணம் நகர்ந்து செல்வதை இலகுவில் இனங்கண்டு



கொள்ளமுடிகிறது.

இன்றும் அன்றும் எமது தலைவர் அவர்களின் நேர்த்தியான வழிகாட்டலினால் மிக மிக உன்னத நிலையை எமது போராட்டம் சந்தித்து நிற்கின்றது என்பது தெளிவாகின்றது.

என்றுமில்லாதவாறு எழுச்சி கொண்டு எமது மக்கள் நிற்கும் இவ்வேளையில் தாயகப்பற்றுணர்வுடன் ஆயிரம் ஆயிரம் விக்டர்கள் புதிது புதிதாக எழுந்து வரவேண்டும் இதுவே இன்றுள்ள வரலாற்றுத் தேவையுமாகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழத்தின் அடிக்கல் 11

# ஒரு மலையின் சரிவு



மேஜர் கணேஸ்

அவனுடைய சாவு ஓர் இலையின் உதிர்வு அல்ல - ஒரு மலையின் சரிவு ஆகும்.

மேஜர் கணேஸ் தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் மேனி சிலிர்க்க வைக்கும் ஒரு அத்தியாயம் ஆகிவிட்டான்.

பெருத்த மீசை - தடித்த உதடுகள் - பருத்த மார்பு - களத்தில் வெடித்த எரிமலையாய் உலா வந்தவன் கணேஸ்.

மூதூர் - ஆறுகளால் துண்டு துண்டாகிப் புவியியல் நிலையில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் நிலப் [illegible] வெறிச் சிங்களவரின் குடியேற்றப்பகுதி - இஸ்லாமியத் தமிழருக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் அவர்கள் வாழ்வையே சூறையாடும் முஸ்லீம் ஊர்காவல் வெறிப்படையின் இருண்ட கூடாரம், 9 இராணுவ முகாம்களாலும் 3 அதிரடிக் காவல் நிலையங்களாலும் வளைக்கப்பட்ட தமிழீழத்தின் முன்வேலிப் பகுதி. அங்கேதான், விடுதலைப்புலிகள் இயக்கத்தை வித்திட்டு வளர்த்தான் கணேஸ்.

1981 ஆண்டு தலைவர் பிரபாகரனைச் சந்தித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தபோது அவனுக்கு வயது இருபதுதான். ஆனால் அப்போதே அவன் கண்களில் நெருப்பின் அலை பொங்கிற்று. ஒன்றாய்ப் படித்த காலத்தில் ஆசீர் சீலனோடு சேர்ந்து வளர்த்துக்கொண்ட விடுதலை உணர்வுகள் ஆழப்பதிந்திருந்தன.

தளபதி சீலனுக்குப் பக்கத்தில் அவன் ஒரு வீரனாய்க் களத்தில் நின்ற காலம் உண்டு. அந்த நாட்கள் கணேஸின் வாழ்க்கையில் அவன் பாடம் கற்ற நாட்களாகும்.

மீசாலை முற்றுகையில் தளபதி சீலன் களத்தில் மீளாத்துயில் கொண்ட நிகழ்ச்சி கணேஸ் நெஞ்சில் மின்னலின் கொடிய வீச்சாயிற்று. தன் இனிய பள்ளிக்கூட நண்பனின் அந்தப் பெரிய சாவை அவன் என்றும் மறந்ததில்லை.

நெல்லியடியில்தான் அவனுடைய முதல் களப் போர். இங்கேதான் 02.07.1982 அன்று ரோந்துப் பொலிஸ் படையினரைச் சாய்த்து, வீறு கொண்ட தன் போராட்ட வரலாற்றின் முதல் அத்தியாயத்தை எழுதினான். ஓய்வில்லாத அந்த மாவீரன் தொடர்ந்து கண்ட களங்கள் ஒன்றா? இரண்டா?

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், உமையாள்புரம் இராணுவ வாகனங்கள் மீதான அதிரடி, 13 இராணுவ வெறியர்களை முதன் முறை பலிகொண்ட திருநெல்வேலி வரலாற்றுப்போர், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதல், திருக்கோவில் நீதிமன்றத்தில் துரோகி ஒருவன் மீதான துப்பாக்கிப் பிரயோகம், கச்சிலைப்பற்றை முற்றுகைத் தகர்ப்பு, கட்டைப் பறிச்சான் கண்ணிவெடித்தாக்குதல், பாலம்பட்டாறு இராணுவ மோதல், புலிகள் வரலாற்றில் முதன் முதல் இராணுவத்தின் எல்.எம்.ஜி. வகைத்துப்பாக்கியைக் கைப்பற்றிய [illegible] கவசவண்டித் தகர்ப்பு, இறால்குழி சுற்றிவளைப்பு மீறல் போர், 5ம் கொலனி இராணுவ நேரடி மோதல், வாகரை கண்ணி வெடி அதிரடித் தாக்குதல், தெஹியத்த பொலிஸ் கொமாண்டோக்கள் கடத்திச்சென்று நடுக்காட்டில் கற்பழிக்க முயன்ற தமிழ்ப் பெண்களை மீட்டெடுத்த தீரப்போர், எமது விடுதலை வரலாற்றில் முதல் தடவை சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஹெலிகொப்டர் போர் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய [illegible] முற்றுகை உடைப்பு, சம்பூர் புதிய வெருகல் விடுதலைப்புலிகள் முகாம் வளைப்பு முயற்சி முறியடிப்பு ஆம்... கணேஸ் புலியின் எல்லை கடந்த மாவீரன்.

தமிழீழத்தின் வடக்கெல்லைக் கிராமங்களில் ஒன்றான காரைநகர் [illegible], தெற்கெல்லைக் கிராமங்களில் ஒன்றான திருக்கோவில் வரை

Tamileelam Archive

கனவுகள் பார்த்த கணேஸ், தமிழீழம் முழுவதையும் தன் இரண்டு கால்களால் அளந்தான். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு என்று நீண்டுகிடந்த தமிழீழத்தை இணைத்து நின்ற அவன் செயல் வடக்குக்கும் கிழக்குக்கும் வேலிபோட நினைப்போருக்கு வரலாறு கொடுத்த சரியான அடியாகும்.

கந்தளாய் என்னும் கிராமத்தில் எளிமையான குடும்பத்தில் பிறந்த கணேஸ் ஆடம்பரம் இல்லாதவனாய் எளிமையானவனாகவே கடைசிவரை வாழ்ந்தான். புலிகள் அவனை விரும்பினார்கள் என்று சொல்வதைவிட அவனைப்போல் இருக்க விரும்பினார்கள் என்பதே பொருத்தமானது.

கனித்தீவின் அழகான உப்பாற்றங்கரையில், புலிகள் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து மகிழ மகிழப் பேசுவார்களே! வெருகல் மண்ணுக்குப் பச்சை வண்ணம் பூசும் வயல்களில் புலிகளின் கைகளைப் பற்றியபடியே சிரிக்கச் சிரிக்கப் பேசி அவன் உலா வருவானே ஓ!... அந்த நாட்கள் மிக மிக இனிமையானவை. இஸ்லாமியர், இஸ்லாமியர் அல்லாதார் இடையே மதக்கலவரத்தை ஏற்படுத்தித் தமிழினத்தைப் பிரிக்கச் சிங்கள ஆட்சியாளர் முனைந்த ஒரு சந்தர்ப்பத்தில் கலவரத்தை நிறுத்த மூதூர் நகருக்கு பிரசைகள் குழுவை அனுப்பினான் கணேஸ். அக்குழுவைக் கூலிப் படையினர் கைதுசெய்தபோது போராடி அவர்களை அவன் மீட்ட காப்போர், இன்னொரு மெய்சிலிர்க்கும் வரலாற்று நிகழ்வே. புலிகளுக்குப் பக்கத்தில் மட்டுமல்ல மக்களுக்குப் பக்கத்திலும் அவன் நெருக்கமாகவே நின்றான்.

சாவு அந்த மாவீரனைச் சந்தித்ததுதான் கொடுமையானது! திருகோணமலை மாவட்டத்திலுள்ள பெரிய பாலம் என்ற இடத்தில் 05.11.1986 அன்று 4 மணி அளவில் நிகழ்ந்த இராணுவத்தின் சுற்றிவளைப்பில், மேஜர் கணேஸ், நெருப்பின் நடுவில் ஐந்து ஆண்டுகள் நின்று விளையாடிய விடுதலைப் புலி நேர் நின்று எதிரிகளை மோதி நிமிர்ந்த தலையோடு மரணத்தை ஏற்றுக்கொண்டான். தமிழீழத் தலைவர் பிரபாகரனின் மாபெரும் துப்பாக்கிகளில் ஒன்று மௌனத்தைத் தழுவிற்று.

ஓ...... கணேஸ்!......

நீ போய்விட்டாயா? இல்லை....!

அகதிகள் முகாமில் இருந்து உன்தாய் ஆசையோடு உனக்கென்று சமைத்துக் கொடுத்த சோற்றுப் பொட்டலத்தோடு, உன் தந்தை பயந்து பயந்து உன்னைக் காண வருவாரே...

அந்தச் சோற்றுப் பொதியை அவிழ்த்து வைத்து ஒவ்வொரு பிடியாய் வைத்து நீ புலிகள் வாயில் ஆசையோடு ஊட்டுவாயே!


நீ ஊட்டிய சோறு எங்கள் உடலில் இரத்தமாகி விட்டதையா.

நடக்கிறோம்......

அந்த உப்பாற்றங்கரை...... அந்த வயல்வெளிகள்......

■ நன்றி: விடுதலைப்புலிகள், குரல் 12, 1987





## மாவீரர் வழிசெல்வோம்

மாவீரர் நாமத்தைப் போற்றிடுவோம்
மானமுடன் அவர் வழி சென்றிடுவோம்
மாண்ட மாவீரரின் கனவு பலித்திட
போற்றி வாழ்த்திடுவோம்

தாய்நாட்டு மானங் காக்க
புறப்பட்ட வேங்கைகளே
அழித்திட்ட பகைவனின்
கோட்டையை அழித்திடப் புறப்பட்டோம்

சொந்தப் பற்று பாசத்தை மறந்து
தாய்நாட்டு பற்றுடன் மானங்காத்த மாவீரர்கள்
இவர்கள் பாதம் தொட்டு வணங்கி
உறுதி கொண்டு போர்களம் விரைவோம்

போராளி அன்புக்கரசன் (ஜீக்கி)
நவம் அறிவுக்கூடம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# லெப். கேணல் பொன்னம்மான்

தமிழீழத்தின் அடிக்கல் 12



லெப். கேணல் பொன்னம்மான்

1983-ம் ஆண்டுக்குப் பின் எம்முடைய இயக்கம் மிகவும் வேகமாக வளரத் தொடங்கியது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் எம்முடைய இயக்கத்தில் சேர்ந்துகொண்டிருந்தார்கள். ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களை நல்வழிப்படுத்தி, சாதாரண சராசரி இளைஞர்களுக்கே உரிய இளமைத்துடிப்புடன் வாழ்ந்து கொண்டிருந்தவர்களை புரட்சியாளர்களாக்கி, உலகமே வியக்கக்கூடிய வேறில்லா வீரர்களாக உருவாக்கிய பெருமையின் பெரும் பகுதிக்கு உரியவன் பொன்னம்மான் என்றால் மிகையாகாது.

ஏறத்தாழ மூவாயிரம் வீரர்களை உருவாக்கினான். அதாவது மூவாயிரம் வீரர்களுக்கு பயிற்சியளித்தான் என்றும் சொல்லலாம் பயிற்சியளிப்பதை விட புரட்சி வீரனை உருவாக்குவது என்பது பல பரிமாணங்களைக் கொண்டது. வெறுமனே ஆயுதப் பயிற்சி மட்டும் நல்ல புரட்சியாளனை உருவாக்கப் போதுமானது அல்ல என்பதை பொன்னம்மான் அடிக்கடி எடுத்துச் சொல்வான். வெறுமனே பயிற்சி கொடுக்கும் பயிற்சியாளனாக மட்டுமல்லாமல் அனைத்துத் தோழர்களுக்கும் 'தாயாகி நல்ல உறவாகி வாழ்ந்தான், எனவேதான் எல்லோராலும் "அம்மான்" என்று அழைக்கப்பட்டான்.

எமது பயிற்சிக் குழுவுக்கு பொறுப்பாளராக இருந்த வேளையிலேயே, எமக்கு வேண்டிய ஆயுதங்களை நாமே செய்துகொள்ள வேண்டும் என்ற துடிப்புடன் செயல் பட்டு அதற்கென்று ஓர் தனிப்பிரிவை உருவாக்கி, கைக்குண்டுகளை ஏராளமாகத் தயாரித்தான்.

அம்மானுடைய அந்த கைக்குண்டுகள் தயாரிக்கும் முயற்சியில் அவனடைந்த அனுபவங்கள் எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் நவீன கைக்குண்டுகளுக்கு நிகராக அவனுடைய தயாரிப்புக்கள் இருந்தன. அதைவிடவும் தானாகவே ஓர் புதிய வடிவத்தையும் உருவாக்கினான். அம்மான் வெடிமருந்துத் துறையிலும் சிறந்து விளங்கினான் என்றால் மிகையாகாது. தமிழர்களை சிங்களவர்கள் பொதுவாக 'பனங்கொட்டை' என்று கேலி செய்வது பல காலத்து வழக்கம். எனவே பனங்கொட்டையைப் போன்ற அமைப்பிலேயே தன்னுடைய கைக்குண்டுகளை தயாரித்தான். என்னிடம் பல தடவைகள் கூறி இருக்கின்றான். "மச்சான் பனங்கொட்டை என்று எம்மை இழிவு செய்தவர்கள் பனங்கொட்டையைக் கண்டாலே பயப்பட வேண்டும். எனவேதான் இந்த வடிவத்தை உருவாக்கினேன்" என்றான்.

நான் இயக்கத்தில் சேர்ந்து சில மாதங்களில் அம்மானும் சேர்ந்தான். நான் இயக்கத்தில் சேர்ந்தவுடன், இயக்கத்தால் நடத்தப்படும் விவசாயப் பண்ணைக்கு அனுப்பப்பட்டேன். அங்கிருக்கும் போதுதான் அம்மான் இயக்கத்தில் சேர்ந்தான். அம்மான் எப்போதும் கலகலப்புடன் காணப்படுவான். அது அவனுடைய தனித்துவம் என்றே கூறலாம்.

சில சமயங்களில் சினிமாக்களில் தோன்றும் நகைச்சுவை பாத்திரம் போன்று விளங்குவான். தான் மட்டுமல்ல தன்னை சூழ உள்ளவர்களையும், எப்போதும் சிரிக்கவைத்து கொண்டிருப்பதே அவனுடைய பொழுதுபோக்கு. சத்தியமாகச் சொல்கின்றேன் அவன் இருக்கும் இடத்தில் எப்போதும், எப்படியோ ஓர் சிரிப்பான சூழ்நிலையையே உருவாக்கி வந்தான்.

விவசாயப் பண்ணையில் ஏறத்தாழ ஒருவருட காலம் சேர்ந்து பணியாற்றினோம். விவசாயம் செய்துதான் நாம் எம்முடைய தேவைகளைப் பெறவேண்டியிருந்தது. விவசாயப் பண்ணைகளில் எப்போதும் கடுமையாக உழைப்போம். உழைத்து சோர்ந்த மாலை வேளைகளில் பொன்னம்மான் தினமும் பாட்டுப்பாடுவான். அம்மானின் தாயார் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவர். அம்மான் சங்கீதம் கற்றிராவிட்டாலும் நல்லாகவே



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பாடுவான். பாடல் மட்டுமல்ல பாடிக்கொண்டே நடித்துக்காட்டி சிரிப்புக் காட்டி ஒரு அட்டகாசமே செய்துவிடுவான்.

நானும் அம்மானும் தனித்திருக்கும் வேளைகளில் எம்முடைய விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலத்தைப்பற்றி விவாதிப்போம். கற்பனைகள் கூட செய்வோம். அதுமட்டுமல்ல எமது எதிர்கால நடவடிக்கையிட்டு, சச்சரவுபட்டுக்கொள்வோம். நாம் எமக்குத் தேவையான ஆயுதங்களை நாமாகவே தயாரிக்க வேண்டும் என்பதை பல காலம் சிந்தித்து வந்தோம். 79ம் ஆண்டு அப்பையா அண்ணன், பொன் அம்மான், அன்ரன், ஆகியோருடன் நானும் சேர்ந்து கைக்குண்டுகள் தயாரிக்கத் தொடங்கினோம். பலத்த இராணுவக் கெடுபிடிகளுக்கு நடுவில் ஓர் மறைவிடத்தில் எமது தொழிற்சாலை உருவாக்கப்பட்டது. இரும்பை உருக்கி வார்க்கக்கூடிய வசதி அச்சமயம் எம்மிடம் இல்லை. எனவே அலுமினியத்தினாலான கைக்குண்டுகளை உருவாக்கி வார்த்தோம்.

நால்வரும் மிகவும் பெருத்த சிரமத்தின் மத்தியில், முன் அனுபவம் ஏதுமில்லாமலேயே ஓரளவு எமது தேவையை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் கைக்குண்டுகளை உற்பத்தி செய்தோம். பின்பு பல இடைஞ்சல்களால் அந்த வேலைத்தளம் மூடப்பட வேண்டி வந்துவிட்டது. ஆனால் அன்றைய அந்த முயற்சியே நாம் பின்பு உலகமே வியக்கக்கூடிய வகையில் எமது உற்பத்திகளை உருவாக்குவதற்கு வழிகோலியது எனலாம். பிற்காலத்தில் பொன் அம்மான் HE-36 போன்ற கைக் குண்டுகளை மிகவும் நேர்த்தியாக மிகப் பெரிய தொகையில் உருவாக்கினான். அன்ரன், கிளைமோர், பண்டிக்குட்டி போன்ற நவீன வெடிகளை உருவாக்கினார்.

நானும் அப்பையா அண்ணாவும், மிகவும் சக்திவாய்ந்த பெரிய மோட்டார்களையும், குண்டுகளையும் தயாரித்தோம். இப்படியாக ஆரம்ப காலத்தில் இருந்தே எமது போராட்ட பணிகளை உறுதியாக முன்னெடுத்து வந்தோம்.

1983ம் ஆண்டுக்குப் பின் பொன்னம்மான், இயக்கத்தின் பயிற்சி குழுவுக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டபின், நான் யாழ் - மாவட்ட பொறுப்பாளராகவும் பணியாற்றியதால் இருவருக்கும் உறவாடக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை. சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான எமது வீரர்களை உருவாக்கி இயக்க வரலாற்றில் பெரும் சாதனை படைத்தவன் பொன்னம்மான்.

1986ம் ஆண்டின் பிற்பகுதியில் இருவரும் ஒன்றாக சந்தித்துக் கொண்டோம். அவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் உள்ள நாவற்குழி எனும் இராணுவமுகாம் மீது தாக்குதலை நடத்த நானும் என்னுடைய தோழர்களும் திட்டமிட்டுக் கொண்டிருந்தோம். இராணுவ முகாம் மிகவும் பலம்பொருந்திய வெளிஅமைப்பைக் கொண்டிருந்தது. இராணுவ முகாமில் ஒருபக்கம் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அது கடல்நீர் உள்வாங்கிய பகுதி. மற்றைய நூறு யாருக்கும் மேலாக ஒரே வெளிப்பிரதேசம். வெட்டவெளி. நாம் அப்பகுதியை கடந்து இராணுவமுகாமை அணுகுவது மிகவும் கஷ்டம். அதைவிடவும், இராணுவ முகாமைச்சுற்றி பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு மண்ணை கவச

வைத்திருந்தனர். அவர்களுடைய காவல் அரண்களை உடைத்துக்கொண்டு உட்புகுவது என்பது மிகவும் சிரமத்துக்குரியதும் எமது தரப்பில் அதிக சேதத்தை ஏற்படுத்தக் கூடியதுமான முயற்சி எனவே அவர்களுக்கு அதிர்ச்சியூட்டி அந்த அதிர்ச்சியில் இருந்து மீண்டும் அவர்கள் காவல் அரண்களை பலப்படுத்துவதற்கு முன்னர் நாம் தாக்கி உட்புகக் கூடியதாக திட்டத்தை உருவாக்கினோம்.

தினமும் அந்த இராணுவமுகாமுக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு ஒரு பவுசர் செல்வது வழக்கம். அது வெளியாரின் வண்டி சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டு இருந்தது. எனவே அதைப்போலவே ஒரு பவுசர் வண்டி



யைத் தயாரித்து, அதன் (கீழ்) அரைவாசிப்பகுதிக்கு வெடிமருந்தை நிரப்பி, மேலே அரைவாசிப் பகுதிக்கு தண்ணீரை விட்டு, நாம் திட்டமிட்ட நாளில் உள்ளே அனுப்பி வெடிக்க வைத்து, நாம் உட்புகுவது என்பது எமது திட்டம்.

பழைய வண்டியைப் போல் ஒரு புதிய வண்டியைத் தயாரிப்பது என்பது மிகவும் கஷ்டமான விடயம். அதிலும் அந்த மதிகெட்ட பவுசர் எங்கோ ஒரு இடத்தில் விபத்துக்குள்ளாகி ஒரு பக்கத்தில் நசுங்கியும் இருந்தது. எனவே நாம் செய்யும் வண்டியும் வாயில் காவல்களைத் தாண்டிச்செல்ல வேண்டி இருந்ததால் அதே போல் நசுக்கப்பட வேண்டி இருந்தது. இயற்கையாக விபத்துக்குள்ளான வண்டியைப் போல் எமது வண்டியை மிகச் சிரமத்திற்குப் பின் உருவாக்கினோம். புதிதாக மை பூசிய எமது பவுசரை பழைய பவுசரைப்போல் உருமாற்றம் செய்ய வேண்டும். ஏன் பழைய வண்டியில் ஏற்பட்டிருந்த துருப்பிடித்த பகுதி கூட எமது பவுசரில் இருந்தாக வேண்டும். அதைவிடவும் பவுசர் இரு பகுதியாகப் பிரிக்கப்பட்டு கீழ் பகுதி வெடிமருந்து நிரப்பிய பகுதியாகவும், மேல்பகுதியில் தண்ணீர் நிரம்பிய பகுதியாகவும் தயாரித்தோம். ஏனென்றால் முகாம் வாயிலில் உள்ள காவல் அரணில் இருப்பவர்கள் பவுசரின் மேல் ஏறி மூடியைத் திறந்து தண்ணீரைப் பார்த்தபின்புதான் உள்ளே அனுமதிப்பார்கள்.

இத்தனை சிரமங்களின் மத்தியிலும் அந்த பவுசரை மிக நேர்த்தியாக வடிவமைத்தோம். பவுசருக்கு வெடிமருந்தை இணைக்கும் பணியை பொன்னம்மான் எடுத்துக்கொண்டார். இம் முயற்சிக்கு வழிகோலி, அயராது உழைத்து வந்தவன் என் அருமை தோழன் வேடியப்பன்தான். அவன் சாவகச்சேரிப் பகுதிக்கு பொறுப்பாளராக விளங்கியவன். மிகத் துல்லியமாக முகாமை வேவு பார்த்து, இராணுவமுகாமினுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் அவதானித்து வைத்திருந்தான். வேடியப்பன், வாசுவும் சேர்ந்து நான் இரவு பகலாக உழைத்து அந்த பவுசரை உருவாக்கினார்கள். அவர்களுக்கு துணையாக ரஞ்சன் எனும் பொறியிலாளர் ஒருவர் பணியாற்றினார். அவர் பொன்னம்மானின் உறவினருங்கூட. மிகுந்த மதி நுட்பம் வாய்ந்த ரஞ்சன், வாசுவோடு சேர்ந்து விமானமொன்றைத் தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டு வந்தார். முழுமையாக தன்னை எம்முடனேயே இணைத்துக் கொண்டவர்.

14-02-1987 அன்று தாக்குதல் நடத்துவதாக இருந்தது. கெரில்லா தாக்குதல்களை இரவு நடத்துவதுதான் எமக்கு மிகவும் உசிதமானவை ஏன் என்றால் தாக்குதல் தொடங்கியதும் இராணுவ ஹெலிகொப்ரர்களும், குண்டு வீச்சு விமானங்களும் தகவல் கிடைத்து எம்மை தாக்கத் தொடங்கும். பகல் வேளையானால் மேலிருந்து கண்டு பிடித்து குண்டு வீசுவது அவர்களுக்கு மிகவும் சுலபமான விடயம். ஆனால் பிப 6.30 மணிக்குப் பின் இராணுவ முகாமுக்கு தண்ணீர் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. எனவே கடைசிச் சந்தர்ப்பத்தை தேர்ந்தெடுத்தோம். 6.30 மணிக்கு சண்டை தொடங்குமானால் சுமார் ஒரு மணி நேரத்தில் இருட்டத்தொடங்கும். அதன்பின் எமக்கு மிகவும் பாதுகாப்பாகவே இருக்கும். முதல் நாள் இரவு, இரவாக பொன்னம்மான், வாசு, ரஞ்சன் ஆகியோர் மருந்தடைத்தனர். "ஜெல்லிக்னைட்" நச்சுத்தன்மை அவர்களைப் பாதித்தது நான் பார்க்கும்போது மூவரும் சோர்ந்து காணப்பட்டனர். விடியும்போது பவுசர் வெடிமருந்து இணைக்கப்பட்டு தயாராக நின்றது. அம்மான் அவ்விடத்திலேயே தூங்கிவிட்டான். வாசுவும் நானும் வந்து

தாக்குதல் குழுக்களைப் பிரித்து அவரவர்களுக்குத் தேவையான பொருட்களை இணைத்துக்கொண்டிருந்தோம். மூன்று பெரிய லொறிகள் தயார் படுத்தப்பட்டன. முகாமுக்குள் சென்ற பவுசர் வெடித்ததும் ஜொனி, வேடியப்பன், ஆசை தலைமையிலான குழுக்கள் லொறிகளில் விரைந்து முகாமுக்குள் சுட்டுக்கொண்டே உட்புகுவார்கள். லொறியின் முன் புறமும், மேல்பக்கமும் மண்மூட்டைகள் அடுக்கப்பட்டன. முதல் லொறியில் ரொக்கட் லோஞ்சருடன் நிற்பவன் உட்புகும் போது ரொக்கட்டால் வாயில் காவல் அரணை உடைத்தெறிவதாக திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

நேரம் பிற்பகல் நெருங்கிக்கொண்டிருக்க தாக்குதல் குழுக்கள் தத்தமது நிலைகளுக்கு செல்லத்தொடங்கி விட்டனர். பவுசரை அனுப்பும் பொறுப்பு பொன்னம்மான், வேடியப்பன், வாசு ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நான் தாக்குதலை நடத்துவதற்காக, சகலருடனும் வோக்கிடோக்கியில் தொடர்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் இடத்தை தெரிந்தெடுத்து அதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

நான் ஐந்து மணியளவில் எல்லாக் குழுக்களையும் சரி பார்த்து வந்து கொண்டிருந்தேன். நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது நான் ஒரு குழுவினர் நின்ற வீட்டில் அவர்களை சரிபார்த்துக்கொண்டிருக்கையில், மிகப்பெரிய சத்தத்தை தொடர்ந்து ஒரு முறை பூமி அதிர்ந்தது. அதிர்ச்சி, வியப்பு சற்றும் புரியவில்லை. நேரத்தை பார்த்தேன், சரியாக 5.30 ஆனால் நாம் 6.30க்கு தான் வெடிக்க வைப்பதாக இருந்தது. எனவே பொன்னம்மானை பல தடவை வோக்கியில் கூப்பிட்டேன், வேடியப்பனைக் கூப்பிட்டேன், வாசுவைக் கூப்பிட்டேன் பதில் இல்லை, பல தடவைகள் அழைத்தேன். பதில் இல்லை, ஜொனியை அழைத்தேன் பதில் வந்தது என்னிடம் அழைத்து உடனடியாக சத்தம் கேட்ட இடத்திற்கு அனுப்பினேன்.

ஜொனி என்னை அழைத்தான், அங்கு சென்ற போது எங்கும் தூசிமயம். ஒரு பெரிய குழி, அதற்கருகில் வேடியப்பனுடைய கார் நொருங்கிப்போய் கிடந்தது. இதற்கு 50 யார் தூரத்தில் லொறி நின்றது. லொறிக்குள் பார்த்த போது ஐந்து தோழர்கள் இறந்துகிடந்தார்கள். ஆம் தண்ணீர் நிரப்பிக்கொண்டிருக்கையில் பவுசர் வெடித்து விட்டது. ஆனால் அந்த இடத்தில் நின்று சம்பவத்தைப் பார்த்த யாரும் உயிருடன் இல்லை. பொன்னம்மான், வேடியப்பன், வாசு, ரஞ்சன் ஆகியோர் அந்த இடத்துக்கு வந்ததாக தோழர்கள் கூறினார்கள். பவுசரில் தண்ணீர் நிரப்பும்போது தண்ணீர் சிந்தி ஒழுகியதாம். அதை பொன்னம்மான் வேடியப்பனுக்கும் வாசுக்கும் தெரிவித்து பொறியியலாளர் ரஞ்சனையும் அழைத்துக் கொண்டு பவுசர் நின்ற இடத்திற்கு சென்றார்கள். இன்னும் சிலர் தந்த தகவல்படி அவர்கள் அந்தத் துவாரத்தை ஒட்டுவதற்கு மின்சார இணைப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்ததாகவும் தெரியவருகிறது. ஆனால் அங்கு நடந்தது என்ன என்பது யாருக்கும் தெரியாது. ஏனென்றால் அந்தக்கடைசி சந்தர்ப்பத்தில் அங்கிருந்த எவரும் உயிருடன் இல்லை. எல்லோரையும் தேடினோம். வாசுவின் பிரேதம், அடையாள அட்டையும் வேடியப்பனின் காற்சட்டையின் ஒரு பகுதியும்தான் கிடைத்தது. பொன்னம்மானை அடையாளம் காணக்கூடிய வகையில் அவருடைய உடலோ, உடலின் பகுதியோ எதுவுமே கிடைக்கவில்லை. சுற்றிலும் வீசிக்கொண்டிருக்கும் காற்றோடு காற்றாய் அவன் மறைந்துவிட்டான். அந்தத் தவறு எப்படி நேர்ந்தது, விடை கிடைக்கவில்லை. இன்றும் கிடைக்கவில்லை இனி எப்போதும் கிடைக்கப்போவதில்லை.

■ கிட்டு

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழத்தின் அடிக்கல் **13**

# லெப். கேணல் புலேந்திரன்



லெப். கேணல் புலேந்திரன்

அன்பின் புலேந்திரன்,

தமிழ் மக்களின் பாதுகாப்புக்குத் தானே உத்தரவாதம் என்று எமது ஆயுதங்களைப் பெற்ற இந்தியா, நீ திருமலைக்குப் போவதற்குப் பாதுகாப்புக் கேட்டபோது இந்திய இராணுவத்திலுள்ள மேஜர் கருப்பசாமி உனக்குச் சொன்னார், "இன்றும் இல்லை, இனி எப்போதும் இல்லை" என்று. விடுதலைக்காகப் போரிடும் ஓரினம் தன்னைத் தானே நம்பியிருக்கவேண்டும் என்ற உண்மையை [illegible] அன்று இந்தியா உணர்த்தியது. பின்னர் [illegible] உனது மரணம் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

உனது மரணம் தமிழீழத்தையே உலுக்கியது. மாபெரும் வரலாற்றுத் துரோகமல்லவா அது. தமிழீழ வரலாற்றில் உனது பெயர் அழியாஇடத்தைப் பெற்றதல்லவா? முதன் முதல் சிறீலங்கா இராணுவத்தினர்க்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் (1981 இல் காங்கேசன்துறை வீதிச் சம்பவம்) பங்கு பற்றியவர்களில் சீலன், ரஞ்சன் ஆகியோர் வீரச்சாவெய்திய பின் நீ தானே எஞ்சியிருந்தாய். கடைசியில் நம்பிக்கைத் துரோகத்துக்கல்லவா நீ பலியாகியிருக்கிறாய். தமிழீழ விடுதலைப் போரின் பல வரலாற்றுப் பதிவுகள் உனது வீரச்சாவால் ஸ்தம்பிதமாகி விட்டனவே.

நான் இந்தியப் படைகளின் சிறையில் இருந்த காலத்தில் எனது மனைவி எனது மகனின் நிலையைப் பற்றி ஒரு செய்தி சொன்னாள். வீதியில் தமது தகப்பனுடன் செல்லும் குழந்தைகளை வெறித்தபடி பார்ப்பானாம். தனது பார்வையிலிருந்து அவர்கள் மறையும் வரை வேறெதையும் பார்க்கமாட்டானாம், பேசமாட்டானாம். இச் செய்தியைக் கேட்டதும், தந்தை அருகில்லாதது ஒரு குழந்தைக்கு எப்படியான ஏக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உணர முடிகிறது. கூடவே உனது ஞாபகம் என்னை வாட்டியது. எனது மகன் என்றோ ஒருநாள் தனது தந்தையைக் கண்டவன். இனி மேலும் அந்த வாய்ப்புக் கிடைக்கலாம். இனி மேலும் அவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கலாம். ஆனால் உனது மகள் பிறக்கும்போதே 'இன்றும் இல்லை இனி எப்போதும் இல்லை' என்ற நிலையல்லவா ஓ... எவ்வளவு விலை கொடுத்திருக்கிறோம் எமது தாயக விடுதலைக்கு. கூடவே எம் இயக்கத்தின் சக்தியையும் கணக்கிட்டுக் கொள்கின்றேன். இதையெல்லாம் தாங்கும் வலிமையை எப்படிப் பெற்றுக் கொண்டோமென்று.

இயக்க ரீதியாக என்பதை விட தனிப்பட்ட முறையிலும் எமது கிராமத்து மக்களின் இதயத்தைப் பொறுத்தவரை நீ அவர்களது தத்துப்பிள்ளை. பாடசாலை மாணவர்கள் என்ற போர்வையில் பொட்டுவின் வீட்டில் வாடகைக்கு குடியிருந்த அந்த நாட்களை நினைத்துக் கொள்கிறேன். மீள வருமா அந்த நாட்கள். "புலேந்திரன், புலேந்திரன்" என்று உருகி வழிந்தார்களே எமது கிராம மக்கள்! எங்கள் எல்லோருக்கும் இடையில் உன்னிடம் மட்டும் அப்படியென்ன சக்தியிருந்தது? விசேஷமான கறிகள் சமைத்தாலோ, கோயில் விசேஷங்களின் பிரசாதங்கள் என்றாலோ உனது பெயரைச் சொல்லி விசாரித்துக் கொண்டு வந்து ஒரு பங்கை தருவார்களே அது ஏன்?

அந்தக் காலத்தில் எனது கிராமத்தில் நடந்த மரண ஊர்வலங்களில் பிரேதத்தைச் சுமக்கும் தோள்களில் ஒன்று உன்னுடையது. மக்கள் காரியங்கள் நடைபெறும் வீடுகளில் அலங்கார வேலைகளுக்கிடையே உனது குரல் தனித்துக் கேட்கும். குடும்பத்தில் முரண்டு பிடிக்கும் இளைஞர்களுக்கு [illegible] உனது வார்த்தைகள் தானாம் கூடு. மாலை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



"நிசரென்டு வளைவு வந்திட்டுது" என்றெலாம் நீ சொல்லும் போது நாங்கள் வலியை மறந்து சிரிப்போம். பயிற்சியின் போது ஒழுங்காகச் செய்யாததற்காக நாங்கள் தண்டனை பெறும்போது நீ மேலதிகமாகச் செய்ததற்காகத் தண்டனை பெறுவாய். அந்த கடுமையான பயிற்சி முடிந்ததும் நாங்கள் தரையில் கிடந்து துடித்துக்கொண்டிருக்கும் போது நீயோ சிரித்தபடியே துள்ளித் திரிந்தாய் மீண்டும் வருமா அந்த நாட்கள்?

நாங்கள் செம்மணியிலிருந்து கொடிகாமம் வரை ஓடிப் பயிற்சிபெறுவது எதுக்கு ஓடுகிறோம் என்று தெரியாமல் எமது கிராமத்து இளைஞர்கள் "நாங்களும் வாறம்" எனத் துணைக்கு ஓடி வருவது "எந்த இடத்து நேசுக்கு ஓடிப்பழகுறீங்கள்?" என்று சாவகச்சேரி காவல் நிலையக் காவலர்கள் கேட்பது இன்றில் நான் எதை நினைப்பது? எதை மறப்பது அன்று எமது வியர்வையை தாங்கிக் கொண்ட அந்த வீதி அந்த வீதியால் செல்லும் போது உதிரம் கண்ணீரையும் ஏற்றுக்கொள்கிறது. உனது மகன் வளரும் இந்தப்பாதையெல்லாம் கூட்டிச் சென்று "இதால தாண்டா கொப்பரும் நாங்களும் ஓடிப்பழகினது" என்று காட்டுகிறேன்.


புலேந்திரன் நீ நடத்திய தாக்குதல்கள் ஒவ்வொன்றுமே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. சிறிலங்காவின் சகல படைகளுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தியிருக்கிறாய். குடியேற்றம் மூலம் எமது பாரம்பரிய பிரதேசங்களைக் கபளீகரம் செய்ய முனைந்த சிங்களப் பேரினவாதிகளுக்கு நீ சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தாய். அதனால் தான் உன்னை பணயமாக வைத்து தமது சிப்பாய்களைக் கேட்க முனைந்தது சிறிலங்கா அரசு. மணமாகி மூன்று மாதங்கள் உனது வாரிசைச் சுமக்கும் உனது மனைவி இந்த நிலையிலும் நீ அடிபணிய மறுத்தாய். "சிறிலங்கா இராணுவத்தினர் யுத்தகாலத்தில் கைது செய்யப்பட்டவர்கள். நாம் சமாதான காலத்தில் கைது செய்யப்பட்டவர்கள்" என்றாய். முடிவில் சயனைட் உட்கொண்ட நிலையிலும் கைகள், கால்கள் பற்களால் யுத்தம் நிகழ்த்தினாய்.

நேரத்தில் சனசமூக நிலைய மைதானத்தில் நீ தான் உதை பந்தாட்டப் பயிற்சியாளன். அயலிலுள்ள மாணவர்களுக்கு இலவசக் கல்வி போதனையாளன். இன்னும் எத்தனை எத்தனை? இந்தச் சம்பவங்களையெல்லாம் எமது கிராம மக்கள் ஞாபகப்படுத்திச் சொல்கையில் அவர்களது கண்கள் கலங்கும். தொண்டை அடைத்துக் கொள்ளும். மீண்டும் பிறந்து வரமாட்டாயா? என்ற ஏக்கம் பிறக்கும்.

'கப்பச்சொனிக்' அது தான் நாங்கள் உனக்கு இட்ட பட்டப் பெயர். எங்கும் எதிலும் வேகம் காட்டும் உனது போக்கு - பிறிவென்ற தொடங்கி எந்த வாகனத்திலும் உன்னுடன் நாம் ஏறப் பயப்படுவது உனது வேகத்தைப் பார்த்துத்தான். எங்கே போய் அடிபட்டாலும் இறுதியில் தொண்டுவதும் நாங்கள் தான். நீ சிரித்தபடியே எழும்பி வருவாய் அப்படியான சந்தர்ப்பங்களில் ஒரு போதுமே நீ உனது தவறை ஒத்துக்கொள்வதில்லை. "நானென்ன செய்கிறது நிசரென்று வந்[illegible]



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



உனது உடலில் தெரிந்த காயங்கள் சிங்களப்படை உன்மீது எவ்வளவு ஆத்திரம் கொண்டு இருந்தது என்பதைப் புலப்படுத்தின.

"இந்தியா எமக்குச் செய்த பாவத்தைக் கழுவ புனித கங்கை நீர் போதாது" என்று ஒரு வரலாற்றறிஞர் குறிப்பிட்டதை நினைவு கூருகின்றேன். திலீபனின் மரணம், உனது மரணம் எமது மக்களுக்கெதிரான போர் இவற்றைக் குறித்தே அவர் அவ்வாறு கூறினார்.

கரும்பறவை

நன்றி: ஈழநாதம் வெள்ளிமஞ்சரி 14.02.1992



விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினரான லெப்.கேணல் புலேந்திரன் அவர்கள் திருமலை மாவட்டத் தளபதியாகவும் விளங்கினார்.

இவர் பங்கேற்ற குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்:-

* முதன்முதலாக சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலான யாழ். காங்கேசன்துறை வீதித் தாக்குதல். (15-10-1981)

* சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல். (27-10-1982)

* பருத்தித்துறையில் பொலிஸ் 'ஜீப்' மீதான தாக்குதல். (18-02-1983)

* சாவகச்சேரி ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் முத்தையா மீதான தாக்குதல். (29-04-1983)

* கந்தர்மடம் தேர்தல்சாவடியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல். (18-05-1983)

* திருநெல்வேலித் தாக்குதல். (23-07-1983)

* பதவியா-புல்மோட்டை வீதி சிறீபுரச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல். (18-12-1984)

* அச்சுவேலி சிறிலங்கா இராணுவ முற்றுகைக்கு எதிராக நிகழ்த்த தாக்குதல். (09-01-1985)

*கொக்கிளாய் சிறிலங்கா இராணுவமுகாம் தாக்குதல். (14-02-1985)

* திருமலை-கிண்ணியா வீதியில் இராணுவத்தின் கவசவாகனம் மீதான தாக்குதல்.

* திருமலை-கிண்ணியா வீதியில் விமானப்படையினர் மீதான தாக்குதல்.

* முள்ளிப்பொத்தானை சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல்.


* பன்மதவாச்சி சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழத்தின் அடிக்கல் **14**

# லெப். கேணல் குமரப்பா



லெப். கேணல் குமரப்பா

1983ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்ட குமரப்பா அவர்கள் பின்னாளில், மட்டக்களப்பு மாவட்டத் தளபதியாகவும், யாழ் மாவட்டத் தளபதியாகவும் விளங்கினார்.

## இவர் பங்கேற்ற குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்:-

* பொலிகண்டியில் கடல் வழிமூலம் தரையிறங்க முற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல் (05-08-1984)

* பருத்தித்துறை பொலீஸ் நிலையத் தாக்குதல்.(10-04-1984)

* கொக்கிளாய் சிறீலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதல்.(14-02-1985)

* யாழ். பொலீஸ் நிலையத்தாக்குதல் (10-04-1985)

* மன்னார் பொலீஸ் நிலையத்தாக்குதல் (10-05-1985)

* குச்சவெளி பொலீஸ் நிலையத்தாக்குதல் (01-06-1985)

* வாகரையில் சிறீலங்கா இராணுவத்தின் மீதான தாக்குதல் (18-08-1985)

* ஏறாவூர் பொலீஸ் நிலையத்தாக்குதல் (02-09-1985)

* மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதல்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நன்னம்பிக்கை முனையாய் நின்ற பன்னிரு வேங்கைகள்....

தமிழீழ மக்களின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்விற்கோர் தலைவிதி வரைய முற்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தையும், அதன் தார தம்மியத்தையும் ஆற அமர எடைபோட முற்படுவோர்க்கெல்லாம் தற்போது கால அவகாசம் வந்து வாய்த்திருக்கிறது. மேற்படி ஒப்பந்தத்தில் சிறிலங்கா அரசு இதயசுத்தியுடன் கைபொப்பமிட்டிருக்குமானால் இப்பொழுது எதற்காக ஓர் புதிய நிர்வாகத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். என்ற கேள்வி கேட்பாரின்றியே காற்றில் கிடக்கிறது. இத்தகைய கேள்விகளையும், அதற்கான பதிலையும் தம் ஈகத்தால் எழுதிவைத்தவர் பலர். அவர்களில் மிக முக்கியமானவர்கள் தளபதிகள் குமரப்பா, புலேந்திரனுடன் பன்னிரு வேங்கைகளுமாவர். தமிழீழப் போர் என்பது சிறிலங்கா, தமிழீழம் என்ற இரு பக்கங்களை மட்டும் கொண்டதல்ல; சிறிலங்கா, இந்தியா, தமிழீழம் முக்கோண அச்சைக் கொண்டதென்ற உண்மையை உலகின்முன் அரங்கப்படுத்த தீருவில் தீயானவர்களும் இவர்களே.

இலங்கைத் தீவின் சுதந்திரம் வெளிப்படையானதல்ல; சுதந்திர சாசனத்தில் கைபொப்பமிடும்போதே அதில் பல தவறுகள் திட்டமிட்டபடி நிகழ்த்தப்பட்டிருந்தன. அந்தத் தவறுகளின் மீது மோதிய எதிர்விசையே தமிழீழப் போர். இந்தப் போர் பயணத்தில் பன்னிரு வேங்கைகளின் தியாகமே சடுதியான மாற்றத்தை ஏற்படுத்திய புள்ளியாகும். 15-ம் நூற்றாண்டில் ஆபிரிக்க கடல் வழியாக இந்தியாவிற்கு வழி தேடிய ஐரோப்பிய மாலுமிகள் தென்னாபிரிக்க முனையைக் கடக்க முயன்றபோது கடும் புயலினால் தாக்குண்டதும், அதற்கு 'புயல் முனை' எனப் பெயர் சூட்டினர். இதை மறுதலித்து புயலைக் கடப்போரே சீரான வழியைக் காண்போரெனக்கூறி, அதற்கு மறுபடியும் 'நன்னம்பிக்கை' முனை என்று பெயரிட்டு, இந்தியாவைக் கண்டுபிடிக்க வழியமைத்தவன் ஸ்பானிய அரசனான 3-ம் ஜோன். இந்தப் புயல் கடந்த பயணமே இன்றைய விஞ்ஞான உலகின் வரவிற்கு வழியமைத்தது என்பது அனைவரும் அறிந்த வரலாறு. இதுபோலவே தமிழீழப் போர் பாதையிலும் முதலில் புயல் முனையாகவும் பின் நன்னம்பிக்கை முனையாகவும் வழிகாட்டியவர்கள் பன்னிரு வேங்கைகளாவர். இவர்களின் தியாகத்தின்பின் இந்தியப் படைகளுடன் ஏற்பட்ட பயங்கர மோதலை, கடக்க முடியாத புயலென வர்ணித்தவர் பலர். ஆனால் தமிழீழத்திலிருந்து இந்திப் படை அகன்ற பின்னர், அந்தப் போர் கடந்தது புயல்முனையல்ல பல வெற்றிகளுக்கு ஆதாரமாக அமையப்போகும் நன்னம்பிக்கை முனையென எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படியே தமிழீழப் போரும் நம்பமுடியாத வெற்றிகளையெல்லாம் நிகழ்த்தியவண்ணம் சென்றது. அத்தகைய சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலுமே தமிழீழம் தன் தொப்பியைக் கழற்றி மரியாதை செலுத்தக் கூடியதொரு போராக உயர்வு பெற்று நின்றவர்கள் பன்னிரு வேங்கைகளுமாவர். ஏனெனில், போராட்டக் களத்தில் இந்தியப் படைகளுடனான மோதலைத்தாண்டியபோது [illegible] இனிவரும் எத்தடைகளையும் தாண்டவல்லது [illegible] நிரூபிப்பதாயிருந்தது. அந்தப் பெருமைக்குள் மறைந்து நிற்கும் நாயகர்களே பன்னிரு வேங்கைகள்.

தமிழரின் தாயக பூமியான வடக்கையும், கிழக்கையும் இணைப்பதை இன்றும் கூட அரசதரப்பினர் ஒப்புக்கொண்டதாகவில்லை. இந்திய இலங்கை ஒப்பந்தம் வடக்குக்கிழக்கு இணைவற்ற ஓர் நிலையைத் திணித்தபோது, குமரப்பாவும், புலேந்திரனும் ஓர் எழுதப்படாத ஒப்பந்தத்தின் மூலம் அதை நிராகரித்திருந்தனர். இந்த மகத்தான உண்மையை இன்றும் கூட பலர் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. மரணமடைந்த போது குமரப்பா யாழ் மாவட்டத்தின் தளபதியாகவும், புலேந்திரன் திருமலை மாவட்டத்தளபதியாகவும் இருந்தனர். இவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து நிகழ்த்திய மரணத்தின் பொருள், வடக்கும் கிழக்கும் மரணத்திலும் பிரிக்கமுடியாது கைகோர்த்து நிற்பதையே உணர்த்துவதாயிருந்தது. தமிழர்களின் ஒன்றிணைந்த தாயகக் கோட்பாடை வெளிப்படுத்த மனித சக்தியிலே இதற்கு மேல் ஓர் உயர்ந்த எல்லையை தேடவே முடியாது. ஏனெனில் மரணமடையும்போது தளபதி குமரப்பா திருமணமாகி ஒருமாத காலமே ஆகியிருந்தது. தோளில் போட்ட மாலைகூட வாடிப்போகாத வேளையில் அவர் அந்த எட்டமுடியாத தியாகத்தைப் புரிந்திருந்தார். அவரைப்போலவே தளபதி புலேந்திரனும் மணமுடித்து இரண்டு மாதகாலமே நிறைவுபெற்ற மணமகன்தான். இத்தகைய இக்கட்டான சூழலில் மானிடத்தின் மீது சவால் விடும் பின்னணியில் நின்று இவ் விரு இளைய உள்ளங்களும் புரிந்த தியாகமும், வடக்கையும் கிழக்கையும் இணைத்துக்காட்டிய விதமும் சாதாரண தியாகங்களல்ல. மணமாலை வாடுமுன்னர் போரில் மாண்ட புறநானூற்றுக்காலப் பூதப் பாண்டியன் புகழை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் காத்திருந்து தகர்த்து விட்ட வரலாற்றின் குறிப்பேடுகள் இவர்கள்.

தளபதிகள் குமரப்பா, புலேந்திரனும் பதினைந்து போராளிகளும் 03.10.87 அன்று கடலில் கைதானார்கள். ஒப்பந்தத்திற்கு முரணாக கொழும்பிற்கு எடுத்துச்செல்லப்படவிருந்த வேளையில் 05.10.87 அன்று சயனைட் அருந்தி பன்னிரு வேங்கைகள் மரணமடைந்தார்கள். கைது செய்யப்பட்டபோது அவர்கள் தப்பிச்செல்ல வேண்டிய தேவை இருந்திருக்கவில்லை, காரணம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அவர்கள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட போராளிகளே. எனினும் அவர்கள் கைதின் பின்னர், தலைவர் பிரபாகரன் அவர்கள் 'தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக இந்தியா எம்மை அங்கீகரித்தது. ஆகவே சிறிலங்கா அரசு எம்மைக் கைதுசெய்யும் பட்சத்தில் இந்தியாவே [illegible] பாதுகாக்கவேண்டிய கடமைப்பாட்டிற்குரியது' என்று சுட்டிக் காட்டியிருந்தார். ஆனால் அவ்வேண்டுகோள் இந்திய-இலங்கை

அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் இறுக்கமான நிலைமையே கடைப்பிடித்தனர். எனினும் கடலில் ஏற்பட்ட இந்த அனுபவமும், உரிமை நிராகரிப்புமே ஓர் புதிய வரலாற்றுத் தேவையை ஏற்படுத்திவைத்தன. அதன் பொருட்டு உருவாக்கப்பட்டதே கடற்புலிகள் அணியாகும். அன்று அவர்களுக்கு வழங்க மறுக்கப்பட்ட கடற் பாதுகாப்பை ஓர் குறுங்காலத்திலேயே புலிகள் ஏற்படுத்திக்கொண்டனர். இன்று கடற்புலிகள் பெற்றுள்ள அபார வளர்ச்சி, சோழ சாம்ராச்சியத்திற்குப் பின்னர், தமிழன் பெற்ற பேரெழுச்சியாகும். இந்த வளர்ச்சிக்குப் பின்னாலும் நிழல் போலத் தெரிவது பன்னிரு வேங்கைகளினதும் தியாகமுகங்களே.

மேலும், தமிழீழ அரசு பற்றிய அங்கீகாரமும் இக்காலத்தில்தான் தெளிவாக வரையறைசெய்யப்படுகிறது. அரசு என்றால் என்ன என்பதற்கு நீண்ட காலமாக எண்ணற்ற அறிஞர்கள் தோன்றி தமது வரைவிலக்கணங்களைக் கூறிக்கொண்டார்கள். அதுபோல தமிழீழ அரசுக்கும் ஓர் எல்லை வகுத்துத் தந்தவை இந்திய இலங்கை அரசுகளே. உண்மையாகவே இலங்கை ஒற்றைத் தேசியமுள்ள நாடாக இருந்தால் இந்திய இராணுவம் தீவு முழுவதும் நிறுத்தப்பட்டிருக்க வேண்டியது அவசியம். ஆனால் அவர்கள் இலங்கையின் வடக்குகிழக்குப் பிராந்தியங்களிலேயே முகாமிட்டிருந்தார்கள். அவர்களது பணி மலையகம் தவிர்ந்த தமிழீழத்தேசியம் நிலவும் பகுதிகளுக்குள்ளேயே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் இலங்கை பல்லினத் தேசியமுள்ள நாடென்பதை அவர்கள் தெளிவாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுடனான போரில் இந்திய இராணுவம் நகர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிறம் தீட்டினால், அதுவும், இன்றைய தமிழீழத் தேசத்திற்குரிய வரைபடமும் ஒன்றாக இருக்கும் அதிசயத்தைக் காணமுடியும். ஆகவேதான் போருக்கான அணிவகுத்து நின்ற இந்திய இராணுவம் தன்னை அறியாமலே தமிழீழத்திற்குரிய வரைபடத்தையும் வரைந்து சென்றுள்ளதெனலாம்.

மேலும் சோவியத் யூனியனின் குலைவுடன் ஒற்றைத் தேசியக்கோட்பாடும் உலகளாவிய ரீதியில் சரித்திரமாகிவிட்டது அல்லாமலும் தமக்குள் இணையும் நாடுகளின் ஒன்றியங்கள் யாவுமே பல்தேசிய அடையாளங்களை அங்கீகரித்த பின்பே இணைவுபடுகின்றன. இலங்கைத்தீவில் இவ்வளவு இழப்புகளும், பொருளாதாரப் பின்னடைவுகளும், நெடிய போரும் நிலவும் சூழலில் இரட்டைத் தேசியம்கூட ஏற்படாதிருப்பது கூர்ந்து நோக்கற்குரியது.

இருந்தபோதும் நம்மீது நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு சிதைவுகளின் போதும் ஈழத் தமிழ் மக்கள் ஓர் இலட்சியத்திற்காகவே உறுதியுடன் அணிதிரள்கின்றனர். வடமராட்சி மீதான தாக்குதல் நடைபெற, கரும்புலிகள் தாக்குதல் அறிமுகமாக வேண்டியிருந்தது. ஐந்தம்சக் கோரிக்கைக்காக திலீபன் சுவம் புரியவேண்டியிருந்தது. அதிகாரமற்ற இடைக்கால அரசுக்கான பேரம் பேசலில் பன்னிரு வேங்கைகளின் தியாகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அமைதி ஒப்பந்தம் முறிவடைய போர் தொடங்கியது. முதற் பெண்புலி 2வது லெப்டினன்ட் மாலதியின் தியாகம் நடைபெற அதன்வழி எண்ணற்ற நட்சத்திரங்களாலும், அவற்றை மறைக்க வந்த மேகங்களாலும், இடிமுழக்கங்களாலும் தமிழீழப் போர்வானம் நிறைந்துபோய் பல ஆண்டுகள் கடந்துவிட்டன. மாவீர நட்சத்திரங்கள் நிறைந்து போயுள்ள வானத்தின் கீழ் நின்று சகல சோகங்களையும் சுமந்தபடி தமிழீழ மக்கள் களைப்பின்றிக் காத்திருப்பதும் மாவீரர் நேசித்த சுதந்திரத்திற்காகத்தான். "மனிதன் மனிதனாதல் அதற்கு மேல் எவ்வளவு நான் நீடிக்கும் அவனது வேட்கை!" என்பது பிரான்சிய நாட்டின் தேசிய கீதத்தின் சில வரிகள். இதுவே மனிதனால் மேற்கொள்ளக்கூடிய ஆக்கிரமிப்பு எல்லைத்திற்கு வரையப்படும் கடைசி எல்லைக்கோடாகும். பன்னிரு வேங்கைகளின் பின் முழுதும் விட்ட ஆண்டுகளை எடைபோட்டால், குண்டு வீச்சு, உணவுத்தடை, உலகால் தனிமைப்படுத்தப்பட்ட தனிமை யாவுமே தமிழீழ மக்கள் இனிமேல் சந்திப்பதற்கு பெரிதாக எதுவுமில்லை. என்ற நிலையை உருவாக்கிவிட்டது. எனினும் அவர்கள் கடந்து கொண்டிருப்பது புயல் முனையை அல்ல நன்னம்பிக்கை முனையையே என்பதை வரலாறு நிச்சயமாக எழுதவேண்டி இருக்கும். ஏனெனில், குமரப்பா புலேந்திரனுடன் பன்னிரு வேங்கைகளின் காலத்திலேயே அவர்கள் புயலைக் கடந்து போகப் பயிற்சி பெற்ற இனமாகி விட்டனர்.

நன்றி: எரிமலை ஒக்ரோபர் 1997.

---

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னால் இந்திய சிறிலங்கா அரசுகள் அதை மீறும் வகையில் நடந்து கொண்ட போது, அந்நிலை குறித்து தலைவருக்கு எழுதிய **இறுதிக்கடிதம்.**

லெப். கேணல் புலேந்திரனின் கடிதம்

*எனம் தலைவர் அவர்கட்கு,*

*புலேந்திரன் ஆகிய நான் 3.10.87 அன்று அதிகாலை 4.30 மணியளவில் சிறீலங்கா கடற்படையினரால், பருத்தித்துறை கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டேன். எம்மீது எவ்வித குற்றமும் காணப்படாமல் இருந்தும் கூட என்னைக் காங்கேசன்துறை இராணுவமுகாமிற்கு அழைத்துச் சென்று ஓர் சிறைக்கைதிபோல் நடத்தப்பட்டேன். பின்னர் அங்கிருந்து பலாலி இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு இராணுவத்தினரின் பலத்த காவலுக்கிடையில் இந்திய அமைதிப்படையினரின் மேற்பார்வையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன். மேலும் என்னை சிறீலங்கா இராணுவத்தினர் விசாரணை என்ற பெயரில் அல்லது வேறு ஏதாவது காரணத்தை முன்வைத்தோ கொழும்பிற்கு கொண்டு செல்ல நேரிடலாம். இக்கட்டத்தில் இலங்கை அரசின் சட்டதிட்டங்களுக்கோ, கட்டளைகளுக்கோ நான் எந்த நேரத்திலும் கட்டுப்படப் போவதில்லை. அச்சட்டதிட்டங்களை அங்கீகரிக்கவுமில்லை. இவற்றை மீறி என்னைக் கொழும்பிற்குக் கொண்டு செல்ல நேர்ந்தால் என்னையே நான் அழித்துக் கொள்ளத் தயங்கமாட்டேன், என ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

*இங்ஙனம்*
*புலேந்திரன்*
*(ஒப்பம்)*

*"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"*

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive






மேஜர் அப்துல்லா



கப்டன் ரகு




கப்டன் நளன்



லெப்.தவக்குமார்



கப்டன் பழனி



லெப்.அன்பழகன்




பன்னிரு வேங்கைகளின்
நினைவு நாள்:
ஒக்ரோபர் 5



கப்டன் கரன்



2ஆவது லெப்.
ஆனந்தகுமார்



2ஆவது லெப்.
ரெஜினோல்ட்



கப்டன் மிரேஷ்

---

## லெப்.கேணல் குமரப்பாவின் கடிதம்

கனம் தலைவர் அவர்களுக்கு,

குமரப்பா ஆகிய நான் 3.10.87 அன்று அதிகாலை 4.30 மணியளவில் சிறீலங்கா கடற்படையால் பருத்தித்துறை கடலுக்கு மேலாக வைத்துக் கைது செய்யப்பட்டேன். பின்பு காங்கேசன்துறை முகாமுக்கு கொண்டு வந்து, அங்கிருந்து பலாலி இராணுவ முகாமுக்கு இந்திய அமைதிப்படையினரின் கண்காணிப்பிலும், இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பிலும் இருக்கிறேன்.

மேலும் என்னைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல நேரிடலாம். நான் இலங்கை அரசாங்கத்தின் சட்டங்களை அங்கீகரிக்கவில்லை. என்னைக் கொழும்பு கொண்டு செல்ல நேரும் பட்சத்தில் என்னை முழுமையாக அழித்துக் கொள்ள சித்தமாயுள்ளேன்.

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

இங்ஙனம்
குமரப்பா
(ஒப்பம்)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழத்தின் அடிக்கல் 15

# லெப். கேணல் சந்தோசம் ஒரு முன்னுதாரணமான போராளி



லெப். கேணல் சந்தோசம்

இரட்டை இலக்கத்தில் அங்கத்தவர்களைக் கொண்டு விடுதலைப்புலிகள் இயக்கம் விளங்கிய காலத்தில் தாக்குதல்கள் பற்றிய திட்டங்கள் போடப்படும்போது குண்டு வீசுவது என்ற பொறுப்பு சந்தோசத்திற்குத்தான். வெடிமருந்துகள், இயக்கத்தின் நிதி வசதி இவை மிகக் குறைவாக இருந்த காலம் அது. வீசப்படும் ஒவ்வொரு குண்டுகளுக்கும் நிறையப் பலன் எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே நிதானமாகச் சரியாகக் குண்டு வீசுவதற்குப் பொருத்தமான ஆளாகச் [illegible] செய்யப்பட்டான். ஒவ்வொரு தாக்குதல[illegible] இயக்கத்தி[illegible] எதிர்பார்ப்புக்கும் ஏற்ற வகையில் செயற்பட்டான் சந்தோசம். பின்னர் கண்ணிவெடியை சரியாகக் குறிதவறாது வெடிக்க வைப்பதற்குரிய நபராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டான். போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் திருமலை மாவட்டத்தின் தளபதியாகவும் விளங்கினான்.

விடுதலைப்புலிகளின் வரலாற்றில் முதன்முதல் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல்களான நெல்லியடி பொலிஸ் ஜீப் மீதான தாக்குதல், சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், மட்டக்களப்புக் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதல், திருமலை குச்சவெளிப் பொலிஸ் நிலையத் தாக்குதல், யாழ்ப்பாணம் பொன்னாலையில் கடற்படையினர் மீதான கண்ணிவெடித் தாக்குதல், வன்னி உமையாள்புரம் கண்ணிவெடித்தாக்குதல், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இராணுவ வண்டி மீதான கண்ணிவெடித் தாக்குதல் என்பனவற்றோடு வரலாற்றுப் புகழ்மிக்க திருநெல்வேலித் தாக்குதலிலும் முக்கிய பங்கு கொண்டு தலைவருக்கு உறுதுணையாக விளங்கினான். அது போலவே திருமலையின் வரலாற்றிலும் சந்தோசத்தின் பெயர் அழியா இடம் பெற்றது.

'மாஸ்ரர்' இவ்வாறுதான் 80ஆம் ஆண்டு காலப்பகுதியில் சந்தோசம் திருமலை மக்களுக்கு அறிமுகமானான். பாராளுமன்ற உறுப்பினர் பதவி நகரசபை நிர்வாகம் போன்றவை பெயருக்குத்தான் தமிழரிடம். ஆனால் பஸ் நிலையம் உட்பட நகரின் பல பகுதிகளையும் நிர்வகித்து வந்தவர்கள் குடியேறிய சிங்களவரே. அதேவேளை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் விஷக் காய்ச்சல் போல சிங்களக்குடியேற்றம் பரவிக்கொண்டிருந்தது. இப்படியான சூழ்நிலையில்தான் சந்தோசம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதிநிதியாக 'மாஸ்ரர்' என்னும் போர்வையில் இயங்கிக் கொண்டிருந்தான். உறுதியான கட்டடத்திற்கு எவ்வாறு ஒவ்வொரு நல்ல கல்லாக தேர்ந்தெடுப்பார்களோ அது போலச் சந்தோசம் ஒழுக்கமான கட்டுப்பாடான இளைஞர்களை ஒவ்வொருவராகத் தேர்ந்தெடுத்தான்.

அத்துடன் சந்தோசம் அவர்களுக்கு முன்மாதிரியாகவும் விளங்கியவன். காட்டிலே அவர்களுள் ஒருவனாக வாழ்ந்து காட்டியவன். சந்தோசம் திருமலை மாவட்டத்தில் அனைத்து மக்களுக்குமே சொந்தமானவன். தென்னைமரவாடியிலிருந்து வெருகல் கரைக்குமான எல்லாக் கிராமங்களிலுமே இவனது காலடி பதிந்துள்ளது எனலாம். எல்லாக் கிராமத்தவர்களையுமே இவனுக்குத் தெரியும் ஒவ்வொரு பகுதியிலும் அப்பகுதி [illegible] பிரச்சினைகள் என்ன என்பது இவனுக்குத் தெரியும் பொருத்த[illegible] மலையையே கரைத்துக்குடித்தவன் என்று சொல்லலாம்.

மேலும் இயக்கத்தின் அரசியல் வேலைகளின் விஸ்தரிப்பிலும் சந்தோசத்தின் பங்கு மிகப்பெரிது எனலாம் 'உணர்வு' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவனாக இருந்தது முதல் ஆரம்பகாலத்தில் இயக்கத்தினால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களைத் தயாரிப்பதிலும் பெரும் பங்குவகித்து அதிலும் முன்னோடியாகத் திகழ்ந்தான்.

இதேவேளை தான் ஒரு பல்கலைக்கழக மாணவன் என்னும் நிலையைப் பயன்படுத்தி போராளிகளுக்குத் தேவையான வீடுகள் அறைகள் என்பவற்றை வாடகைக்கு எடுத்து அவற்றில் அவர்களைத் தங்க வைப்பதற்கே பயன்படுத்தினான். இவ்வாறு சகல வேலைகளிலும் சந்தோசத்தின் பங்கு அதிகமாக இருந்தது. ஒருமுறை இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் நோக்கத்துடன் ஒரு பகுதியில் தொடர்ச்சியாக சில நாட்கள் தங்கவேண்டியேற்பட்டது. அந்த நாட்களில் பல்கலைக்கழகத்தில் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. சந்தோசத்திற்கு "இறுதி ஆண்டுப் பரீட்சையில் பங்கு பற்றச்செல்" என்று அவனுக்குச் சொல்லப்பட்டது ஆனால் அவன் மனம் அப்பொழுது பரீட்சையில் நாட்டங்கொள்ளவில்லை. தாக்குதல் முடியும் வரை போகமாட்டேன் என்று கூறிவிட்டான் முதலில் போராட்டம் அதன் பின்னர்தான் மற்றவையெல்லாம் என்பதே இவனது நிலை. இந்தச் செய்தியைத் தான் அவன் இன்றைய தலைமுறைக்கு விட்டுச் சென்றான்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு நீறு பூத்த நெருப்பாக போராட்டம் இருந்தபொழுது திருமலை மக்களின் மீளக்குடியேற்றம் அவர்களின் புனர்வாழ்வு என்பனவற்றில் கூடிய கவனம் செலுத்தினான் அத்துடன் இந்திய இராணுவம் பற்றியும் எச்சரித்தான்.

"இந்தியப்படை இங்கு அமைதி காக்க வரவில்லை எம்மை அழிக்கத்தான் வந்திருக்கிறது. நாம் அஞ்சக்கூடாது. திருப்பித் தாக்க வேண்டும். எங்களுடைய மண்ணை யாரும் ஆக்கிரமிக்க விடக்கூடாது" என்று போராளிகளுக்கு அறிவுறுத்தினான். அது போலவே செயலிலும் காட்டினான். அது வரை சிறீலங்கா இராணுவத்தினால் உணரப்பட்ட இவனது ஆற்றலை இந்தியப்படைப் படையினர் பின்னர் உணர்ந்து கொண்டனர். இரண்டரப்பிரம் சாரம் கட்டிய பையன்களின் சக்தி என்ன என்பதனை இந்தியப்படையினருக்கு இவன் உணர்த்தினான்.

சொல்லில் நிதானமும், செயலில் வேகமும் கொண்ட சந்தோசம் இந்தியப்படையினருடனான போரில் அவர்களுக்கெதிராக இரண்டு நாள் போரிட்டு இறுதிநாள் தீபாவளி தினத்தன்று கோண்டாவில் அவர்களுடன் ஏற்பட்ட போரில் அவர்களது இரண்டு தாங்கிகளை அழித்தபின் ஆற்றாது பின்வாங்கிய அவர்களால் ஏவப்பட்ட ஏறிகணைக்கு இலக்காகி வீரமரணத்தைத் தழுவிக்கொண்டான். இந்தியப் படையுடனான மோதலில் வீரமரணமடைந்த முதல் லெப். கேணல் ஆனான். எமது போராட்டத்தில் பெரும்பாலான அத்தியாயங்களில் முதலாவது என்று குறிப்பிடும் போது சந்தோசத்தின் பெயர் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றதோ. அது போலவே இந்திய இராணுவத்துடனான போரில் வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட முதல் லெப். கேணல் என்றும் இவனை வரலாறு கூறுகின்றது.


■ நன்றி சுதந்திரம்





தமிழீழத்தின் அணிகலன் 16

# பிரபாகரனின் பெருந்தளபதி



கேணல் கிட்டு

## திருவில்,

கடலோர மக்கள். இந்திய அரசு தமிழீழத்தின் இதயத்தில் அறைந்து வருத்திய பழைய நினைவைச் சொல்லிக்கொண்டு நிற்கும் பன்னிருவரின் நினைவுக் கோபுரத்தைச் சுற்றியும் நிரம்பும் மக்கள். நெஞ்சங்களில் கோபம், அழுகை, கண்ணீர். சோகத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் எழுந்த சினம். அன்புக்குரியவனை இழந்து விட்ட தவிப்பு.

இதயத்தில் விழுந்துவிட்ட இரண்டாவது அடி. அதே திருவில்.

கிட்டண்ணையும் அவர் தோழர்களும் கடலில்... படமாக... நம்பமுடியாத நிஜம்.

படத்திலும் கிட்டண்ணையின் முகத்தில் கனிவான பார்வை.

தன் தலைவனை வரவேற்கும் மகிழ்ச்சியான சிரிப்பு.

அம்மா தன் இளைய மகனின் இழப்பைத் தாங்கமுடியாமல் மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவருக்குத் தலைவரும் மகன்தான். தேசம் அழுதது.

மக்கள் கூட்டம் தங்கள் நெஞ்சத்தில் வாழ்ந்தவருக்கு அஞ்சலி செலுத்த வந்த தலைவனைப் பார்த்து கையசைத்தது. உறுதியான அசைவு. கண்ணீர் அலைகளினூடே பிறந்த நம்பிக்கை.

"தலைவன் இருக்கின்றான்" கிட்டண்ணை அடிக்கடி சொன்ன வார்த்தைகள் அவை.

ஐந்து வருடங்களுக்கு முன்பு கருமலை அம்மன் கோவில் முன்றலில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள். முகங்களில் தலைவனைக் கண்ட மகிழ்ச்சி.

தலைவன் சொல்லப் போகும் வார்த்தைகளுக்காக ஏங்கி நிற்கும் நிமிடங்கள்.

"அடுத்ததாக, தளபதி கிட்டு அவர்கள் பேசுவார்!" மக்களின் ஆரவாரம். ஆர்ப்பரிப்பு.

அவர்களின் தலைவனின் முன்பு, அவர்களின் தளபதி. மகிழ்ச்சிப் பிரவாகம். தங்கள் தளபதியில் தாங்கள் வைத்திருக்கும் அன்பைத் தலைவனுக்குக் காட்டும் துடிப்பு. உற்சாகம் அந்த ஆர்ப்பரிப்புக்குள் வார்த்தைகள் தெளிவாக விழவில்லை. ஒன்றிரண்டு மனதில் விழுந்தது அப்படியே பதிந்தது.

"தலைவர் இருக்கிறார் அவரை நம்புங்கள்" ஒரு தூய உள்ளத்தில் இருந்து வந்த சத்தியமான வார்த்தைகள். இன்றும் கூட அந்த வார்த்தைகளுக்குத்தான் எவ்வளவு உயிர்ப்பு இருக்கின்றது!"

* * *

கிட்டண்ணை. மக்களின் இதயங்களில் கூடுகட்டி வாழ்ந்த பறவை அது. அது எப்படி முடிந்தது? அதொன்றும் அதிசயமானதல்ல.

தங்களுக்காகச் சாவுக்கு முன்னால் நிற்கும் வீரன் ஒருவனை நேசிக்க எவருக்குமே காரணங்கள் தேவையில்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிட்டண்ணை சிறந்த ஒரு போராளி, வீரன். அவரின் துணிவு, வீரம், விவேகம், வேகமான செயல் ..... எல்லாவற்றையுமே மக்கள் இரசித்தனர். விரும்பினர். தாய்நாடு தன் குழந்தையில் வைத்த பாசம் அது.

மக்கள் பயந்து நடுங்கி உறக்கமற்று விழித்த காலம். வீதிக்கு வீதி செத்தழிந்த காலம் எல்லாம் மாறிப்போனது கிட்டண்ணையின் காலத்தில் தான்.

"கோட்டையில இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்" மறுகணம், அவசரமாக மேற்சட்டையைக் கூட ஒழுங்காக அணியாமல் கிட்டண்ணை அங்கு நிற்பார்.

"கிட்டர் நிற்கிறார் இனிப் பயமில்லை" மக்களின் மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுவதும் வெற்றிக் களிப்பு மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளைகள் பெற்ற வெற்றி.

பலாலி, நாவற்குழி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு இராணுவத்தினர் புறப்பட்டாலும் அங்கு கிட்டண்ணை நின்றார். இரவிலும் பகலிலும் ஒவ்வொரு நாளும் சண்டை..

அந்தக் காலங்களில்தான் கிட்டண்ணை மக்களின் மனங்களில் வாழத் தொடங்கினார். அது நிரந்தரமான - அழிவற்ற - வாழ்வு. கோபித்தாலும் சண்டையிட்டாலும் சாகாத வாழ்வு.

வீதிகளின் ஓரங்களில், வயது முதிர்ந்த கிழவர்களுக்கு அருகில் விரித்து வைத்திருக்கும் வெற்றிலைச் சரையிலிருந்து பாக்குச் சீவலை எடுத்துக் கடித்தபடி, கிட்டண்ணை நாட்டு நடப்புகளைப் பேசிக் கொண்டிருப்பார். சில மாலை நேரங்களில் இது நடக்கும். கிழவர்களுக்கோ தாராளமாக நேரமிருந்தது கிட்டண்ணைக்கோ அப்படியல்லை. ஆனாலும் அந்த மாலை நேரங்களை அவர் விரும்பினார்.

அந்த முதியவர்களின் நிலையோ சொல்லத் தேவையில்லை. அவர்கள் பெரிதும் மதித்த வீரன் அவர்களுக்கு முன்னால்... உண்மையில் அந்த நேரங்களில் அவர்கள் மிகவும் பெருமைப்பட்டார்கள்.

வீட்டு முற்றங்களில், பின் கோடிகளில், வெறுமேலில் இடுப்பில் முடியப்பட்ட காற்சட்டைகளுடன் "சிறிய கிட்டுகள்" நிற்பார்கள். இடுப்பில் கிட்டண்ணையின் '357 மக்னம்' சுழற்றுப்பாக்கியைப் போன்று இழுபட்டபடி வளைந்த தடி ஒன்று தொங்கும்.

கள்ளன் - பொலிஸ் விளையாட்டெல்லாம் மறைந்து புலிகள் - இராணுவ விளையாட்டுத் தொடங்கியிருந்தது.

விளையாட்டிலும் 'சின்னக் கிட்டுகள்' ஒரு நாளும் தோற்பதில்லை. வெற்றி என்றும் வெற்றிதான். விளையாட்டில் கூட [illegible] தோற்பதை அவர்கள் விரும்புவதில்லை.

இப்படித்தான் கிட்டண்ணை எல்லாரின் நெஞ்சங்களிலும் வாழ்ந்தார். அதனால் தான் அவருக்கு ஆபத்து என்ற போது மக்கள் துடித்தனர்.

அது 1987 இன் ஆரம்பம். வடமராட்சியில் இராணுவத்தினருடன் நடந்த சண்டையொன்றில் கிட்டண்ணையின் கையில் பட்டிருந்த காயம் குணமாகிச் சில நாட்கள் சென்றிருந்தன.

அப்போதுதான் தேசவிரோதிகளால் கிட்டண்ணைக்குக் குண்டு எறியப்பட்டது.

குண்டு வெடித்தது தெரியும். ஆனால், கிட்டண்ணைக்கு என்ன நடந்தது என்பது மக்களுக்குச் சரியாகத் தெரியாது. தமிழீழம் எங்கும் அதிர்ச்சி பரவியது மக்கள் சிரிப்பை மறந்து சோகத்தில் ஆழ்ந்து போனார்கள். தமிழ் நிலம் எங்கும் கவலையில் தவித்தது.

உயிருக்கு ஆபத்தில்லையாம் என்ற பொழுது ஓரளவு ஆறுதலாக இருந்தது. ஆனாலும், கவலை முற்றாகத் தீரவில்லை. ஏனெனில் கிட்டண்ணை ஒருகாலை இழந்திருந்தார்.

1987 மே நாள், மக்கள் பெருமளவில் திரண்டிருந்தனர்

"கிட்டண்ணை பேசுவதற்கு வருகிறாராம்" மக்கள் முகங்களில் மகிழ்ச்சி கிட்டண்ணையைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல்.



தேசியத் தலைவரும், கேணல் கிட்டுவின் தாயாரும்



களில் கூட பதற்றமற்று, நிதானமாகத் துப்பாக்கியைக் கையாள்வார். சண்டைகளின் போது தேவையற்ற துப்பாக்கி இயக்கத்தை அவர் ஒரு போதும் செய்ததில்லை.

இதெல்லாவற்றிற்கும் அவருடைய முதலாவது தாக்குதலே சான்றாக நிற்கின்றது.

உடையான்புரம். நிலக்கண்ணிகளைப் பொருத்தி விட்டு இராணுவத்தினரின் வருகைக்காக அவர்கள் பத்துப்பேர் காத்திருந்தார்கள். எல்லாம் சரி. இராணுவ வண்டிகள் வருவது தெரிந்தது.

கண்ணிவெடிகளைக் கையாளும் தொழில்நுட்ப அறிவைப் பெறாத காலம். இராணுவ வண்டிகளைப் பார்த்து மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் பாய்ச்சலுக்குக் கண்ணிகள் வெடித்தன.

புலிகள் வெவ்வேறு திசைகளால் பின்வாங்கினார்கள், அல்லது தப்பி ஓடினார்கள்.

கிட்டண்ணை பேசினார். தரமானதொரு பேச்சாளனுக்குரிய பேச்சு. அது மக்களின் பங்களிப்புக்குரிய பாராட்டு. ஒன்றிணைந்த மக்களை வாழ்த்திய பேச்சு.

அன்று மக்களிடையே உற்சாகமும் மகிழ்ச்சியும் கண்ணீரும் கரைபுரண்டு ஓடியது.

* * *

கிட்டண்ணையின் வீரத்தைப் போலத்தான் கோபமும் பிரசித்தமானது. ஒரு தாயின் கோபத்தைப் போல இரசித்து ஏற்றுக் கொள்ளும் கோபம். மறுகணம் எங்கென்று தெரியாது மறைந்துவிடும் கோபம்.

தோழர்களுக்கு அடியும் விழும். ஆனாலும், ஒருவரும் கோபிப்பதில்லை. கிட்டண்ணையில் உயிரையே வைத்திருக்கும் தன்மையைக் குறைப்பதுமில்லை. ஏனெனில் அவரின் கோபத்தினுள் இருக்கும் கனிவான இதயத்தை அவர்கள் அறிவார்கள்.

சண்டைகளின் பொழுது யாராவது ஒரு தோழன் காயமடைய நேரிட்டால் அந்த மனிதர் துடிக்கும் துடிப்பையும், யாராவது தோழனை இழந்துவிட்டால் முகம் கறுத்துத் தவித்து அழும் அழுகையையும் அவர்கள் கண்டவர்கள். அதனால் தான் கிட்டண்ணையில் யாரும் கோபிப்பதில்லை. அவரின் கோபம் தேவையானதே. இயக்கத்தின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணுவதற்கு அவசியமானது.

கோபத்தைவிட அவரின் உள்ளே இருந்த கனிவும் நிறைவும் மனிதர்களை வென்றன.

குறிபார்த்துச் சுடுவதில் கிட்டண்ணை வல்லவர். [illegible] வதில்லை. அது அவருடைய எதிரிகளுக்குக் கூடத் தெரிந்த விடயம். எங்களுப் பெரியவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பெருமை. ஆபத்தான வேளை



களத்தில் கேணல் கி

வீதிக்கு அருகாகத் தண்டவாளம் இருந்தது. அதன் இரு பக்கமும் வெட்டை.

கவச வாகனங்கள் இரண்டு, துப்பாக்கி ரவைகளை அள்ளி வீசிக் கொண்டு நெருங்கி வந்தன.

ஒரு சில விநாடி என்ற நிலை. கிட்டண்ணை தண்டவாளத்தில் நின்று திரும்பி தனது G-3 துப்பாக்கியால் கவசவாகனத்தை நோக்கிச் சுட்டார். தவறாத குறி. கவசவாகனத்தின் சாரதி காயப்பட்டான். அவ்வாகனம் தாறுமாறாக ஓடி வந்த வேகத்திற்குச் சரிந்து புரண்டது.

அவரது முதலாவது களமும் சாதனைதான்.

அதன் பின்பு, கிட்டண்ணை கண்ட ஒவ்வொரு களமும் அவரது வீரத்தை வெளிப்படுத்தி நின்றது பகைவர்களைக் கலங்கடித்தது.

கிட்டண்ணை சிறந்ததொரு வீரன். அதைப் போன்றுதான், கமராவைத் தூக்கினால் சிறந்ததொரு படப்பிடிப்பாளன். அது தொலைக் காட்சிக் கமராவாக இருந்தாலும் சரி.... சிறந்ததொரு இலக்கியவாதி - எழுத்தாளன் - ஓவியன்.






கைதிகள் பரிமாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தை
பேச்சுக்களின்போது கேணல் கிட்டு

போராளிகள் தொடர்பாக, போர்முனையில் அவர்களின் வாழ்க்கை தொடர்பாக உள்ளத்தைத் தொட்டுவிடும் உணர்வோடு அவரின் எழுத்துக்கள் வெளிப்படும்.

போராட்ட வாழ்வின் தத்துவமும் தீர்க்க தரிசனமும் அவர் எழுத்துக்களில் பரவியிருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் உயிர் போன்ற மக்கள் மீதான நேசம் அவர் எழுத்துக்களில் பரிணமிக்கும்.

* * *

சரி, இதெல்லாம் போக கிட்டண்ணையை நாங்கள் இழக்கத்தான் போனோமா? உண்மைதான். ஏற்றுக்கொள்ளமுடியாத தெளிவான உண்மை.

"நாம் ஏராளமான மரணத்தைக் கண்டுவிட்டோம் தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது. வீரமரணம் மக்குப் பரிச்சயமானது. சாவைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்றுதான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்திக்க போது எம் இதயம் உருக்குலைந்தது. தளர்ந்துவிடும் உள்ளம் குளியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்?" - மேஜர் அல்பேட்டின் இழப்பை அடுத்து அவரைப்பற்றிய நினைவுக் குறிப்பில் கிட்டண்ணை இதை எழுதினார்.

நாங்கள் கூட ஒவ்வொரு போராளியின் இழப்பின் பின்பும் அழுது முடிய இதைத்தான் சொன்னோம் கிட்டண்ணை இதை எழுதுகையில் எம்மில் சில நூறு பேரைத்தான் நாம் இழந்திருந்தோம். இன்று ஆயிரக் கணக்கான தோழர்களை நாம் இழந்துவிட்டோம். எங்கள் இதயங்கள் பல முறை வெந்து தணிந்து விட்டன. ஆனாலும் இன்றுகூட எம்மால் இழப்புகளைத் தாங்க முடியவில்லையே! அதிலும் கிட்டண்ணையை...!

"கிட்டண்ணையும் அவர் தோழர்களும் வந்த கப்பலை இந்தியர்கள் வழிமறித்துவிட்டார்களாம்" நெஞ்சில் அடித்தது போன்ற செய்தி. "இந்தியர்கள் விடமாட்டார்கள். அதுவும் கிட்டண்ணையை நிச்சயமாக விடமாட்டார்கள்".

"அன்று அறுவராகத் திலீபன் சாகும்வரை பார்த்துக்கொண்டிருந்த இந்தியா, தமிழர்கள் துடிக்கையிலும் புலேந்தி அம்மானையும் குமரப்பாவையும் சாகடித்த இந்தியா! தன் மரணவலைக்குள் சிக்கிவிட்ட கிட்டண்ணையை நிச்சயமாக விடாது" தெரிந்த செய்திதான். ஒவ்வொருவரின் மனதிலும் பதிந்துவிட்ட செய்தி.





அவர்களுக்குத் தேவையெல்லாம் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் எதுவும் அமுக்கப்படவேண்டும், அழிக்கப்படவேண்டும். அதற்காக அவர்கள் எல்லாம் செய்வார்கள்.

சர்வதேசச் சட்டங்களும் நடைமுறைகளும் இந்திய அரசிற்குத் தேவையற்றன. அதை மாற்றவும் திரிக்கவும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நேர்மையும் மனச்சான்றும் அந்தத் தேசத்தின் ஆளும் வர்க்கத்திற்கு இயல்பாகவே இல்லை.

சரணடைவதா! அது புலிகளின் மரபு இல்லை. அதுவும் கிட்டண்ணை! தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு பகுதி - தமிழர்களின் மானச்சின்னம் - அவர்களின் மாபெரும் தளபதிகளில் ஒருவன் - தலைகுனிவது... சித்திரவதைப்பட்டு, அவமானப்பட்டு சாவது...

"கிட்டண்ணை காப்பாற்றப்பட வேண்டும்". தேசத்தின் இதயம் துடித்தது. தமிழீழக்கரையெங்கும் ஆயிரமாயிரம் தோழர்கள் நின்று தவித்தார்கள்.

"எமது சிறிய படகு அலைகளால் தூக்கி மேலே மேலே வீசப்பட வேகம் தடைப்படுகிறது. ஆனால், பாரிய நேவிப்படகுகள் கடல் அலைகளை வெட்டிக் கிழித்துக்கொண்டு பாய்ந்து வருகின்றன.

"அவற்றிலிருந்து சிவப்பு நிறமாகச் சீறிக்கொண்டு வந்தன ரவைத்தொடர்கள்.

"ஓட்டம், ஓட்டம், ஜீவ மரண ஓட்டம்.

"நேவிப்படகிலிருந்து பாய்ந்து வந்த 'நேர் ரவைகள்' ஒன்று எமது படகின் எரிபொருள் தாங்கியைத் துளைக்க... படகு தீப்பற்றி, பின்பு வெடித்துச் சிதறுகிறது.

பருத்தித்துறையிலே இன்பருட்டிக்கு நேரே எம்படகு துரத்தப்படுவதை அறிந்து, எம் வீரர்கள் படகு தப்பி வரும் என்று பார்த்துக் கொண்டிருக்க, எம்படகு எம் கண் முன்பே வெடித்துத் தீப்பற்றி எரிவதைக் கண்டோம்.

"ஆனால், செல்லமுடியாது. ஏன்! அது தரையில்லை, கடல்"

பல வருடங்களுக்கு முன்பு சிறீலங்கா கடற்படையால் எமது தோழர்கள் வந்த படகு மூழ்கடிக்கப்பட்ட பொழுது, 'திரை கடல் ஓடினோம்- திரவியம் தேட அல்ல' என்ற தலைப்பில், கிட்டண்ணை இப்படித்தான் எழுதினார். ஆனால் இன்று... நீண்ட தொலைவில், இந்திய வல்லாதிக்கப்பிடிக்குள் கிட்டண்ணை... நாங்கள் செல்லமுடியாது. ஏன்?

கடலில், புலிகளின் கப்பலைச் சுற்றி இந்தியப் போர்க் கப்பல்கள். சரணடைய வேண்டும் அல்லது அந்தப் பாரிய போர்க் கப்பல்கள், சமாதான நோக்கத்தோடு ஆயுதங்களற்று வந்த புலிகளின் கப்பலை மூழ்கடிக்கும். பின்பு தாங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து தமது போர்க் கப்பலைத் தாக்க [illegible] புலிகளின் கப்பலை மூழ்கடித்ததாகக் கதையினை உருவாக்கும்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்திய அதிகாரிகளும் செய்தி நிறுவனங்களும் பொய் சொல்வதில் வல்லவர்கள். புலிகளின் மீது இலகுவாகப் பழி சுமத்தட்டும்.

'சரணடையப் போவதில்லை' சாவு நிச்சயமாகிப்போனது. ஆனால், அந்தச் சாவு எதிரிகள் தலைகுனியும் சாவாக இருக்க வேண்டும். சரித்திரம் படைக்க வேண்டும். தாய் நிலத்தைத் தலைநிமிரச் செய்ய வேண்டும்.

சண்டைக்களங்களில் எல்லாம் கிட்டண்ணையைக் காப்பாற்ற நூற்றுக் கணக்கான தோழர்கள் நின்றார்கள். ஆனால், இன்று...

குட்டி சிறி அருகில் நின்றான். அவன் சின்ன வயதில் இயக்கத்திற்கு வந்தவன். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயர். அவன் பெரிய ஆளாக வளர்ந்த பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை.

அவன் அழுதிருப்பான், தனக்காக அல்ல, கிட்டண்ணைக்காக. அவரில் அவன் உயிரையே வைத்திருந்தான். தன் சாவுக்காக அந்த உறுதி மிக்கவன் ஒரு போதும் கலங்கியவனில்லை.

இப்போது கலங்கி இருப்பான். மற்றத் தோழர்களும் கிட்டண்ணையைக் காப்பாற்ற முடியாமல் போகிறதே எனத் தவித்திருப்பார்கள். ஆனால் பிரச்சினை எல்லோரின் கைகளுக்கும் மேலே சென்றிருந்தது.

இந்திய வல்லாதிக்கப்பேய்கள் இறங்கி வரப்போவதில்லை.

எங்கள் தொலைத் தொடர்புக் கருவி கப்பலிலிருந்து வரும் செய்திக்காகக் காத்திருந்தது. தேசம் துடித்தது. தலைவர் தவித்துக் கொண்டிருந்தார். அவர் வளர்த்தெடுத்த தளபதி - கடினமான காலங்கள் எல்லாம் தோளோடு தோள் கொடுத்து உழைத்த தோழன்-

சாவின் விளிம்பில்...

முடிவு உறுதியாகிவிடும். ஒரு கணத்தில் கப்பல் சிதறும். காணாமற் போகும்.

கப்பற் சிப்பந்திகள் வெளியேறினார்கள்.

தேசம், அம்மா, அண்ணன், அன்பான மனைவி, தன்னில் உயிரை வைத்திருக்கும் தலைவன் எல்லோருமே கிட்டண்ணையின் நெஞ்சில் ஒரு கணம் வந்து விட்டுச் சென்றிருக்கலாம். ஆனால் வெளித் தெரியாது.

விடைபெற்றிருப்பார்கள் - தேசத்திடமிருந்து, தோழர்களிடமிருந்து, தலைவனிடமிருந்து...

கடற்கரைக் கிராமத்து வீடொன்றில் கப்பலுடன் தொடர்பில் இருந்து தொலைத்தொடர்புக்கருவி நீண்ட நேரம் காத்திருந்தது. ஏதாவது செய்தி வராதா...வருகிறதா...

'கிட்டண்ணையை இழந்து விட்டோம்'.

கடல் ஆர்ப்பரித்தது. அலைகள் எழுந்து இதயத்தில் அடித்தன. தேசத்தின் நெஞ்சு துடித்தது. தவித்தது. கதறி அழுதது. ஒரு கணம் தயங்கி நின்றது.

தாங்க முடியாத இழப்பு.

எங்கள் போராட்டப் படகு இப்படித்தான். தாங்க முடியாத இழப்புக்கள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும். பின் 'தலைவன் இருக்கிறான்' எனத் தொடர்ந்து செல்லும்.

அது கிட்டண்ணை சொல்லித் தந்த பாடம்.





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# மூத்த உறுப்பினர் லெப்.கேணல் அப்பையா அண்ணா

தமிழீழத்தின் நடுகற்கள் **17**



லெப்.கேணல் அப்பையா

எமது இயக்கத்தின் மூத்த அங்கத்தவர்களுள் ஒருவரான லெப்.கேணல் அப்பையா அவர்களின் வீரச்சாவுச் செய்தி உறுதி செய்யப்பட்டுள்ளது. 20.10.1997 அன்று மல்லாவிப் பகுதியில் காணாமல் போயிருந்த அவருக்கு நேர்ந்த கதியறியாது இன்றுவரை எமது தேசம் தவித்திருந்தது.

அது 'ஜெயசிக்குறு' நடவடிக்கைமூலம் சிங்களப் படைகள் வன்னியில் அகலக்கால் பதித்திருந்த நேரம். வயதால் முதிர்ந்து நோய்களால் தளர்ந்துபோயிருந்த அப்பையா அண்ணை சிறிலங்கா படைகளின் கைக்கூலிகள் கடத்திச் சென்றுவிட்டனர். அன்றிலிருந்து அவரைத்தேடி எங்கும் வலை விரித்திருந்தோம்.

அப்பையா அண்ணை எமது இயக்கத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகளின் சாட்சியாக இருந்தவர். மக்களுடன் மக்களாக தலைமறைவு வாழ்வில் எமது இயக்கம் வாழ்ந்த காலங்களில் எமது போராளிகளுக்குப் பெரும் பலமாக இருந்து செயற்பட்டவர். அன்றைய காலங்களில் கண்ணிவெடி உட்பட வெடிபொருள் உருவாக்கத்தில் முன்னின்று செயற்பட்டார்.

அன்றைய நாட்களில் இளையவர்களாகிய எமது போராளிகளிடையே வயது முதிர்ந்தவரான அப்பையா அண்ணை சிங்களப் படைகளின் கண்களில் மண்ணைத் தூவி எமது தலைவர் உட்பட்ட ஆரம்பகாலப் போராளிகளைக் காத்துவந்தவர். தாக்குதல்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நகர்வுகளுக்குத் தேவையான வாகனங்களை மக்களிடமிருந்து ஒழுங்கு செய்வது, எவரும் சந்தேகம் கொள்ளாதவாறு போராளிகளுக்குரிய தங்கங்களை ஒழுங்கு செய்வதென அன்றைய காலங்களில் முக்கியத்துவமான பணிகளை மூத்த போராளியான அப்பையா அண்ணை ஆற்றினார்.

1982 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் பொன்னாலைப்பாலத்தில் வைத்து சிங்களப் படையினரின் வாகனம் ஒன்றின்மீது எமது போராளிகளால் கண்ணிவெடித்தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டது. ஆனால் தாக்குதலுக்கான எதிரி வாகனம் மயிரிழையில் தப்பிவிட்டது. தப்பிக்கொண்ட எதிரிகள் எமது போராளிகளைத் துரத்தியபடி அவ்விடத்தைச் சூழவும் சல்லடை போட்டனர். தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட மின் பிறப்பாக்கி எதிரியின் கையில் சிக்கிவிட்டது. அதை வல்வெட்டித்துறையிலுள்ள கடையொன்றில் கொள்வனவு செய்திருந்த இராசையா என்ற அப்பையா அண்ணை அன்றிலிருந்து யாழ்ப்பாணம் எங்கணும் பிரபல்யமாகத் தேடப்பட்ட ஒருவரானார்.

1983 ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருநெல்வேலித் தாக்குதலில் பங்குபற்றிய போராளிகளுள் அப்பையா அண்ணையும் ஒருவர். தமிழர்களின் விடிவிற்கான போரின் படிக்கட்டாக அமைந்த அந்தக் கண்ணிவெடியின் பொறிமுறைகளைச் சரிபார்த்து செல்லக்கிளி அம்மானின் கைகளில் ஒப்படைத்திருந்தவர் அவர்தான். அந்த வரலாற்றுத் தாக்குதலின் நினைவுகளை மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்கள் 'களத்தில்' என்ற ஏட்டில் எழுதியிருந்தவற்றை மீட்டிப்பார்ப்பது இங்கு பொருத்தமாக இருக்கும்.

"1983ஆம் ஆண்டு யூலை மாதம் 23ம் நாள் இரவு 11.00 மணியளவில் யாழ் திருநெல்வேலியில் வைத்து சிறிலங்காப் படையினர்மீது ஒரு கண்ணிவெடித் தாக்குதலை நடத்தவென குறிப்பிட்ட வாகனமொன்றில் தேசியத்தலைவர் அவர்களும் அவருடன் செல்லக்கிளி அம்மான், விக்டர், பொன்னம்மான், சந்தோசம் மாஸ்ரர், புலேந்திரன், கணேஸ், ரஞ்சன், லிங்கம், பசீர்காக்கா, நான் மற்றும் சில தோழர்களும் அடங்கிய எமது தாக்குதல் குழுவில் ஒருவராக அவர் ஐம்பது வயதை அடைந்துவிட்ட அப்பையா அண்ணையும் அங்கம் வகித்தார். நாம் திட்டமிட்டபடி தாக்குதலுக்கான குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் எல்லோரும் வாகனத்தை விட்டு கீழே இறங்குகிறோம். எனவே அடுத்ததாக அங்குள்ள ஓர் இடத்தில் கண்ணிவெடித் தொகுதியைப் புதைக்கவேண்டும், அப்பையா அண்ணை செல்லக்கிளி அம்மானும், விக்டரும் கண்ணிவெடிகளைப் புதைக்க,

Tamileelam Archive

கண்ணிவெடியைப் புதைப்பதென்பது ஒரு பெரியவேலை. அதாவது காடுமுரடான தார்றோட்டில் பிக்கானால் கிடங்கு வெட்டுவதென்பது மிகவும் கடினமானது. அதிலும் கண்ணிவெடித் தொகுதிக்கான வெடி மருந்துகளை அடைப்பதென்பது அதைவிடப் பெரியவேலை. ஏனெனில் வெடிமருந்துகள் ஆபத்தானவை எல்லோருக்கும் அந்தவேலை ஒத்துவர மாட்டாது. எனவே வெடிமருந்துடன் நன்கு பழக்கப்பட்ட அப்பையா அண்ணா அவ்வேலையை திட்டத்திற்கேற்ப மிகவும் வேகமாகவும் அதேவேளை நிதானமாகவும் திறம்படச் செய்துமுடித்தார். இவைக்கப்பால் அப்பையா அண்ணா எமது இயக்கத்திலேயே மிகவும் வயது முதிர்ந்த மூத்த உறுப்பினர் ஆவார். இருந்தபோதிலும் அவர் மிகவும் சுறுசுறுப்பாகவும் விவேகத்துடனும் சதா இயங்கிக்கொண்டிருப்பார். அத்தோடு எமது உள்ளூர்த் தயாரிப்புகளில் ஓர் முக்கிய வெடிமருந்து நிபுணராகவும் அவர் விளங்கினார்.' என மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்கள் அதில் குறிப்பிட்டிருந்தார்.

அதன்பின்னான காலங்களில் இந்தியாவிற்குப் பயிற்சிக்குச்சென்ற போராளிகளுடன் அப்பையா அண்ணையும் ஒருவராக இணைந்தார். எப்படியாவது நானுமொரு இராணுவப் பயிற்சிபெற்ற விடுதலை வீரனாக உருவாகவேண்டுமென்று அவர் ஆவல் கொண்டிருந்தார். ஆனால் இவரது வயதைக் கருத்தில்கொண்ட இந்தியப் பயிற்சி அதிகாரிகள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். இருந்தபோதும் நாடு திரும்பிய அப்பையா அண்ணை போராளியாகவே தொடர்ந்தும் பணியாற்றினார். அவரது விடுதலைப் பணிக்கு இராணுவப் பயிற்சி என்றுமே ஒரு தடையாக இருந்ததில்லை. ஆரம்ப காலங்களில் எமது தாக்குதல்களில் பங்கெடுத்த கண்ணிவெடிகள் பல அப்பையா அண்ணையின் கரங்கள் தழுவப் பெற்றவை. வன்னிப் பகுதியில் நடந்த பல தாக்குதல்களிலும் அவர் பங்கெடுத்திருந்தார்.

அப்பையா அண்ணையின் கண்டுபிடிப்பு முயற்சிகள் இயக்கத்தில் என்றும் பிரபலமாகப் பேசப்படுபவை. அவற்றில் பல களத்தில் பயன்படுத்தப்படாதவையாக இருந்தபோதும்கூட இளம் போராளிகளிடையே அத்தகைய முயற்சிகளை ஊக்குவித்து இயக்கத்தில் அத்தகைய ஒரு மரபை வளர்த்தெடுக்கும் தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு அப்பையா அண்ணையின் அத்தகைய முயற்சிகள் வாய்ப்பாக அமைந்தன. அது பின்னைய காலங்களில் இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

பிற்காலங்களில் அந்த முதிய போராளி நன்றாக இளைத்துப் போயிருந்தார். எந்தப் பணியாற்றவும் அவரால் முடியாதிருந்தது. என்றாலும் எமது வரலாற்றுப் பெருமைக்குரியவராய் அவர் இருந்தார். அவரை இயன்றவரை பேணிப்பாதுகாக்க நாம் முயன்றோம். அதனால் தானோ என்னவோ எதிரியும் அவரது வாழ்வை முடிக்க விரும்பினான் போலும். என்றாலும் அவர் எமது புகழ் பூத்த விடுதலை வரலாற்றில் என்றென்றைக்கும் வாழ்வார்.

# மெழுகுவர்த்தி

சிறகு விரித்த
சிட்டுக்குருவி ஒன்று
சின்னச் சின்ன கனவுகளை
சிதைத்துவிட்டு - அதன்
சிந்தனை தலைவன் வழி செல்ல
சிறகடித்தது.

பயிற்சிகள் பல பெற்று
பாசறை வாழ்க்கையை
பாதியில் விட்டு
புதிய பறவையாகி- எவரும்
அறியாத வழியில்
பறந்து சென்றது.

பல மொழிகள்
பக்குவமாய் படித்து
பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக
பகைவனின் குகை அருகில்
பவனி வந்தது.

புயலைப் போன்று செயற்பட்ட
ஒரு பொழுதில்
புரியா வகையில் சிறகுகள் சிக்குண்டு
புதுக்கூடு ஒன்றில்
புழுப்போல் அடைக்கப்பட்டது.
மௌனம் எனும்
மொழி தவிர
வேறு எந்த மொழியையும்
அது அங்கு பேசவில்லை.

தொலைவில் இருந்தே
உருகும் அந்த மெழுகுவர்த்தி
அசையாத அச்சுடரொளி
எமக்கு பாதை காட்டிக்
கொண்டிருக்கின்றது.

உமா

Tamileelam Archive



# எல்லாமாய்

உங்கள் நாமங்கள்
எங்கள் நாவுகளிலும் வீதிகளிலும்
நாளெல்லாம் பூத்திருக்கும்.
கனவுகள் எமக்குள்
தாகமாய் மீள் எழும்.
மன வெளிகளில் உங்கள்
எண்ணங்களே நிலைத்திருக்கும்.
எங்கள் கண்களில்
உங்கள் கதையிருக்கும்
எங்கள் கரங்களில்
உங்களுக்காய் மலரிருக்கும்.
எங்கள் துப்பாக்கிகள்
உங்களுக்காய் அர்ச்சனை வேட்டுக்களை தீர்க்கும்.
எல்லாமாய்
உங்கள் மூச்சுக்கள்
எங்கள் சுவாசங்களாகும்.
விடியும் திசை நோக்கி
உங்கள் தடம் பதித்து தடை உடைப்போம்.
தாயகமே எம் இன இலக்காய்
உங்களுக்காய் குனிந்த
தலைகளை நிமிர்த்துவோம்.

**அ.காந்தாவின் கவிதைகள்**



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கடமை நேரம்

ஓ நட்பே....
வெகு தொலைவில்
நீயும் என் நினைவுகளும்
நேற்றுத்தான் அறிந்தேன்.
ஊர் திரும்பிய செய்தி
பக்கத்தில் என்றவுடன்
பார்க்கத் துடிக்கிறது எண்ணம்
இருந்தும் அது போலியானது
என்பதை அறிவேன்....

நட்பே புரிந்து கொள்
கடமை இன்னும்
முழுமை பெறவில்லை
நலமான நாட்டில்
நாளை சந்திப்போம்...அன்றி
நடுகல்லாய் நானிருப்பேன்
நட்பை எப்போதும்
பகிர்ந்து கொள் நட்பே

# தாய் நாடு

என்னை விட்டு விட்டு
எங்கே பறக்கிறாய்
சிறகடிக்க முயன்றபோதெல்லாம்
சிந்திக்க கற்றுத் தந்தவள்
நான் தானே
இப்போது நீ அறிவாயா?
உன் சிறகு எது வென்று.



ஆடியபாதம் பவர்கள் 2004

# விடியலின் போராளி

## கேணல் ராஜு நினைவாக...





நினைவு நாள்: 25 ஒகஸ்ட்

ஈழ ஞாயிறு இன்னல் அற்றதாய் ஒளிபரப்பவே
ஈழமண்ணை விட்டு தலைவன் அனுப்பினான்.
போனபோது எம் கண்கள் பனித்தன சோகமென்றல்ல
பாச உணர்வுடன் மீண்டும் வந்தெமைக் காண வேண்டுமே —ஆனால்

காலன் வந்துனைக் காவு கொண்டதால் நாம்
காணவில்லையே, காணவில்லையே, உனைக் காணவில்லையே
போன போக்கிலே புற்று நோய் அழித்ததால் வீரர் எம் நிலைகுலையுதே!
உள்ளம் யாவுமே குமுறி வேகுதே!

ராஜு அண்ணா! எம்
இதயம் தொட்டல்லவா ஈழ விடுதலை தீ சுமந்தீர்.
எதையும் வெல்லும் திடம் கொண்டல்லவா
[illegible]ப்பணி முடித்தீர்.
சிறந்ததொரு புனிதப்பணியின் சித்தியே!



Tamileelam Archive

பெருமை கொண்டுயர் பொறியியற்துறையதன் ஊற்றிடமே!
பகை இருப்பை அழித்திடும்
பீரங்கிப் படையணியின் பேரொளியே! – நீ
உறங்கிட்ட சேதி எம் செவிப்பறை தொட்டபோது
உறைந்திட்டது எம் குருதி – பேய்
அறைந்திட்டது எனவானது எம் உணர்வு.

அறங்காத்திட்ட தலைவன் புலியணியில்
எண்பத்து மூன்றிலே(83) இணைந்திட்ட தமிழ் மறவா,
எம் மனதின் ராஜு அண்ணா! – நாம்
தடம் புரண்டு விழுந்த பொழுதெல்லாம் – எமை இறுக
கரம் பிடித்த எழுந்திட வைத்திட வைத்தீர்
சிறுகச் சிறுகவாய் செம்மை செய்துமே – எமை
சிறுத்தைப் புலிகளாக்கினீர்.

படை வளர்ச்சி காணவே கணணிப் பட்டறை நடத்தினீர்.
'றோமியோ' என்றவன் கேட்ட பொழுதெல்லாம்,
வாரியே கட்டி ஓடியே போயினான் பகைவன்.
அலையலையாய் நாம் களம் புகுந்த பொழுதெல்லாம்
மலைமலையாய் வெற்றிவாகை சூடினோம் – உங்கள்
பின்புலப் பலம் கொண்டதால்,
எத்தனை வெற்றி கண்டோம்.
அத்தனை வெற்றியிலும் உம் துணை கொண்டிருந்தோம்.
இத்தனை துயர் கொண்டதாய் உங்கள் சேதி வருமென்று
கற்பனை கூடக் காணவில்லையே நாம்
என்ன செய்வோம்?
யாது செய்வோம்?
அண்ணா உங்கள் இழப்பு
விண்ணிலும் பெரியது – இந்த
மண்ணிலே கொடியது.

ஈழ மண் காத்திட அரும்பணி செய்த தளபதியே!
ஈழ விடியலின் பேரொளியே!
கேணல் ராஜு என்றுயர் அண்ணனே!
தமிழ் மரபின் குயிலனே!
சத்தியம் சொல்கிறோம்.
நிச்சயம் தமிழீழம் பிறக்கும் – உங்கள்
கனவு வெல்லவே தலைவன் வழி நடக்கிறோம்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'






போராளி த.செந்தமிழ்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# திலீபன்

நினைவு நாள்: செப்ரெம்பர் 26

நீ காற்றாயும் மழையாயும்
வருவாயாம்
எங்களின் மண்ணின்
பாட்டி சொன்னாள்

நீ எங்களின் மண்ணில்
புயலாய் வீசினையாம்

தூரத்தில்
வான் வெளிப்பரப்பில்
மின்னலாய்த் தோன்றும்
உன் [illegible]
பாட்டி [illegible]



தமிழ் ஆவணக்காப்பகம் Tamil Archive

நிலவெனச் சுடரும்
முகமும் உனக்கு
பறை எழுப்பும்
நாதத்துக்குள்
உனது பெயரின் உச்சாடனம்
எங்களின் கிராமத்தில்
பலபேரின் தூக்கத்தை கலைக்கிறது

விசையுறச் சுழலும்
வாழ்வுனக்குத் தந்தது யார்?

உன் கதையை
ஊரார் சொல்லுகையில்
எங்களுக்குள்ளும்
நெருப்பெரிகிறதே

நீ எங்கள்
வானத்துச் சூரியனுமாம்

எங்கள் குடிசை முகட்டுக்குள்ளால்
ஒளிப் பொட்டுச் சிந்துகையில்
உன் வதனச் சுடரைக் கைப்பற்ற
என் தம்பியும்
நானுமாய்ச் சண்டையிடுவோம்

வானத்திலிருந்து
நட்சத்திரங்களாயும்
பூமிக்கு அழகு சேர்ப்பீர்களா?

நீங்கள்
எங்களின் வானத்திருந்து
பூமிக்கு அழகு ஊட்டுகையில்
எங்களுக்கும் சிறகுகள் முளைக்கும்!
விண்ணை அளவும்
விசையுடன் ஏற.



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அளவுகோல்

நேற்றைய காலை
மலர்ந்தது விடிந்தது
இன்றும் மலரும் — பின்
முடிந்து கொள்ளும் — இது
இயற்கையின் நியதி
ஏக்கங்களுடன் மலர்தலை
எண்ணும் மாந்தர்கள்
நாளைய விடியற்காலையும்
எண்ணிக் கொள்வர்
காலையில் விடியும்
கதிரவனும் சுடும்
இன்றிருப்போர் நாளையில்லை
என்றிருக்கையில்
வானமும் கூட சிலவேளை
அழுது கொள்ளும்.
நம்பமுடியாமல் கண்களும்
சிலவேளை அனுமதியின்றி
அழுதுகொள்ளும்
இன்றைய விடியலை எண்ணி
ஏமாந்து பூத்துப்போன
கண்களுக்கு
நன்றிகள் — எம்
வாழ்வின் அளவுகோலும்
இவ்வாறே.



# மௌனம்

மௌனம் மொழியற்றது - ஆயினும்
அது உன்னதமானது
அது கொண்ட ஆயுதமும்
வென்றிடாத அற்புதங்கள்
ஆயிரமாயிரம்
வார்த்தைகள் சோதனைகள்
செய்யாத விந்தையை சாதிக்கும்
சாதனையாளர் இங்கே?..
மௌனமாக சாதித்த
தலைகள் உயர்கின்றன
தாய்மொழியான தமிழ்மொழி
சிறக்கும் — தம்
வாய்மொழி
யார்க்கும் மௌனம்
தன்னுயிர்க் கொள்கைக்காய்
தம் உயிர் தாய் மண்ணுக்கு
கொடுத்திடும் மௌனம்.

மாலதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## அழியாத நினைவுகள்...



பொய்மைகள் நிரம்பிப் புழுக்கும்
பொம்மையை உடைத்துக் காட்ட
தாய்மையின் பேருணர்வால்
புறப்பட்டாள்
பூபதித்தாய்.

நினைவுநாள்: 19
ஏப்ரல்




பண்பாட்டின் கருதியுடைந்து போன பின்னர்
யாரும் பேய்க்காட்டக் கூடாது
அதி அற்புதமான உலகை விடுவிக்கும்
ஆன்ம பேரிசைக் கீதம் எழுந்து வருகிறது என்று
விளையாட்டா
அந்தப் பெரிய அகிம்சைக் கருத்துவாக்கப்
பூதத்தை
எதிர்த்து நிற்பது என்பது,
பொய்மைகள் நிரம்பிப் புழுக்கும்
பொம்மையை உடைத்துக் காட்ட
தாய்மையின் பேருணர்வால் புறப்பட்டாள்
பூபதித்தாய்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## புதுக் குரல் ஓசை

யாருமற்றிருந்த வயலின் வெளிகளில்
சுருதிப் பண்ணை சுவாசித்தவள்

கானமயில்கள் அகவிடும் ஓசை
கார்முகில் கூந்தலாளைத் தானுயர்த்தும்
கல்லுகள் உடைபடும் ஓசை
மெல்லியலாளை மேலுயர்த்தும்



# 2ம் லெப்.மாலதி
## நினைவாக...

நினைவுநாள்: ஒக்ரோபர் 10



வேடர்கள் வில்லம்புகள் வளைக்குமோசை
கைகளில் விலங்குகள் குலுங்கிட
நடத்திச் செல்லும் ஓசை
காணாமற் போனோரைத் தேடிக்
கண்கள் பனிக்கும் ஓசை

சொல்லினிய தேன் தடவிய அம்புகள்
தைக்காது குறி நழுவும் பேரோசை
முள்ளில் மலர் கிழிந்து
முனகும் ஓசை

நீரின் பட்டுடல் கிழிபடும் ஓசை
உழைப்போர் குரல்
உயிர் கொண்டலையுமோசை


வெளியெங்கும் வாழ்க்கைத் திருவிழாவின்
பேரோசை வீழ்ந்தடங்க
கால வெளியில் அவள்
புது ஓசைப் பண்ணாய் பிறந்தாள்.








ஓவியம்: [illegible]











தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கேணல் கிட்டு உட்பட
# பத்து வேங்கைகளின் நினைவாக...







## அவர்களதும்
## அழியா நிழல்கள்

வெள்ளைப் பனி மலையின் கீழ்
சால சகதிதோறும்
நீர்வீழ்ச்சியின் அழகில் தோய்ந்து நின்ற
அவ்வொரு நாளின் மாலைப் பொழுதில்தான்
உரதும் அவர்களும் அக வெளிச் சூறாவைக் கேட்டோம்

வெண்ணிறத்ததுவும் சாம்பல் நிறத்ததுவும்
குழைத்துப் பூசிய ஓவியமாது
பறக்கும் பராக்கூட்டத்தில் மகிழ்ந்திருக்க
அவ்வொரு நாளின் மாலைப் பொழுதில் தான்
உரதும் அவர்களும் தீராக் காதலின் இதழ் விரிப்பைக் கேட்டோம்

உறைமுகிலும் அவர்கள் அருகிலும்
விதேசமாக வந்த சூரியன்
நீயும் அவர்களும் அமர்ந்திருக்க அங்கிகளுக்கு
புது வர்ணம் பூசிக்கொண்டிருக்க
அவ்வொரு நாளின் மாலைப் பொழுதில்தான்
உரதும் அவர்களுடையதும்
அழியாப் பெரு நிழலைக் கண்டோம்

தூரத்தே அலை குமுறும் தொனியில்
விடுதலைக் கப்பலின் பற்றிய நெருப்பு
நாளும் சூரியனில் மூண்டெரிகிறது
வெந்தே போய் சாம்பலிலும்
தூயரின் சாயலே அவன் முகத்தில் புன்னகைக்கிறது
இப்படி
அவன் வரும் போதும் பாறைப்பள்ளம்
அவர்கள் நிழல்கள் படருமா
யார் தான் அறிந்திருப்பார்கள்

**நினைவு நாள்:**
**ஜனவரி 16**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



## மறைமுகங்கள்

இலையில் படரும் நரம்பாய் தினமும்
மறைமுகங்கள் அதிலே வாழும்
சொல்ல நினைப்போம் காவிய நினைவை
பேச மறுக்கும் வாய் மொழி மூச்சு

இது ஒரு முழக்கம் நடுவானில்
அந்த அறையின் ஒளியில் புது தாகம்
மறைமுகங்களின் உயிரோட்டம்
ஈழ வானில் ஒலிக்கும் அவர் நாமம்


இவர் இதயகத்துள் எத்தனையோ துடிப்புக்கள்
அத்தனை துடிப்புக்குள்ளும் தமிழீழம் எனும்
தவிப்புக்கள்

இவர்களுக்கு கல்லறை உறக்கம் தேவையில்லை
ஆதலால் போராளி ஓய்வதுமில்லை
அணையாத தீபமாய் எரிகின்ற விளக்கு
அதை அறிய முடியாமல் தவிக்கின்ற நெருப்பு

ஊண் உறக்கம் ஒழித்திட்டாய் சுமந்தவர்கள் - பல
உயிர்களை காத்திட்ட உத்தமர்கள் - இவர்கள்
நாளை
பெரு விருட்சங்களாய்
வளர்ந்து நிழல் பரப்புவார்கள்
நிச்சயம் உறுதி.

மணலாறு ரகுநாதன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



## விழித்திரையில் ஓவியம்....

துள்ளித்திரியும் பருவமதில் துவண்டிருந்தீர்
பள்ளிப் பருவமதை பாதியில் துறந்தீர்
புள்ளிவைத்து சுயவாழ்வை மறந்தீர்
கொஞ்சும் மழலையாய் மனம் கவர்ந்தீர்
மிஞ்சும் அழகழிந்து வீரராய் நடந்தீர்
அண்ணன் வழித்தடம் தொடர்ந்தீர்
துஞ்சிடா வீரமதை நெஞ்சினில் சுமந்தீர்
அஞ்சிடாப் பகைமுடிக்க அணிதிரண்டீர்
முள்ளிப் பற்றை கடந்தீர்
முழுதாய் பணிமுடித்து நிமிர்ந்தீர்
விடிவு நோக்கி விழிநெறித்தீர்
விடுதலைக்காய் உயிர் சொரிந்தீர்
கொட்டும் மழையில் குளித்து
சொட்டும் விழிநீரில் நனைந்து
மொட்டும் மலர்ந்து உடை மறைத்து
சுட்டும் விழித்திரையில் நிறைத்து...

நா. நாமகள்
மாலதி படையணி

## ஒளிக்கீற்றுக்கள்

தமிழர் நாம் தலைநிமிர்ந்திட
தரணியிலே புதுவரலாறெழுதிட
தலைவன் அவன் காலத்திலே
தமிழீழம் அமைத்திட

ஈழத்தின் இன்னல்களாம்
இம்மண் மண்டியிடாதிருக்க
இன்னுயிரை ஈந்து
இக்காலத்தில் அடிக்கல் ஆனவர்கள்

இன்றல்ல, நேற்றல்ல
இம்மண்விடியும் வரை
ஒளிக்கீற்றுக்களாய்
இங்கு பிரகாசிப்பார்கள்
ஈழத்தின் வாழ்விற்காய்.

ஜே. அருண்மலர்



## புனிதர்களை பூஜிப்பதற்காக

ஓ பட்சியே....
எங்கே இவ்வளவு வேகமாய்
என்னிடம் ஒரு முறை கூறுவாயா
நானும் உன்னிடம் வரலாமா?
நன்று நன்று சகோதரியே
நான் எங்குமல்ல
நாற்திசையும் புகழ்பரப்பி
மனிதருள் மாணிக்கங்களாய்
மாண்புடன் மிளிர்கின்ற
மறத்தமிழ் வீரர்
மாவீரர்கள் — அப்
புனிதர்களைப் பூஜிப்பதற்காய்
செல்கின்றேன்.

சங்கரி (விதுரா)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





கரும்புலிகள் நாள்: ஜூலை **5**

# கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள்

கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள்
- எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள்
- எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும்
நெருப்பு மனிதர்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்
அவர்கள்



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# காலம் எழுதிகளின் கதை


நாளை மழை கழுவிச்செல்லும்
மண்ணிலிருக்கும் கால்தடத்தையும்.
அவர்களை எந்தக்கொடியாக வாங்கிய காற்று
தன் வயிற்றுக்குத் திரும்ப
சுவடுமற்றுத் தொலைந்து போவார்.



இறுதியாக தாய்மண்ணினை முத்தமிட்டு
எல்லை பிரிந்தேகிய போது
தொட்டுத் தடவிப்போயினர் பூக்களை.
அன்றைய நாளே அவை வாடி விழுந்திருக்கும்.
பாடிய பாடல் பரவிய வனம்
மீண்டும் மௌனத்துறையும்.
அவர்களுக்கு கையசைத்துப்போன
பள்ளிச் சிறுவர்
வழமையான வழிப்போக்கரென எண்ணியிருப்பர்.
வழியில் கொஞ்சம் களையாற அமர்ந்திருந்த
தான் குடைவிரித்து அக்கினி நாவுகளுக்கென்று
இந்த வரம்பிற்தானே நடந்தனர்
இந்தக் களனிற்தானே படகேறினர்
இதோ இந்தக் கோட்டவெளிக் கிணற்றிலதான்
விமானங்கள் நீரருந்தின.
இடியுண்டு ஓசையற்றுப் போக
எவரும் எட்டிப்பார்க்காதிருந்த கோவில் வெளியிற்தான்
கூட்டாக எல்லோரும் போட்டோ எடுத்தனர்.
உள்ளே கலங்கி
வெளியே விளங்கியபடி நின்றவருக்கு
சென்றவர்கள் பயணம் சொல்லிப் போயினர்.
நடந்தும்
படகேறியும்
புகைவண்டிக்குள் நுழைந்தும்
பனிமூட்டத்துக்கிடையில் எத்தனை வதை
சாவுக்குக்கூட சாவும் வேண்டியுள்ளது.
கரும்புலிகள்.
கவிதை தோற்றுப்போவது அவர்களிடம்தான்.
அகமும் புறமும் அளவெடுக்க முடியாமலும்
உள்ளுறையும் அமுக்கத்தை அறியமுடியாமலும்
கவிஞன் தோற்பதும் அவர்களிடம்தான்.
வரலாறு திருப்பிகளால்
தொடுத்து அதிர்ந்திருக்கும் வரை
வழியெங்கும் சிரிப்பெறிந்து திரிவர்.
விரிந்துபோகும் புன்னகை.
இறைமையாய் கிடக்கும் நெடுங்காலம்.
தாயென்பது நானல்ல
அது நீயென்பதாய் அவர் தோழமை.
எட்டிப்பிடித்து கைவிரல் நீவி
மௌனமாய் அவர் நுழையும் வெளிக்கு
அகராதி இல்லை
எத்தனை அர்த்தங்கள் விரிக்கலாம் அதில்.
குளிர்நாளில் கணப்பருகிலிருந்ததனை நினைவில்
விரியும் நான் நெருங்குவது புரியும்.
வாயால் ஒரு வார்த்தையுரைத்து
பேசியிருக்கிறோமெனில் குறைந்தது போனவர்.
பொல்லாத அமைதிக் கள்ளரவர்
பேசவே மாட்டார்கள்?
ஓங்கி முகத்திலறைந்துவிட்டு
அழ நினைக்கும் மனம்.
எப்படி முடியும்?
அது சாவுக்கு வழியனுப்பல் என்றாகிவிடுமே.
அறிந்தவர் இடித்துரை
அவர்கள் நடப்பர் திரும்பியும் பாராமல்.
இப்படி இருந்துபோக
எப்படி முடிகிறது அவர்களால்?
விளக்கில் தொட்டாலே துடிக்கும் மெல்லியருக்குள்
வெடியாய் சிதறுவோர் விளைவது எப்படி?
சாவின் - இறப்புக்கே
இறுதி கொண்டாடும் இளமனத்தில்
அவர்களின் தோற்றுவாய் சூத்திரம் என்ன?
ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கிறது
அவர் உயிர்மையம்.
தூய விழிகளுக்கு மட்டுமே
நெருப்பாற்றின் உற்பவமும், கழிமுகமும் தெரியும்.
அஞ்ஞானக் கண்கள் அறியக்கூடியதல்ல
விஸ்வரூபத்தின் அடியும் முடியும்.
போத்தலில் அடைக்கமுடியுமா
பேராற்றின் பிரவாகத்தை?
புசு புசு மயிர் விளைந்த பூனைக்குட்டிகளை
மடி விளையாட விட்டு
விடை கொள்ளும் ஒவ்வொரு நடையும்
'கரும்புலிகள்
பலவீனமான இனமொன்றின் பலம்'
தலைவன் சொன்னதே சரி.
அவர்களை வரையத்தொடங்கியது நிறை.
ஆயினும் தூரிகை தோற்கும் பேறதெல்லாம்
ஓவியன் வெற்றியடைகிறான்.
கரும்புலிகளுக்கு மட்டுமே இந்தச் சமன்பாடு.
இன்னும் தொடரும் அவர்கள் பயணம்
தேசம் ஒளிகொண்டு இலங்கும்வரை.
பிரிவதும் கலங்குவதுமாய் போகுமோ காலம்.
வாஞ்சையின் வித்திதிலும் குழந்தைகளை
வரைவது எங்களால்?
தோற்றுப்போவதே ஓவியப்பெருமை.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புதுவை இரத்தினதுரை



கரியவேங்கையொருவன்
தன் தாய் தந்தையருக்கு
அனுப்பிய முடங்கல்

# விடுதலைப் பெருவிருட்சத்தின் பெருவிழுதொன்று வேருக்கு எழுதிய மடல்

28.03.1996

அன்புள்ள அம்மா, அப்பாவிற்கு...

உங்கள் மகன் இறுதி நேரத்தில் எழுதிக்கொள்வது.
இக்கடிதம் வாசிக்கும்போது உங்கள் மகன் கரும்புலி என்ற பெயருடன் மாவீரனாகியிருப்பான். அம்மா, ஏற்கனவே ஒரு பிள்ளையை போராட்டத்தில் கொடுத்துவிட்டாய். நானும் இல்லை என்றால் உன்மனம் இதைத்தாங்காது என்பதை நானறிவேன்.

ஆனாலும் என் தாய் பாசத்தைவிட தாய்நாட்டுப்பாசம் என்னுள் மேலோங்கி விட்டது. ஆகவேதான் நான் கரும்புலியாகச் செல்கிறேன். இதை உங்கள் மனம் தாங்காது என்பதை அறிவேன். ஆனாலும் தாங்கிக்கொள். போராட்டத்தில் ஊறிய உங்களுக்கு இது புதிதல்ல.

நான் இயக்கத்தில் இணைந்ததிலிருந்தே என் மனதில் உருவான ஓர் உணர்வு. சிறுதென்றலாக உருவான இவ்வுணர்வு படிப்படியாக வளர்ச்சி பெற்று புயலாக மாறிவிட்டது. இதற்குக் காரணம் கடலிலே கடற்படையினரின் வெறியாட்டம். தரையில் எங்கும் இராணுவத்தின் கொடூரமான கொலைச்செயல் இவையே என் மனதை மிகவும் பாதித்துவிட்டது. ஆகவே இதற்கெல்லாம் பதிலடி கொடுக்கவே நான் கரும்புலியாகச் செல்கின்றேன்.

என்னுடைய வீரச்சாவு நிகழ்வுகள் பிரச்சினை இல்லாவிட்டால் எமது ஊரில்தான் செய்ய வேண்டும். வீட்டிற்கு வருகின்ற போராளிகளை மிகவும் அன்பாக உபசரிக்கவும். அவர்களைத் தூக்கி எறிந்துவிடாதே. என் முகத்தை அந்தப்போராளிகளின் முகத்தில் பார்த்துக்கொள். மற்றும் அக்காவிடம் கவலையடைய வேண்டாம் என்று சொல். அண்ணாவை வெளிநாட்டு வாழ்க்கை வாழ்ந்தது போதுமென்று சொல்லி உன்னோடு இருக்கச்சொல். அவரின் மணவாழ்வை நான் மேலிருந்து சக மாவீரர் தோழர்களுடன் ஆசீர்வதிப்பேன். வேறுகுறிப்பிடும்படி இல்லை.

நன்றி

இப்படிக்கு
என்றும் பாசமிகு உன் மகன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கரும்புலிகள்

சீட்டடிக்கும் கடுமையும் பட்டு நடக்கும் கரும்புலியின்
பாதம் பட்ட மண்ணைத் தொட்டு சத்தியத்தோடு
விடை பெற்றுச் சென்ற உயிர்க்கொடைகள்
வெறும் கனவுகள்! அல்ல

நெருப்புக்கு மட்டும் புரியும் இவர்கள் பற்றி
தம்மை ஆடை தரித்து நடக்க வேங்கைகள்
இவர்கள் வேறு


பஞ்சு போன்ற மனம் படைத்தவர்கள்
கந்தகம் சுமந்து கரும்புலியானவர்கள்
மானிடனைப் போற்ற நெஞ்சினைக் கொண்டவர்கள்
பாசறை தகர்க்க பிறந்தவர்கள் இவர்கள்
யாருக்கும் தெரியாத கண்மணிகள்
பயத்தோடு போராடும் புனிதர்கள் இவர்கள்
கறுப்பினை கவசமிட்டவர்கள் - அதனுள்
தமிழின் மதிப்பை காத்தவர்கள்
அழுதால் கேட்காத தூரத்தில்
அங்கம் சிதைந்து ஆகுதியானவர்கள்
கடலுக்கு கரையிலும் உயிர்ப்பில்
காவலர்கள் இவர்கள்

எங்களைச் சமையாரிலும் தெரியும்
இவர் முகங்கள்
எங்கு நோக்கிலும் வீர புருசர்கள்
நினைவுகள் தெரியும்
வாசலிடை வந்து வீசும் தென்றலிலும்
உம் இறுதி மூச்சு வீர மேகம்

சௌ மாதவன்/கிள்ளி
இம்ரான் பாண்டியன்
படையணி



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# மேஜர் இன்பநிலாவின் குறிப்பேட்டிலிருந்து...

'இது எங்கள் மண் பரிசுத்தமானது,
இதிலே பிறந்தேன் இதிலே கிடந்தேன்,
இதிலே வளர்ந்தேன் இதிலே இறப்பேன்,
மானத்தை விற்காமல் மரியாதை இல்லாமல்
மானம் சொர்க்கம், அதை இழப்பது நரகம்.

மலர் மண்ணிலிருந்து தன் இச்சைப்படி முளைக்கிறது,
சுதந்திரமே ஒரு மலர்
அது பஞ்சணையில் முளைப்பதும் இல்லை,
மலர்வதும் இல்லை....

மாவீரர்களின் மனத்திலிருந்து,
அவர்களின் தியாகத்தால் மலர்கின்றது,
மண் பஞ்சணை மானம் இலட்சியம்'





## 'வேவின் விரைவும் செய்திறனுமே இலக்கின் வெற்றி'

'நீண்ட கடலும் நீண்ட வானும்
நெடிய மூச்சுடன் கரையை தொட்டிடும்....... அலையும்
எல்லைப் பார் என எழுந்து நிற்கும் பனையும்
காற்றோடு கலந்து விட்ட காவலரின் கதை கூறும்.
விண் முட்டு கட்டிடமும் வியப்பாய்ச் சிரித்து நிற்கும்
என் தேசத்தின் செய்தியினை இன்றே பரவவிடும் காற்றலையும்
இளையவரின் இலட்சியத்தை இதமாய் எடுத்துரைக்கும்.
தரைத்தளமும் கடற்கலமும் வான்கலமும்
வெடிப்பதிர்வு வேகத்தில் சிதைந்து விட்ட
செய்தியினை விரைவாக விபரித்துரைக்கும்
அதிகாலை நிசப்தமும் அந்திவானச் செழுமையும்.
விடியலின் புலர்வை விரைவாக ஏற்றி நிற்பேன்
வான்கலமானால் எழும்பி உதைத்திடுவேன்
தரைத்தளமானால் வேவு பார்த்தழித்திடுவேன்
கடற்கலமானால் கரும்புலியாய் தகர்த்திடுவேன்'.

கடற்புலி மேஜர் இன்பநிலா
மயில்வாகனம் கன்னிகாராணி
(17.07.1974 - 11.01.2001)
மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு.



## சேரனின் குறிப்பேட்டிலிருந்து....

- நான்கு புறமும் இராணுவமிருப்பதால் நான்கு சுவருக்குள்ளிருந்து வேலைசெய்கின்றோம். என்றோ ஒரு நாள் நான்கு சுவருக்குள் இராணுவம் போகும்போது நாலாபுறமும் சுதந்திரமாகத் திரிவோம்.

- விடுதலைப் போரின் வரலாற்றில் எனக்கு ஒரு பக்கமிருந்தால் எனக்கு அடைக்கலம் தந்த மக்களிற்கு ஒவ்வொரு வரியிருக்கும்.

- ஒரு விடுதலைப் போராளி மக்களை ஆழமாக நேசிப்பதாற்தான் மக்கள் அவர்களிற்கு அடைக்கலம் கொடுக்கிறார்கள்.


- ஒரு விடுதலைப் போராளி நேசிப்பதெல்லாம் மண், மக்கள், தாய்நாடு.

- நான் என்றோ ஒருநாள் எதிரியின் குண்டுக்கு இலக்காகும்போது எனது இறுதி மூச்சு இருக்கும்வரைக்கும் எனது தலைமை அடைக்கலம் தந்த மக்கள் தாய்நாட்டின் விடிவு இவைகளைப் பூஜித்துவிட்டுத்தான் வீரச்சாவடைவேன்.

மேஜர். சேரன் (19.03.1977 - 19.05.2000)
நல்லையா - முகுந்தன்
வேலணை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# கரும்புலி மேஜர் ஆந்திராவின் நாட்குறிப்பிலிருந்து.



## இருளகற்றி ஒளி கொடுத்தவரே!

உங்கள் உடலில் வெடிசுமந்தீர்!
இனத்தின் விடுதலைக்கு
உம்முயிர் கொடுத்தீர்!
வீசிடும் காற்றும்
விரைந்திடும் வேங்கையை
விழியுடன் விரைந்து விடை கொடுத்து
அனுப்பிடும்
நீங்கள் விடுதலைக்காய்
உயிர் கொடுத்த போது
காற்றே சோகமாய்
விம்முகின்றது.
கண நேரத்தில் கரும்புகையுடன்
நீர் அதிரும்போது
உலகே அதிர்ந்து நிற்கிறதே.
செல்லும் திசையை எதிர்பார்த்து
தினமும் ஏங்கிடுவீரே!
விடியும் பொழுதினிலே அதிரும் - உம்
பூமுகம் பார்ப்போமா
எங்கள் மண்ணின் பகைவாழும்
குகை தேடிப் புகுவீர்
மழைமேகம் இருள் சூழ்ந்து
பூமியைச் செழிக்க வைக்கும்.
எம் நெஞ்சை ஏங்கவிட்டு - நீர்
சிரித்துச் சென்று எம்மினம்
சூழ்ந்த பகை இருளகற்றி
ஒளி கொடுத்தீர்!
கிழக்கு வானம் வெளுக்கும் நேரம்
வானத்து தாரகையானீர்.

## பூமிப் பற்று

பூமி பூக்கும் வரையில் எங்கள்
உறவுகள் கலங்கும்
தாயின் மூச்சு வாழ
இவர் பயணங்கள் தொடரும்
ஒரு நாள் விடியுமே இரு நாள் தொடருமே
அது வரைக்கும் இங்கு உறக்கமில்லை.

வானத்து நிலவு அறியாத கோலம்
வேதனைத் தீயில் எரிகின்ற நேரம்
வெற்றிவாகை சூடவே இங்கு
அனுப்பும் தாயிவள் உச்சி மேல்
ரத்தப் பொட்டுமிட்டு போகும் காலமே!

ஊருக்கும் இவள் கொண்ட பிரியாத பாசம்
தேசத்தை இவள் காக்கத் தொடக்கின்ற நேரம்
இந்தப் புவி சாட்சியே
அன்னை …
அந்தப் பொன்னை … முத்தமிட்டு இங்கு
வாழ வேண்டும்!

Tamileelam Archive

# தமிழீழத்தின் விருட்சங்கள்

அன்னை மண்மீட்கவென அரும்பணியாற்றி
அந்நியனின் ஆக்கிரமிப்பிற்கு அடிபணியாது
தலைநிமிர்ந்து போராடும் எம் அண்ணன்
சேனையில் தளராத துணிவுடன் பல களம்
கண்டு எம் மண்ணில் மடிந்திட்ட
என் சோதரரே
சிறுத்தை அணியில் சினத்துடன்
சீற்றம் கொண்டு பகைவனின்
பாசறைக்குள் சீறிப் பாய்ந்த வேங்கையே
இருளோடு இருளாய் இரைதேடும்
புலியாய் இனத்தின் அடிமை
இருளை அகற்றவென வீறுடன்
விரைந்திட்ட உறங்காத கண்மணிகளே

மண்ணின் விடிவிற்காய் மக்களின் சுதந்திரத்திற்காய்
சாவுக்கு அஞ்சாது பகைவனுடன்
செங்களமாடிய கரிகாலனின்
கண்மணிகளே மரணம் ஒரு தடவை என்பது திண்ணம்
இறப்புக்குப் பயந்து இனத்தை அழித்திட முடியுமா?
என்றெண்ணி எதிரியின் அரண்களுக்குள்
ஊடுருவி அவனுடன் நேருக்கு நேர் நின்று
சமரிட்டு எம்மண்ணுக்காய் நாளை மலரும்
தமிழீழத்தின் விருட்சங்களாய் உயிரைத்
தமிழிற்காகவும் உடலை மண்ணிற்காகவும்
அர்ப்பணித்த மாவீரரே உங்கள் நினைவினை
நெஞ்சில் சுமந்து ஒரு சில நிமிடம்

**கரும்புலி மேஜர் சதா**





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மூலத் தகர்ப்பு

ஒளியைத் தடுக்கும் கிளையின் செயலால்
கிளையைத் தறித்திட நாங்கள் 'இங்கே'
தறிக்கத் தறிக்கத் தழைக்கும் மரத்தின்
வேரைச் சரித்திட நீயோ 'அங்கே'
வேர்கள் அங்கே அறுந்து வீழ்ந்தன.
கிளைகள் 'இங்கே' தடம் புரண்டன.
நீ சாவிலும் புரிந்தது சாதனை என்பது - எம்
காதினில் விழுந்தது வேதனை நடுவிலும்.

■ நண்பர்கள்



# "விடுதலைக்கா சிறைச்சாலை வந்தேன்?"

[எதிரிக்கு நடுவில் நின்று
காவியமாகிப்
போன வேங்கைபொருவனின்
நினைவாக]

சில
ஆண்டுகளுக்கு முன்பு,
வெலிக்கடை
சிறைச்சாலையில்
இவனைப் பார்த்து
"உனக்கு விடுதலை
போ!" என்றார்கள்.

"என்னுடைய
விடுதலைக்கா
சிறைச்சாலை வந்தேன்?"
என்றான் இவன்.

இனி
அவன் வரமாட்டான்.
இருந்தும்,
அவனைத் தேடுகின்றோம்.

எதிரியின்
இரண்டு கண்களுக்கும்
நடுவில்
அவன் நெற்றியில்
கூடாரமடித்தவன், இவன்.

"உயிரோடோ
பிணமாகவோ
அவன் தேவை"
என்றார்
பகைவர்.

எங்களுக்கும்
அப்படித்தான்.

நண்பனே!

உனது உருவ வாழ்க்கை
மறைந்துவிட்டது.

சயனைட் உன்னை
வரலாறாக்கிவிட்டது.

இனி உன் சிரிப்பை - எல்லோரையும்
திருப்திப்படுத்தி ஒத்துப்போகின்ற
உன் விரிந்த பண்பை- சாவுக்குப்
பக்கத்தில் நின்று மண்ணுக்காகப்
பணி செய்ய வேண்டும், என்ற உன்
இலட்சிய வேட்கையை -
குழப்பமில்லாத உன்
அரசியற்தெளிவை நேர்த்தியான உன்
வேலைத்திறனை என்றும்
எம்நெஞ்சங்கள் மறவா.

உனது சாவு எங்கள் மண்ணின்
ஒவ்வொரு உயிரையும்
அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

பகைவர்களுக்கு முன்னால் நீ
மலையாக நிமிர்ந் துவங்கியபோது,
உலகத்தின் மூலைகளெங்கும்
தமிழரைப் பற்றியே பேச்சு

உன் அம்மா உன்னைத் தேடுகிறாள்.

நீ எங்கே போகின்றாய் என்பது
அவளுக்குத் தெரியும். ஏன்
போகின்றாய் என்பதும் தெரியும்.
ஆனால் நீ புறப்பட்டுப் போகின்ற
ஒவ்வொருதடவையும் உன்னை
வழியனுப்பி வைத்தாளே தவிர அவள்
வழிமறித்து நிறுத்தவில்லை.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இன்று அவள் உன்னைத் தேடுகின்றாள்.

உனது முகத்தை மனத்திரையில்
மீட்டுப்பார்க்கத் துடிக்கின்றாள்.

15 வருடங்களுக்கு முன்னமே தன் இருகண்
பார்வைகளையும் இழந்த உன் தாய் சுவரிலே
தொங்குகின்ற உன்படம் இருக்கும்
திசைநோக்கி அடிக்கடி இமைகளை வெட்டி
வெட்டிப் பார்க்கின்றாள்.

ஒரு நப்பாசைதான். தற்செயலாகவேனும்
பார்வை வந்து உனது 11வது வயது
நிழற்படத்தையாவது கண்குளிரப்
பார்க்கமுடியாதா என ஏங்குகிறாள்.

கட்டியணைத்து முத்தமிட்டு அழுவதற்கு உன்
உடல் கூட அவளுக்குக் கிடைக்கவில்லை.

நாளேட்டில் - நீ இறந்தபடி கிடக்கும் படம்
ஒன்றை கைகளால் தடவிப்பார்த்து
அழுகின்றாள்.

உனது பிரிவு எங்களது மனங்களில் துயரை
நிறைத்துவிட்டது.

உன் அம்மா படும் துன்பமும்
அங்கலாய்ப்புக்களும் எங்கள் மனங்களில்
அதைவிடத் துயரை அள்ளி இறைக்கின்றது.

உனது உடல் எமது மண்ணில்
கலக்கவில்லைதான்.

ஆனால் உனது உயிரின் உணர்வு எமது
மக்களிடம் கலந்துவிட்டது.

அது என்றென்றும் வரலாறாக மணம்
வீசிக்கொண்டேயிருக்கும்.


■ உடன்பிறவா உடன்பிறப்பு

# தாகம்



ஒரு சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு,

இனிய சிரிப்புடன்- எளிமையாகத் திரியும் அவனை நான்
அறிவேன்.
அவன் கொடிய சிறையினில்,
சித்திரவதைகளுக்கு நடுவே வாடியதையும் வாழ்ந்ததையும் கூட
நான் அறிந்திருந்தேன். சிறைக்கதவைத் தாண்டி, வெளியே
வந்ததும், அமைதியாக, ஆனால் நெஞ்சில் தாகத்துடன்
அலைந்து திரிந்ததும், எனக்குத் தெரிந்ததுதான்.



ஆனால் எதிரியின் தலைநகர் அதிர்ந்தபோது
அதற்குக் காரணம்....
அதற்குக் காரணங்களில்.... அவனும் ஒருவனா?
இதை நான் இன்னும் அறியவே இல்லை.

சிரித்தபடியே,
தனது இலட்சியத்தை, இனத்தை
தன் மானத்தைக் காக்க
அவன் வீரச்சாவைத் தேடியதை நான் அறிந்து கொண்டேன்.



சடலமாய்,

அவனுக்கு ஒரு வரலாற்றைத் தந்து விட்டதையும், அவனது
வாழ்வுக்கு, உன்னதமான அர்த்தத்தை தந்து சென்றதையும்
நான் கண்டுகொண்டேன்.

அதன் பின்பு

அவனின் நெஞ்சில் எழுந்த தீயும், தணியாது தகித்த தாகமும்
தணிந்திருக்குமா என்பதை நான் அறியேன்.




ஆனால்,

அந்தத் தீயும், அந்தத் தாகமும் பலரில் பற்றிப் படர்ந்து விட்டதை
நான் அறிவேன். இனி என்றும் இந்த மண் மௌனமாகவே
அவனை நினைக்கும்.

தமிழ் ஆவணக்காப்பகம்

■ [illegible]



## எனது ஆசை

பத்து மாதம் சுமந்து பெற்று
பாலுடன் வீரத்தையுமா
ஊட்டினாய் அம்மா
இந்த மண்ணின் விடுதலையை
என்றும் தேவை அம்மா

பந்த பாசம் துறந்து – நான்
நாட்டில் பற்று வைத்தேன் அம்மா
கவலைப் பட்டு நீங்கள் கண்ணீர்
சிந்த வேண்டாம் அம்மா

என் புகழுடல் வந்திடும்
போதிலும் துவண்டிடாதே அம்மா
என் போன்ற போராளிகளை
நேசித்திடு அம்மா

இம் மண்ணின் மாவீரர்!
கால்களில் பூச்சொரிந்து...
வணங்கிடுங்கள் அம்மா
மலரப்போகும் தமிழீழத்தில்
துள்ளி வருவேனம்மா...
அள்ளி அணைத்து என்னை
சிரித்து மகிழ்ந்திடு அம்மா....



## புலம்பெயர்ந்து வாழும் என் இனிய உறவுகளுக்கு!

காலத்தின் தேவையை
கண்டும் நீங்கள்
ஒதுங்கி விலகாதீர்
நில்லுங்கள்
ஒரு கணம்.....

சிந்தியுங்கள்
இருட்டதில் தெரியுமாம்
வெளிச்சத்தின் அருமை
ஓ.........

கவிதைகள்
போராளி சுமித்திரா
நவம் அறிவுக்கூடம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காலங்கள் ஓடத்தான்
தெரியும் எம் அருமையும்
காலம் மாறும்......
அன்றும் எம் கல்லறைகள் பேசும்
ஏன் ..... காலத்தின் குரலை
செவிமடுக்க மறந்தீர் என்று......

எமது உறவுகளின் கரம்
உயர்ந்தால் எம் தலைவன்
கரம் பலமாகும்
தலைவன் கரம் பலமானால்
நிச்சயம் தமிழீழம் மலரும்.

மாறாத புன்னகையுடன் மலர்ந்த
பூக்களே
ஆறாத நெஞ்சின் காயங்கள் என்று
பகைக்குரைத்து வாழ்ந்தீர்கள்
குன்றா வீரக் குழந்தைகளே

உங்கள் நினைவுக்கு பூச்சொரிந்து
கல்லறைக்கு வந்து கண்ணீர்
சொரிகிறோம்
வரலாறு ஒன்று எழுதி வாழ்பவர்களே
என்றும் உங்கள் நினைவுடன்
இருப்போம்
நிம்மதியாக விழி மூடித்தூங்குங்கள்.



## என் கண்மணிகள்

ஒரு செடியில் பூத்த உறவுகளே
முல்லை மண்ணில் இருந்து
புறப்பட்ட புயல்களே
உங்கள் நினைவுக்கு பூச்சொரிந்து
அஞ்சலிக்கிறோம்
விடிவானம் கதிராக விரிந்து...
இடியாகப் பகைமீது
முழுங்கினீர்கள்.

ஒரு தாய் வயிற்றில் விதையானீர்கள்
எட்டும் வரை எட்டிக்கிட்டும்
விடுதலையென
வீரமுடன் எழுந்தீர்கள் அன்னை
மடியில்
விலங்கொடிக்க அணிவகுத்தீர்கள்

## கந்தகப் பூக்கள்

கடலலையே கடலலையே
கரும்புலிகள் புகழ்பாடு
வாழையடி வாழையாக
வாழ்வுள்ள சந்ததிகள்
வெடிகுண்டாய் வெடித்த
வீரப் புகழ்பாடு

கடற்கலங்கள் சிதற வைத்து
கயவர் படைகளையும் சிதைத்து
காற்றோடு கலந்து விட்ட
கந்தகப் பூக்கள் புகழ்பாடு

எதிரி எம்மை சிதைத்து விட
எத்தனித்து கலைத்து விட்டான்
எதிரிக்கு குழிபறித்து
எம் உறவுகளைக் காக்கின்றார்கள்

தமிழீழம் மலர்ந்து விட
தரணியெங்கும் மணம் வீச
தங்களையே தந்து விட்டு
தாரகையாய் மின்னுகின்றார்கள்


கடலலையே கடலலையே
கரும்புலிகள் புகழ்பாடு
கடலலையே கடலலையே
கரும்புலிகள் புகழ்பாடு.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## மனமே

நீ எங்கே சென்றாய்?
இடத்தை சொல்வாயா?
ஏன் தயக்கம்?
ஏன் ஏக்கம்-ஓ

தாய் தமிழை நேசிக்கவா சென்றாய்
சந்தோசம் நான் எதிர்பார்த்ததை - உன்
வரலாறு இங்கு எழுதப்படும்.



ஓவியம்: போராளி தமிழ்மணி

## ஏங்காதே

நீ எவ்வளவு மௌனமானவள் - இதை
யார் அறிந்து கொண்டார்- இப்போ உனக்கு
இனிமையாய் ஓர் வார்த்தை இயம்பிடவா?
இங்கு எவரும் இல்லை - நீ ஏங்காதே
நீ - தமிழீழச் சொத்து அல்லவா- நாம்
தமிழ் மண்ணின் சொந்தங்கள் என்பதை
மறந்துவிடாதே.

## கூப்பிடாதே

அரசியே உன் மனதிற்கு
என்னிடம் பதில் இல்லை
ஏன் தெரியுமா?
உன் மனதில் ஞாபகம் வருவதில்லை
அன்னைத்தமிழ்
அனைத்தையும் பெற்று விடு
எம் இனம் வாழ வேண்டும்
நீதானே தேசம் முழுக்கச் சொன்னாய்
இங்கு வந்து என்னைப் பார்த்தாயா? - இல்லையே
நம்மவர் பணிமுடிய வருவேன் - அதுவரை
என்னைக் கூப்பிடாதே.

## கொடையாளர்களே

தங்கத்தின் மேலான அங்கத்தையே
தரணிக்கு தந்த கொடையாளர்களே
உங்கள் பணிக்கு பாரில் நிகருண்டோ
எங்கள் தாய்மண்ணின் விழுதுகளாய்
உம்மை வாழ்த்துகிறோம்

எந்த மலருக்கும் இதழ்களே அங்கம்
ஈழத்தாய் பெருமைக்கு நீங்களே சொந்தம்
வந்தது தாய்க் கொரு பங்கம் - என்றதும்
உம் அங்கம் அழிக்க முன் வந்தவர் - நீரே

மானுடப் பிறப்பினில் மகத்துவம்
உண்டெனில் மான
மறவரும் நீரன்றோ-எம்
உணர்வது சோர்ந்திடாது - ஈழ
விடுதலையே எமக்கு விடிவு
உயிரினம் யாவிலும் - மேலாக
உறவான பிறவியன்றோ.

## ஓ மறவர்களே

தலைவன் வழியில்
தளராது தடம் பதித்தீர்கள்
தியாகத்தின் இருப்பிடமாய்
தியாக வேள்வியில் இருந்தீர்கள்

உறவு சொந்தங்கள் மறந்து
மழை வெயில் பாராது - ஊண்
உறக்கம் நீக்கி உற்சாகமாய் போராடினீர்கள்
உத்தமர்களே
கண்திறந்து பாருங்கள்
கண்ணீரோடு நாங்கள்.
உறுதியில் புதைந்த வீரர்களே
இறுதிவரை போர் புரிந்த மறவர்களே
தலைவன் வளர்த்த தமிழ்ழ விழுதுகளே
தாயக மண்ணிற்காய் உயிர் ஈர்ந்த
காவியங்களே
உங்களின் அழியாத வீரக் குருதியாம்
மாபெரும் வரலாற்றை எழுதினீர்களே
வீரமலர் தூவி கண்ணீரால் மாலை
சூடுகிறோம்
எப்பவுமே உங்கள் கல்லறையில்
எக்காளத் தொனி இசைத்துக் கொண்டே
இசைமலர் தூவ உறுதி செலுத்துகிறோம்.
ஒரு முறை உங்கள் பூ முகம்
காட்டுங்கள் காட்டுங்கள்.

கவிதைகள்
இசைநிலா [கருங்குழலி]
நவம் அறிவுக்கூடப் போராளி

## கல்லறைகளே

காற்றோடு காற்றாகி
கடலோடு கடலாகி
அலையோடு அலையாகி
நிழலோடு நிழலாகி
அழியாது கலந்து விட்ட
அன்பர்களே புனிதமானவர்களே

கரிகாலன் நாமத்தை
பெற்றிட்ட மறவர்களே - அந்த
நாமத்தை பெற்றிட என்தவம் செய்தனையோ
ஒரு முறை எனக்கும் கூறுவாயா

விடுதலைப் புலி படையணிதனிலே
ஈழம் மீட்கப் போராடினீர்களே
இறுதி வரை ஈழமண்ணிற்காய்
இனியவர்களே உங்களை இழந்தீர்களே
இன்று எமை கலங்க வைத்தது ஏனையா?
வாய் திறந்து ஓர் வார்த்தை பேசிட
வாசலில் காற்றாக மாட்டாயா?
விடியலின் காலையில் வந்து பூபாளம் பாடாயா?
வருவாயா எம்முன்னால்.





மருத்துவ மாவீரர்கள் நினைவாக...

# ஓ யார் இவர்கள்!

எத்தகைய புனிதர்கள்
இவர்கள்தான் எம் இனத்தின் வீரர்கள்
அன்னையைப் போல் அரவணைப்பில்
தந்தையைப் போல் அறிவுரைப்பில்
நண்பனைப் போல் பாசம் வைக்கையில்
உள்ளத்தில் குழந்தையாய் இருப்பவர்கள்
எண்ணத்தில் இனிமையாக இருப்பவர்கள்
தலைவன் வழி சென்றவர்கள்
தமிழீழத்தாய் தலை நிமிர்த்தியவர்கள்
வெடியோசை கேட்குமுன்பு போர்க்களத்தில்
தம் உயிர் கொடுத்து எம் உயிர் காத்தவர்கள்
எம் இனத்தின் விடிவெள்ளிகள்
எங்குதான் இவர்கள் இருந்தாலும்
எம்மை விட்டுச் செல்லவில்லை
விழுப்புண் அடைந்தோரின் வேதனையை
தான் சுமந்து விடிகாலை வேளைவரை
துயில் எழுந்து தன் பணிசெய்து
நேரம் தவறாமல் மருந்து கொடுத்து
நேர்த்தியாய் எம்மை எழச்செய்தவர்கள்
எங்கே சென்றார்கள்
ஓ இவர்களைப் போல் மீண்டும்
கிடைப்பர்களா இத்தகைய புனிதர்கள்
தேசத்தின் விடிவுக்காய் தம் உயிரே தந்தவர்கள்
அன்னையின் அணியில் சேர்ந்து
தம் கடமை செய்தவர்கள்.
உலகம் போற்றும் மாவீரர்கள்
உன்னத இலட்சியத்தின் படிக்கற்கள்
தோளிலே மருத்துவப் பை சுமந்து
கூவிவரும் எறிகணை வீச்சில் தவழ்ந்து
தோழர்களின் உடல்களை சுமந்து
எங்கெல்லாம் எடுத்துச் சென்று
எம் உயிர் காத்த மறப்புதல்வர்களே
எங்கே சென்று விட்டீர்கள்
விழுப்புண் அடைந்த வீரர்களுக்கு ஊசி
போடும் போது என்ன தான் சொன்னாலும்
ஏற்றுக்கொள்ளும் தன்மை, தடவி தட்டி
தன்னைப் போல பார்க்கும் ஓர் அன்னை

எங்கே இவர்கள் போனார்கள்
தோளிலே மருந்துப்பை சுமக்க
தோளிரண்டும் புண்ணாக்கி
கடுமணலில் கால்கள் புரண்டு
சுட்டுத் துவண்ட உங்கள் கால்கள்
சளைக்காத உம் உள்ளம்
தளராத மனம் உங்களது
எங்கே இவர்கள் சென்றுவிட்டார்கள்
எம் புதல்வர்கள் எமக்கு கிடைக்கமாட்டாரா?
விடிகாலை வேளை வரை வெடி கேட்கும்
இடமெல்லாம் உறங்கிடாத வீரர்கள்
தாயகக் கனவுடன் தம்மையே
இணைத்திட்ட வீரர்கள் எங்கே
இவர்கள் எங்கே சென்றுவிட்டார்கள்
மறப்புதல்வர்களே மாவீரர்களே
உங்கள் கனவை நனவாக்குவோம். ■ வ. சிவதரன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# நான் பெற்ற மகனே

மாவீரன் இளந்திரையன்


கருவென அன்றோர் தாயின்
கருவறை இருந்து வந்தாய்!
பருகிடும் இன்பம் வாங்கப்
பற்றுகள் துறந்து போனாய்!
அருமைகள் மீட்டு நின்றுன்
அன்னையாம் மண்ணில் வீழ்ந்தாய்!
பெருமையோ நெஞ்சில் பொங்கப்
பிள்ளையுன் [illegible]

என்வழி கொண்டா யில்லை!
என்னுள்ளம் தன்னில் நீயும்
எப்படிச் சூல்கொண் டாயோ!
இன்றுநீ இல்லை யென்று
இங்குதான் சொல்லுகின்றார்!
சென்றது நீயா? ஐயோ!
செத்தது சாவே உண்மை!

களத்தினைக் கொண்டதாலே
கண்மணி ராசா உன்னை
வளர்த்தாய் ஒன்றா: கண்ணீர்
வடித்திடும் நானும் தாயே!
வளந்தரும் விதையாய் ஆனாய்
வையமே வாழ்த்தும்: எனினும்
உளமது ஆற உடனே
உண்மையில் மகனாய் வாடா!

தமிழ் ஆவணக் காப்பகம் ... Archive

# நினைவுப் பகிர்வு...



விடுதலைப்புலிகளின்
அனைத்துலக நிதிப்பொறுப்பாளர்



**லெப்.கேணல் நாதன்**
பேரின்பநாதன் கந்தையா
அரியாலை.
வீரப்பிறப்பு:10.10.1964
தறுக்கர் அழிப்பில்:
26.10.1996

ஈழமுரசு ஆசிரியர்



**கப்டன் கஜன்**
கஜேந்திரன் கந்தையா
கோண்டாவில்.
வீரப்பிறப்பு: 17.04.1966
தறுக்கர் அழிப்பில்:
26.10.1996



**நாட்டுப்பற்றாளர்
திரு. கணேசையா
விமலேஸ்வரன்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் பணியகத்தில் பதின்நான்கு வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றிய திரு. கணேசையா விமலேஸ்வரன் அவர்கள், 04.01.2004 அன்று விபத்தொன்று காரணமாக சாவடைந்தார்.



தமிழீழ விடுதலைக்காக புலம்பெயர் நாட்டில் நீண்டகாலம் செயலாற்றிய வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் பேர்மனிக்கிளைப் பொறுப்பாளர் மேஜர் சுரேந்தி (சுரேந்திரக்குமார்) அவர்கள் விபத்தொன்றில் 18.10.1991 அன்று சாவடைந்தார்.

அவ்விபத்தில் மேஜர் சுரேந்தியுடன் சாவடைந்த ஏனையோர் பேர்மன் கிளையின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கிருஸ்ணமூர்த்தி(குஞ்சன்), பேர்மன் கிளையின் மாநிலப் பொறுப்பாளர் சௌந்தராஜன்(சௌந்தி) அவரது மனைவி விஜயகுமாரி, மகன் சபீலா ஆகியோர்.

## மேஜர் சுரேந்தி

[நமசிவாயம் சுரேந்திரக்குமார்]
சண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

பிறப்பு :07.06.1966
சாவு: 18.10.1991

தோழர்கள்
பல வேண்டுதல்களின் நிமித்தமாக
உங்கள் முன் கூடி நிற்கிறார்கள்
உயிர் உள்ளதான உங்களின்
கனவுகளைப் போலவே
அவர்கள் கைகளில் ஏந்திய தீபங்கள்
ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது.

விடுதலை வயலில்
உழவின் போதும்
விதைப்பின் போதும்
நீங்கள் பட்ட பாடுகள் பற்றி
ஒரு காவியமே புரளும் அக் கணங்களில்
நாடுகாண் பயணிகளான
உங்கள் வாழ்க்கை
மீள மீள வாசிக்கப்படுகின்றது.

மௌனமாய்
ஒரு கவிதையாய் உறைந்துள்ள இடத்திலும் கூட
விடுதலைக்கான உழைப்பு
பன்முகப்பட்டது எனவும்
பரந்து விரிந்த எல்லை கொண்டதெனவும்
நீங்கள் செயற்படுகையிலும்
ஒளிரும் வண்ணமாய்
பாதைகளைச் செப்பனிடுகையிலும்
நீங்கள் போய்ச் சேர்ந்திருக்கலாம்.

இரங்கற் பாலை முணுமுணுத்த படி
வரும் தோழர்கள் அவரவர்க்கான
தேவைகளின் பொருட்டாய்
உங்களிடம் இருந்து
நிறைவை நிறையவே அள்ளிச் செல்கிறார்கள்.



## நாட்டுப்பற்றாளர்
## சீனியப்பா பத்மநாதன்

தென்னாபிரிக்கா,
தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின்
முன்னாள் பொறுப்பாளர்,

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
பிறந்த திகதி: 21-11-1930
மறைந்த நாள்: [illegible] 2004

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## உலகெங்கும் மாவீரர்நாள் நிகழ்வுகள் 2003

### ஐக்கிய அமெரிக்கா






### பிரித்தானியா





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



அவுஸ்திரேலியா






சுவீடன்





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# உலகெங்கும் மாவீரர்நாள் நிகழ்வுகள் 2003

சவுதி அரேபியா







நோர்வே





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



ஜேர்மனி





பிரான்ஸ்





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சூரியபுதல்வர்கள் 2004

# உலகெங்கும் மாவீரர்நாள் நிகழ்வுகள் 2003

டென்மார்க்






கனடா





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



நெதர்லாந்து





இத்தாலி






தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# உலகெங்கும் மாவீரர்நாள் நிகழ்வுகள் 2003

சுவிற்சலாந்து






தென்னாபிரிக்கா









| | | |
|---|---|---|
| கரும்புலிகள் | ஆண் | 192 |
| கரும்புலிகள் | பெண் | 69 |
| | மொத்தம் | 261 |




| | | |
|---|---|---|
| மாவீரர்கள் | ஆண் | 13995 |
| மாவீரர்கள் | பெண் | 3785 |
| | மொத்தம் | 17780 |

| | | |
|---|---|---|
| எல்லைப்படைவீரர்கள் | ஆண் | 275 |
| எல்லைப்படைவீரர்கள் | பெண் | 05 |
| | மொத்தம் | 280 |

# வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் மொத்த விரிப்பு - 2004

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தமிழீழ மாவீரர் துயிலும் இல்லங்கள்

## யாழ்ப்பாணம்

தென்மராட்சி - கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம்

வடமராட்சி

வலிகாமம் - கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம்

வடமராட்சி - உடுத்துறை

சாட்டி

## வன்னி

ஆலங்குளம் - மல்லாவி

வன்னிவிளாங்குளம் - மல்லாவி

முழங்காவில் - மன்னார்

ஆண்டான்குளம் - மன்னார்

பண்டிவிரிச்சான் - மன்னார்

ஈச்சங்குளம் - வவுனியா

முள்ளியவளை - முல்லைத்தீவு

விசுவமடு - வன்னி

கிளிநொச்சி - வன்னி

மணலாறு - முல்லைத்தீவு

## மட்டக்களப்பு

ஆலங்குளம்

தரவை

## திருமலை - மூதூர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



மாவீரர் துயிலும் இல்லம் - கோப்பாய்



மாவீரர் துயிலும் இல்லம் - கிளிநொச்சி



மாவீரர் துயிலும் இல்லம் - விசுவமடு

"

இந்த மண்ணின் மைந்தர்களைப்
பெற்றெடுத்த பெற்றோர்களே!
உங்கள் குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக
தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள்.
இந்த உத்தமமானவர்களை ஒரு புனித
இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய
நீங்கள் நிச்சயம் பெருமைகொள்ள வேண்டும்.
உங்களது குழந்தைகள் சாகவில்லை
சரித்திரமாகிவிட்டார்கள்.

"

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamil Eelam Archive

# சூரியப் புதல்வர்கள் 2004



ஆதவன் நகைத்தனன் கீழ்த்திசையிலே
ஒளிபுனல் வார்த்துக் கண் சிமிட்டினன்
கூரிருள் அகன்றது.
உதயம் செம்மை வானிலே படர்ந்தது.
வேளையிதென்றே மக்களும் மண்ணில் ஆர்த்துப் பாடினர்
காலம் மெல்ல நகர்ந்தது.
காசினியும் புதுமை கொண்டுமே திகழ்ந்தது.
நாளை நாளை விடுதலை என்றுமே நாதம் பிறந்தது.

நாதம் ஒன்று பிறந்ததும் நாளும் ஓடி
வளர்ந்ததும் மெல்லத் தமிழினி புவியிலை
சிறந்திடும் என்றதும் ஆவி குன்றித் தேய்வதோ?
அவலம் கொண்டுமே உழல்வதோ?
தாவிப்படரும் நெருப்பாயினோம்- தமிழர் நாம்
கூவல் விடுத்துமே குதியில் நேயமாயினோம்
பாதை ஒன்று தெரியுது.
பாதம் நகர்ந்து போகுது.
ஒளிபுனல் நாடியே வீரர் விரையலாயினர்.



TAMIL EELAM

வெளியீடு:

வெளியீட்டுப்பிரிவு,
அனைத்துலகத் தொடர்பகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

